
# பொருளியல் நோக்கு

பெப் - மார்ச்
1983


# வரவு செலவுத்திட்டம் 1983


முதன்மை வேளாண்மைப் பயிர்களின் உற்பத்தி




சென்மதி நிலுவை

ஆண்டுதோறும்




# பொருளாதார குறிகாட்டிகள்

அண்மைய ஆண்டுகளில் பின்பற்றப்பட்ட பொருளாதார அபிவிருத்தி உபாயம் வெற்றியை ஈட்டித்தந்துள்ளது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால், இந்த வெற்றி தன்னுடன் இணைந்த வகையில் சில பிரச்சினைகளையும் எடுத்து வந்துள்ளது. அமைப்பு ரீதியான இந்தப்பிரச்சினைகள் பொருளாதாரத்தின் பிரதான துறைகளுடன் தொடர்பானவையாகும்.

இலங்கையின் சென்மதி நிலுவை நிலைமை தொடர்ந்தும் சீர்குலைந்து வருகிறது. (அதிகரித்துவரும் அபிவிருத்தி தேவைகளின் காரணமாக) இறக்குமதிகளுக்கான கோரிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதன் விளைவாகவும், பிரதான பயிர்களின் ஏற்றுமதிச்சாதனைகள் திருப்தியற்ற நிலையில் இருந்து வருவதன் விளைவாகவும் வர்த்தக மாற்று வீதம் வீழ்ச்சியடைந்து வருவதே இதற்கான பிரதான காரணமாகும். இவற்றின் கூட்டு விளைவாக, 1982-ம் ஆண்டு முடிவுற்றபோது நாட்டின் பொருளாதாரம் கவலையளிக்கும் சில அம்சங்களைக் கொண்டதாய் இருந்தது. முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது இவ்வாண்டில் மொத்த மெய் தேசிய உற்பத்தி வீழ்ச்சி கண்டிருப்பதாக இலங்கை மத்திய வங்கி அறிக்கை தெரிவிக்கிறது. விவசாயத்துறை — குறிப்பாக, நெல், தேயிலை, இறப்பர் போன்ற பிரதான பயிர்களின் — உற்பத்தி 1982-ம் ஆண்டில் எதிர்மறையான வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்திருந்தமையே இதற்கான பிரதான காரணமாகும்.

வர்த்தக மாற்று வீதங்களை இலங்கைக்கு சாதகமற்றதாக்கிய மிகக்கடுமையான ஒரு சர்வதேச சூழ்நிலை இப்பிரச்சினைகளை மேலும் ஆழமாக்கியது. உதாரணமாக, இவ்வாண்டில் இறப்பர், தெங்கு ஆகிய பண்டங்களின் ஏற்றுமதி அளவு அதிகரித்தபோதிலும், சர்வதேச விலை வீழ்ச்சி காரணமாக இதிலிருந்து எந்த அனுகூலமும் கிடைக்கவில்லை. இதேவேளையில் இறக்குமதிச் செலவுகள் தொடர்ந்து அதிகரித்து வந்தன. இவ்வாண்டில் சுத்திகரிக்கப்படாத எண்ணெய் இறக்குமதிகளுக்கான செலவு ரூ. 1000 கோடியாக இருந்தது. இதன் காரணமாக நாட்டின் வர்த்தக இடைவெளி தொடர்ந்தும் விரிவடைந்து சென்மதி நிலுவை நிலைமை சீர்குலைந்து சென்றது. எனவே, மூலவள இடைவெளி விரிவடைந்து செல்ல நாடு மேலும் மேலும் வெளிநாட்டு உதவிகளை நாடவேண்டியிருந்தது.

அபிவிருத்திப் போக்கையும், பொருளாதாரத்தின் முன்னேக்கிய நகர்வையும் அனுமதிக்கும்போது தேசிய வரவு செலவில் பிரச்சினைகள் எதிர்ப்படுவது தவிர்க்க முடியாததாகும். வருமானங்களை மேலும் அதிகரிக்கும் அதே வேளையில் செலவினை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பதே இன்றுள்ள பிரதான பிரச்சினையாகும். உற்பத்தி, சென்மதி நிலுவை, வெளிநாட்டு மூலவளங்கள் போன்ற இன்னோரன்ன அம்சங்கள் இப்பிரச்சினையுடன் பின்னிப் பிணைந்துள்ளன.

# பொருளியல் நோக்கு

மலர் 8 இதழ் 11/12 பெப்./மார்ச் 1983



மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
இலங்கை


## நிரல்கள்


நிகழ்ச்சிக்குறிப்பேடு 2 பெப்ரவரி 1983

விஞ்ஞானம் 16 மூன்றும் உலகில் பீடை கொல்லிகள்

வங்கிப்படுத்தலும் நிதியும் 17 வங்கித்துறையில் வைப்புக்களின் போக்குகள்


## விசேஷ அறிக்கை


3 வரவு செலவுத்திட்டம் 1983

வை. கருணசிங்க 5 1983ம் வருட வரவு செலவுத் திட்டம் பற்றிய ஒரு பகுப்பாய்வு


## சிறப்புக் கட்டுரைகள்


நந்ததாஸ கோதாகொடை 15 இலங்கையில் பீடை கொல்லிகளால் எற்படும் தீங்குகள்.

ஏ. எஸ். விதானபத்திரன 19 பீடைக் கட்டுப்பாடு குறித்த பண்பாட்டு எந்திரவியல் முறைகள்.

ஆர். ஏ. அரம்பேவெல 24 அரேபிய வளைகுடா நாடுகளுடனை இலங்கையின் வர்த்தகம்.

இஸ்மாயில் ஷாப்ரி அப்துல்லா 29 நெருக்கடியில் சிக்கியுள்ள மூன்றுவது உலகம்


அச்சுப்பதிவில் நிகழ்ந்து வரும் தாமதங்களை தவிர்க்கும் வகையில் இம்முறை இரு இதழ்களை (பெப்./மார்ச்.1983) ஒருங்கிணைத்துள்ளோம். எனினும், எமது வருட சந்தாதாரர்கள் 12 தனித்தனி இதழ்களைப் பெற உரித்துடையோராவர்.

## அடுத்த இதழில்

* பல்கலைக்கழக கல்வி — அதன் தோற்றம், வளர்ச்சி, அடிப்படை கோட்பாடுகள்; இலங்கையில் பல்கலைக்கழகக் கல்வியின் அறிமுகமும், வளர்ச்சியும், இன்றைய பிரச்சினைகளும்.
* தொழிலாளர் எற்றுமதி — பிரதான வெளிநாட்டுச் செலாவணி மூலம்.
* அரசாங்கத்தின் தீர்மானங்கள் எடுக்கும் படிமுறையில் காணப்படும் பிழைகள்.
* இலங்கையில் பனஞ்சீனி உற்பத்தி.
* இலங்கையின் முதலாவது வணிக வங்கி.

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக் கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

## பெப்ரவரி

1. ஜப்பானின் புள்ளி விவர பணியகம் டோக்கியோவில் வெளியிட்ட புள்ளி விவரங்களின் பிரகாரம், 1982 ம் ஆண்டில் அந்நாட்டில் 13 லட்சத்து 60 ஆயிரம் பேர் (தொழிலாளர் படையில் 2.4 சதவீதம்) வேலையற்றோராக இருந்தனர். 1955 ம் வருடத்துக்குப்பின்னர் (2.5 சதவீதம்) பதிவு செய்யப்பட்ட உயர் வீதம் இதுவாகும்.

5. எண்ணெய உற்பத்தி செய்யாத வளர்முக நாடுகளின் பணவீக்க விகிதம் தொடர்ந்தும் அதிகரித்து வருவதாகவும், கடந்த அக்டோபரில் அது 39.2 சத வீதத்தை எட்டியிருக்கிறது என்றும் சர்வதேச நாணய நிதியம் வாஷிங்டனில் அறிவித்தது. மாறாக கைத்தொழில் மய நாடுகளில் நுகர் பொருள்களின் விலையதிகரிப்பு வீழ்ச்சியைப் பதிவு செய்திருப்பதாகவும் நிதியம் அறிவித்தது.

லத்தீன் அமெரிக்க நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி வழங்குவது தொடர்பான பேச்சு வார்த்தைகளை 43 வங்கிகளின் ஆளுநர்கள பாரிசில் நடத்தினர். அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்நாடுகளுக்கு 1300 கோடி டொலர் கடன் திட்டமொன்றுக்கு இவ் வங்கிகள் தற்காலிகமாக இணக்கம்தெரிவித்துள்ளன.

8. 1983 ம் வருடத்துக்கான நிதி ஒதுக்கீட்டு மசோதா பெப்ரவரி 25 ந் தேதியன்று நிதி திட்டமிடல் அமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் இவ் வாண்டுக்கான வரவு செலவுத்திட்டப்பற்றுக்குறை 2900 கோடி ரூபாவாக இருக்கும். மொத்தச் செலவினம் 4965.5 போடி ரூபாவாக மதிப்பிடப்பட்டிருப்பதுடன், இதில் 2566.2 கோடி ரூபா மீளவரும் செலவாகவும் 2393.3 கோடி ரூபா மூலதனச் செலவாகவும் இருக்கும்; அதே வேளையில் மொத்த வருமானம் 2080.3 கோடி ரூபாவாக இருக்குமென்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

நிதி திட்டமிடல் அமைச்சரின் சிபார்சின் கீழ் அமைச்சரவை கிரிந்தி ஓயா நீர்ப்பாசன, குடியிருப்புச் செய்திட்டத்துக்கு 1 கோடியே 75 லட்சம் டொயிஷ் மார்க் கடனொன்றை அனுமதித்துள்ளது. இத்திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கி, விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம், ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு என்பவற்றால் கூட்டாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றது

8 பதுளை மாவட்ட கிராமிய அபிவிருத்தி செய்திட்டத்துக்கான 1.3 கோடி எஸ். டி. ஆர். (29.3 கோடி ரூபா) கடன் ஒன்றுக்கான ஒப்பந்தத்தில் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்துடன் கைச்சாத்திடப்பட்டது. செயல் திட்டப்பகுதியில் வாழும் கிராமச் சனத்தொகையினரின் குறிப்பாக, மரக்கறிகள், தேயிலை சிறு ஏற்றுமதிப்பயிர்கள், போன்ற நீர்ப்பாயச்சப்பட்ட களப் பயிர்களை செய்கை பண்ணுவோரின் வருமான மட்டங்களை அதிகரித்து, வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதற்காக இக்கடன் பயன்படுத்தப்படும்.


9 வாஷிங்டனில் கூடிய வளர்முக நாடுகளின் நிதியமைச்சர்கள், உடனடியான உலக பொருளாதார மீட்சியின் அவசியத்தை வலியுறுத்தியதுடன், கைத்தொழில் மய நாடுகள்உந்துதல் அளிக்கும் பொருளாதாரக்கொள்கைகளை கைக்கொள்ள வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்தனர். அதே வேளையில் சர்வதேச நாணய நிதியத்தின் "குழு 24" (லத்தீன் அமெரிக்க, ஆசிய, ஆபிரிக்க) நாடுகள், சர்வதேச கொடுப்பனவுச்சிக்கல்களை எதிர் நோக்கியிருக்கும் அங்கத்துவ நாடுகளுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் வளங்கள் மிகப்பரவலான அளவில் விஸ்தரிக்கப்பட்ட வேண்டுமென்பதை வலியுறுத்தின.

இலங்கையின் எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றுவது கூட்டத்தொடரை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்தன அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

10 1930 க்குப் பிறகு அனுபவிக்க நேர்ந்த மிக மோசமான பின்வாங்கலிலிருந்து உலக பொருளாதாரம் இவ்வாண்டில் படிப்படியாக மீட்சி பெறும் என்று சர்வதேச நாணய நிதியம் வெளியிட்ட முன் நிகழ்வுக் கூற்றுக்கள் தெரிவிக்கின்றன. வருட முடிவில் இம் மீட்சி படிப்படியாக வேகமடையும் என்று நிதியத்தின் அறிக்கை கூறுகிறது.

11 செலாவணி விகிதத்தை ஸ்திரப்படுத்தும் முயற்சியாக மத்திய வங்கி ஒரு அமெரிக்க டொலருடனான இலங்கை ரூபாவின் பெறுமதி ரூ 23.05 ஆக இருக்கும் என அறிவித்தது. ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதிலும், அதே வேளையில் இறக்குமதிப்பிரதியீட்டு கைத்தொழில்களுக்கு பாதுகாப்பு வழங்குவதிலும் இலங்கைரூபாவின் போட்டியிடும் நிலைக்கு இத்திருத்தம் போதுமானதாக இருக்கும் என்று மத்திய வங்கியின் ஆளுனர் தெரிவித்ததாக அறிவிக்கப்படுகிறது.

16 கால்நடை அபிவிருத்தி செய்திட்டமொன்றை நிதிப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் 31.7 கோடி ரூபா கடனொன்றுக்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டது. செய்திட்டப்பகுதியில் மாடுகள், எருமைகள், பன்றிகள், கோழி என்பனவற்றின் தரத்தையும், உற்பத்தித்திறனையும் விருத்தி செய்வதே இச் செய்திட்டத்தின் நோக்கமாகும்.




# வரவு செலவுத்திட்டம் 1983

நவம்பர் 1977 ல் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் அடுத்து வரவிருக்கும் ஐந்து ஆண்டுகளுக்கான அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளை எவ்வாறு பிரதிபலித்ததோ, அதே போன்று 1983 ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டம் அரசாங்கத்தின் இரண்டாவது தவணைக் காலத்துக்கான பொருளாதாரக் கொள்கைகளை விரிவான முறையில் எடுதததுக காட்டியுள்ளது. எனவே, அந்த வகையில் 1983ம் வருட வரவு செலவுத்திட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

1977 ம் ஆண்டில் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் ஏற்படுத்திய தாக்கம் பல்வேறு துறைகளிலும் உணரப்பட்டுள்ளது; அதே வேளையில், கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் பொருளாதாரத்தின் சகல பிரிவுகளும் வளர்ச்சி விகிதங்களைப் பதிவு செய்துள்ளன. இக்காலத்துக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சராசரி வளர்ச்சி வீதம், அதற்கு முன்னைய ஐந்தாண்டு காலததின் வீதத்தைவிடவும் இரட்டிப்பாக இருந்து வந்துள்ளது. மேலும், வேலை வாய்ப்புக்களின் உருவாக்கத்திலும் உயர்ச்சிப்போக்கிலான ஒரு மாற்றம் அவதானிக்கப்பட்டுள்ளது. ஆயினும், பொருளாதார அபிவிருத்தித்துறையில் சாதிக்கப்பட்டுள்ள இந்த வெற்றிகளுக்கு மத்தியில், பொருளாதாரத்தின் அத்திவார அமைப்பு குறித்த சில பிரச்சினைகள் தலை தூக்கத் தொடங்கியுள்ளன. அடுத்து வரும் ஆண்டுகளிலும் பொருளாதாரத்திலான இந்த முன்னேற்றம் ஏற்பட வேண்டுமாயின், சில சரிக்கட்டல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதை இப்பிரச்சினைகள் எடுத்துக்காட்டுகின்றன.

நாட்டின் தற்போதைய மூலவள நிலைமையை அனுசரித்துச செல்ல முயன்றிருப்பது இந்த வ. செ. திட்டத்தின் ஒரு சிறப்பம்சமாகும். சீர்குலைந்து வரும் சென்மதி நிலுவை, வரவு-செலவு நிலைமைகளை நேரடியாக எதிர் நோக்கும் வகையில் நமது அபிவிருத்திக் கொள்கை மீள ஒழுங்குபடுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை அது சுட்டிக்காட்டுகிறது. பொருளாதாரத்தின் சில பிரதான பிரச்சினைகளை வென்றெடுக்க வேண்டுமாயின் நாடு "எளிமையைக்" கைக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் வ. செ. திட்டம் வலியுறுத்துகிறது. இந்த இலக்கை எய்தும் வகையில் பின்வருவன பரிகாரங்களாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

★ மிகக் கவனமாக தெரிவு செய்யப்பட்ட முன்னுரிமைகளின் பிரகாரம் அருமையாக இருக்கும் வளங்கள் விவேகமான முறையில் பங்கிடு செய்யப்படுதல் வேண்டும்.

★ அரசாங்க செலவினங்களை குறைத்தல்; அடுத்து வரும் இரண்டு வருடங்களிலும் எந்தப்புதிய மூலதனச் செய்திட்டமும் பொறுப்பேற்கப்படமாட்டாது.

★ வெளிநாட்டு மூலவளங்களின் பாய்ச்சலில் எதிர்பார்க்கப்படும் குறைவை எதிர் நோக்கி, உள்நாட்டுச் சேமிப்பு முயற்சியை ஊக்குவித்தல்.

★ 1983 ம் வருட வருமானத் திரட்டுதலில் கூடியயமுயற்சியை செலுத்துதல்.

★ செலாவணி விகிதங்களிலும், தீர்வை அமைப்பிலும் தேவையான திருத்தங்களைச் செய்வதன் மூலம் நாடு எதிர்நோக்கும் சென்மதி நிலுவைப் பிரச்சினைகளைச் சமாளித்தல்.

★ உற்பத்தியாளர்களுக்குப் போதிய இலாபங்களை உறுதி செய்து, உற்பத்தியையும், ஏற்றுமதியையும் அதிகரிக்கச்செய்யும் நோக்கில் பாரம்பரிய ஏற்றுமதித்துறைக்கு மேலதிக ஊக்குவிப்புக்களை வழங்குதல்; மேலும், புதிய ஏற்றுமதிப்பொருள்களையும், சந்தைகளையும் கண்டறிதல்.

### வரவு செலவுத்திட்டப் பற்றுக்குறைக்கு நிதியளித்தல்

கோடி ரூபா)

| | 1981 | 1982 | 1983 |
|---|---|---|---|
| மொத்தச் செலவுகள் | 3110.1 | 3880 | 4940.9 |
| வருமானம் | 1622.8 | 1820 | 2603.2 |
| பற்றுக்குறை | 1487·3 | 2060 | 2337.7 |
| நிதியளிக்கப்படும் விதம் | | | |
| திட்டக்கடன்களும் கொடைகளும் | 818.3 | 975.8 | 1401.6 |
| வெளிநாட்டு வர்த்தகக் கடன்கள் | — | 83.6 | — |
| உள்நாட்டு வங்கிக்கடன்கள் | 629.6 | 60.0 | 136.1 |
| வங்கியல்லாத வட்டாரக் கடன்கள் | 43.2 | 400.6 | 800 |
| ரொக்க நிலுவை | 3.8 | — | — |
| மொத்தம் | 1487.3 | 2060 | 2337.7 |

–அசல் வருமான மதிப்பீடு 2080.3 கோடி ரூபா. வருமானம் 522.9 கோடி ரூபாவாக அதிகரித்ததற்கு 1983 பெப்ரவரி 18ம் திகதி மொத்த வியாபார வரியில் செய்யப்பட்ட மாற்றங்களும்(372.9 கோடி ரூபா) மத்திய வங்கியின் இலாபத் தொகையான 150 கோடி ரூபா கைமாற்றப்பட்டதும் காரணங்களாகும்.

--இது நிதியளிக்கப்படா இடை வெளியைப் பிரதிபலிக்கின்றது.

### வரவு செலவுத்திட்ட வருமானங்களும், செலவுகளும் — 1983 - 87

(கோடி ரூபா)

| | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 |
|---|---|---|---|---|---|
| | | | வரவு செலவுத் திட்டம் | | |
| 1. மத்திய அரசாங்க நுகர்வு | 816.2 | 939.1 | 1080.5 | 1242.5 | 1428.3 |
| 2. பொதுக்கடன் மீதான வட்டி | 715.1 | 774.3 | 882.1 | 1043.7 | 1167.9 |
| 3. மானியங்கள் | 241.0 | 365.0 | 291.6 | 320.8 | 3528 |
| 4. தனியார் துறைக்கான நடைமுறை மாற்றங்கள் | 243.1 | 262.8 | 278.9 | 297.3 | 315.5 |
| 5. ஏனைய நடைமுறை மாற்றங்கள் | 336.1 | 374-3 | 421.9 | 473.7 | 532.5 |
| 6. மொத்த நடைமுறைச் செலவுகள் | 2351.5 | 2616.0 | 2955.0 | 3378.0 | 3797.0 |
| 7. மொத்த நடைமுறை வருமானங்கள் | 2411.8 | 2811.0 | 3337.5 | 3898.0 | 4447.0 |
| 7 1 வருமானவரி | 623.4 | 419.0 | 476.5 | 547.5 | 612.4 |
| 7 2 வியாபார மொத்த வரி | 709.0 | 879.6 | 1019.5 | 1196.0 | 1369.8 |
| 7 3 தெரிவு பெற்ற வியாபார வரிகள் | 278.0 | 323.2 | 373.4 | 435.6 | 494.5 |
| 7 4 ஏற்றுமதி தீர்வை | 260.4 | 278.1 | 307.4 | 338.6 | 370.9 |
| 7 5 இறக்குமதி தீர்வை | 489.6 | 540.3 | 599.2 | 676.2 | 754.4 |
| 7 6 ஏனையவை | 312.4 | 270.8 | 278.6 | 330.9 | 35.0 |
| 7-7 மேலதிக திரட்டல் | 0 | 100.00 | 282.9 | 373.2 | 491.0 |
| 8. வ-செ-திட்ட சேமிப்பு | 60.3 | 195.0 | 382.5 | 520.0 | 650.0 |
| 9. நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 12430 | 14761 | 17237 | 19800 | 22564 |

உணவு, மண்ணெண்ணெய் முத்திரைகள் மீதான செலவுகளையும் உள்ளடக்கியது-

ஓய்வூதியங்களையும், தேசியசேமிப்பு வங்கியின் வட்டி மானியத்தையும் உள்ளடக்கியது-

மூலம்: பொது முதலீடு 1983–1987
தேசிய திட்டமிடல் பிரிவு,
நிதி, திட்டமிடல் அமைச்சு

★ வ. செ. திட்டத்தின் நிதி விஸ்தரிப்பில் குறைவினை ஏற்படுத்தி, அதன் மூலம் 1983 ம் ஆண்டில் நியாயமான விலை ஸ்திரத்தன்மையைப் பேணுதல்.

★ பொருத்தமான வட்டி செலாவணி விகிதங்களுக்கூடாகத் தனியார் துறைக்கான மூலவளப்பாய்ச்சலை அதிகரித்து, அதன் மூலம் ஏற்றுமதி நோக்கிலான தொழில் செறிவு மிக்க உற்பத்தித் துறைக்கு மூல வளங்களின் பெயர்ச்சியை அனுமதித்தல்.

(அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது போன்று) அடுத்து வரும் சில ஆண்டுகளில் மொத்த நடைமுறைச்செலவுகள் குறைந்து செல்வதுடன், நடைமுறை வருமானங்கள் படிப்படியாக அதிகரித்துச்செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1987 ம் ஆண்டுக்கிடையில் வருமானவரி, வியாபார வரி, தெரிவு செய்யப்பட்ட விற்பனை வரி என்பவற்றிலான வருமானம் இரட்டிப்பாக அமையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. நடைமுறைக்கணக்கு மிகையை 1987 க்குள் எய்துவதை சாத்தியமாக்குவதும் இக்கொள்கையின் உத்தேசமாகும். அடுத்து வரும் ஆண்டுகளில் போதிய அளவிலான அரசாங்க சேமிப்புக்களை உருவாக்குவதிலேயே வ. செ. திட்டத்தின் முழுக்கவனமும் குவிமையப்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும். அரசாங்கத்தின் உடனடி செலவுக்கான மூலவளங்களை தேடுவதே இன்றைய அவசர பிரச்சினையாக இருக்கிறது. நிதியமைச்சரின் வார்த்தைகளிலேயே அதனைப் பின்வருமாறு கூறலாம் :

" அரசாங்க செலவினங்களுக்காகவளங்களைத் தேட வேண்டியவர்களாக நாங்கள் இருக்கிறோம். அதனால், மக்கள் பல தியாகங்களைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறார்கள்... எமது பொருளாதாரத்தின் சில தீய போககுகளை அகற்றுவதற்கு நாம் உடனடியாக நடவடிக்கை எடுக்காவிடின், எதிர்காலத்தில் இதனைவிடவும் வேதனை தரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலைமைக்கு நாம் தள்ளப்படுவோம் . . . . .

முன் நோக்கிய பயணத்தை நாம் தொடர்கிறோம் . . . . எளிமை, தியாகம், கடும் உழைப்பு என்பவற்றால் மட்டுமே நாம் அவ்வாறு செய்ய முடியும். இவையாவற்றுக்கும் மேலாக மிகக்கடுமையான நிதிக்கட்டுப்பாடு பேணப்படுதல் வேண்டும்: என் உரையின் மையக்கரு இதுவாகும்."

அடுத்து வரும் பக்கங்களில் இந்த வரவு செலவுத்திட்டம் குறித்த ஒரு பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

# 1983ம் வருட வரவு செலவு திட்டத்தைப் பற்றிய ஒரு பகுப்பாய்வு

**வை. கருணாசிங்க**

வரவு செலவுத் திட்டம் என்பது எதிர்பார்க்கப்படும் பொதுச் செலவுகளினதும் வருமானங்களினதும் ஒரு சவிஸ்தாரமான பதிவேடாகும். செலவுகள் பரந்த முறையில் மீளவரும் செகள் என்றும், மூலதனச் செலவுகள் என்றும் வகைப்படுத்தப்படுகின்றன. இவை பல்வேறு அமைச்சுக்களின் இலக்கைப் பொறுத்து மீளவரும் செலவுகளின் கீழும் மூலதனச் செலவுகளின் கீழும் பதிவு செய்யப்படுகின்றன. இதேபோல, அரசாங்க வருமானங்களும் வரிகள், தீர்வைகள் போன்ற ஆதார மூலத்தினாலும், வரிகள் அல்லாத ஆதார மூலங்களிலிருந்து வரும் வருமானங்கள் என்றும் வகைப்படுத்தப்படுகின்றன. இதையடுத்து, அரசாங்கச் செலவுகள வருமானங்களுடன் ஒத்துப் பார்க்கப்படுகின்றன. வருமானம் பற்றாக்குறையாயிருந்தால் (இதுவே உபரியைவிட பொது வழமையாக ஏற்படுகிறது.) நிதியமைச்சர் புதிய பிரேரணைகளை அறிவிக்கிறார். இவற்றில் வழக்கமாக வரிகளிலும் தீர்வைகளிலும் செய்யப்படும் மாற்றங்கள் உள்நாட்டுத்துறையில் கடன்படல், சர்வதேச நன்கொடையாளர் சமூகம் மேற்கொள்ளும் உதவிக் கடப்பாடுகள் ஆகியன அடங்கியிருக்கும். இவ்விதமாக, வரவு செலவுத் திட்டமானது பொதுச் செலவுகளை நிர்வகிப்பதற்கும் வருடாந்த செலவுத்திட்டங்களைச் சமாளிப்பதற்குரிய நிதி வளங்களைத் திரட்டுவதற்குமான பிரதான கருவியாக விளங்குகிறது. அரசாங்கத்தின் அரசியற் கொள்கையை அமுல் நடத்துவதற்குரிய முக்கிய சாதனமாகவும் அது திகழ்கின்றது.

இவ்வருடத்தின் வரவுசெலவுத்திட்டம் 4960 கோடி ரூபா நிதியளிப்பை எதிர்பார்க்கின்றது. இப்பொழுது 3880

கோடி ரூபாவாயிருக்கும் கடந்த வருட நிதியளிப்பிலிருந்து இது ஏறக்குறைய 1200 கோடி ரூபா அதிகரிப்பாகும். 1983 ம் வருட மொத்தச் செலவீட்டில் மீளவரும் செலவினமும் (2650 கோடி ரூபா) மூலதனச் செலவினமும் (2480 கோடி ரூபா) அடங்கியுள்ளது. நிதி—திட்டமிடல் அமைச்சர் (1) உள்நாட்டு வருமானம் (2600 கோடி ரூபா), (2) கடன்களும் கொடைகளும் அடங்கிய வெளிநாட்டு நிதியளிப்பு (1400 கோடி ரூபா), (3) வங்கித் தொழில் வட்டாரமல்லாத வட்டாரங்களிலிருந்து கடன் பெறல் (800 கோடி ரூபா) ஆகியவற்றின் மூலம் 1983 ம் வருட செலவுத் திட்டத்துக்கு நிதியளிக்க உத்தேசிக்கிறார். எனினும், 140 கோடி ரூபா நிதியளிக்கப்படா இடைவெளியொன்று இன்னும் இருந்துவருகிறது.

1983 ம் வருட வரவு செலவுத் திட்டத்தின் பெறுமானத்தைக் கணிப்பதே இந்த ஆராய்ச்சிக் கட்டுரையின் நோக்கமாகும். குறிப்பாக, பொருளாதாரக் கொள்கை நிலையிலிருந்து அதன் பெறுமானத்தைக் கணித்து, பொருளாதார அபிவிருத்தி முறையுடன் அதை இணைப்பதே நோக்கம். இந்தப் பகுப்பாய்வு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவது பிரிவில் செலவீடு சுருக்கமாக மீளாய்வு செய்யப்படுகிறது ; இரண்டாவது பிரிவில் வரவு செலவுத்திட்டத்துக்கான நிதியளிப்பில் நிதிவளங்களைத் திரட்டல் ஆராயப்படுகிறது ; மூன்றாவது பிரிவில் உற்பத்தி, வேலை வாய்ப்பு, பணவீக்கம், சென்மதி நிலுவைகள், பொதுப்படுகடன் சம்பந்தமாக வரவு செலவுத்திட்டத்தின்பங்களிப்பு என்னவென்று மதிப்பாய்வு செய்யப்படுகின்றது.

### 1983ம் வருடப் பொதுச் செலவுத்திட்டம்

மீளவரும் மதிப்பீட்டுத் தொகையான 2,650 கோடி ரூபா மொத்தச் செலவுகளில் கிட்டத்தட்ட 52 சதவிகிதத்துக்குப் பொறுப்பாயுள்ளது. இரு முந்திய வருடங்கள் தொடர்பாக இது சதவிகிதக்கணக்கில் ஓர் எல்லைக் குறைவைப் பிரதிபலிக்கின்றது. மொத்த வரவு செலவுத்திட்டத்திலுள்ள மீளவரும் செலவுகளின் விகிதத்தில் ஏற்படும் வீழ்ச்சிக்கு வரவு செலவுத்திட்டத்திலுள்ள மூலதனச் செலவுகளின் பங்கைக் கொண்டு கணக்குக்காட்டப்பட வேண்டுமென்பது வெளிப்படை. 1981 ம் ஆண்டிலிருந்த ஏறக்குறைய 46 சத விகிதத்திலிருந்து (2,480 கோடி ரூபா வுக்குக் கணக்குக் காட்டக் கூடியதாக) 1983 ம் ஆண்டில் 48 சத விகித்துக்கு ஏற்பட்ட அதிகரிப்பு இதற்குச் சான்றாகும்.

### மீளவரும் செலவுகள்

1983 ம் ஆண்டுக்கான மீளவரும் செலவுகளின் மதிப்பீடு 1982 ம் ஆண்டுக்குரிய இடைக்கால மதிப்பீடான 2050 கோடி ரூபாவை விட ஏறக்குறைய 600 கோடி ரூபா அதிகமாகும். 1983 ம் ஆண்டில் வரவு செலவுத்திட்டத்தில் ஏற்பட்ட மொத்த அதிகரிப்பான 27 சதவிகித்துடன் ஒப்பிடுகையில் இது 29 சதவிகித அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது. மீளவரும் செலவுகளின மதிப்பீடான 2650 கோடி ரூபாவை நான்கு பெருஞ் செலவினவகைகள் பிரதிபலிக்கின்றன: (1) சம்பளங்கள் (22 சதவிகிதம்); (2) பொதுப் படு கடன் மீது வட்டி (29 சத விகிதம்); (3) நஷ்டங்களை ஈடு செய்வதற்காகப் பொதுக் கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்பட்ட மானியங்களும் கொடைகளும் உதவித் தொகைகளும் (16 சதவிகிதம்); (4) பராமரிப்பும் பழுது பார்த்தலும் ஏற்றிக்கொண்டு போதலும் படிகளும் (இவையாவும் நானுவிதச் செலவுகளில் சேர்க்கப்பட்டுள்ளன) (33 சத விகிதம்).

சம்பளங்கள் தொடர்பாக 1983 ம் ஆண்டுச் செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு 1982 ம் ஆண்டை விட ஏறக்குறைய 28 சதவிகிதம் மட்டுமேயாகும். மாதச் சம்பளமாக 1000 ரூபாவையோ அல்லது அதற்குக் குறைவாகவோ பெறும் அரசாங்க ஊழியருக்கு அறிவிக்கப்பட்ட 100 ரூபா சம்பள அதிகரிப்பும் இந்த அதிகரிப்பில் அடங்கியுள்ளதாகத் தோன்றுகிறது. சம்பள அதிகரிப்புகள், மீளவரும் வரவு செலவுத்திட்டச் செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பில் 20 சத விகிதத்துக்குப் பொறுப்பாகும். பொதுப்படுகடன் மீதானவட்டியே மீளவரும் செலவுகளில் மிகப்பெரிய பகுதிக்குப் பொறுப்பான மிகவும் குறிப்பிடத்தக்க தனியொரு பொருளாகும். பொதுப்படுகடன் மீதான வட்டி ஏறக்குறைய 200 கோடி ரூபா அதிகரிப்பைக்கண்டுள்ளது. இது 1982 ம் ஆண்டை விட 33 சத விகித அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது. இதன்விளைவாக, மீளவரும் மொத்தச் செலவுகளில் அதன் பங்கு 1982 ம் ஆண்டிலிருந்த 27 சதவிகிதத்திலிருந்து 1983 ம் ஆண்டில் 29 சதவிகிதத்துக்கு அதிகரித்துள்ளது. இந்த 200 கோடி ரூபா அதிகரிப்பில் ஏறக்குறைய 67 சதவிகிதத்துக்கு உள்நாட்டுப் படுகடன் வட்டியே பொறுப்பாகும். இது வளர்ந்துவரும் வரவு செலவுத் திட்டப் பற்றுக்குறைகளுக்கு நிதியளிப்பதற்காக உள்நாட்டு வட்டாரங்களை (வங்கிகளும்வங்கியல்லாத வட்டாரங்களும்) மென் மேலும் சார்ந்திருப்பதன் ஒரு நேரடியான விளைவாகும். அபிவிருத்தித் திட்டங்களின் வேகம் அதிகரித்துள்ளதால், வெளிநாட்டுக் கடன்கள்

மீதான வட்டிக் கொடுப்பனவு களும் இதே போல அதிகரித் துள்ளன.

பொதுக் கூட்டுத்தாபனங்க ளுக்கு வழக்கப்படும் மானியங் கள், கொடைகள், உதவிப் பணங்கள் ஆகிய வற்றில் அதி கரிப்புகளை த்டுக்க நிதி-திட்ட மிடல் அமைச்சர் முயன்றுள் ளார். உயர்ந்துவரும் உணவு விலைகளைக் கவனிக்குமிடத்து, உணவுப்பொருள்களை வாங்கு வதற்காகக் காசாக்கக் கூடிய கூப்பன்களைப்பெறும் குடிமக்க ளில் 50 சதவிகிதத்துக்கு மேற் பட்டோர் சம்பந்தமான உணவு முத்திரைத் திட்டம் இன்னும் திருத்தியமைக்கப்படா திருந்து வருகிறது. 1979ம் ஆண்டில் உணவு முத்திரைத்திட் டம்அமு லுக்குக் கொண்டு வரப்பட்ட தற்குப் பின் உணவு முத்திரை களின் உண்மையான மதிப்பில் 50சதவிகிதத்துக்குமேல்வீழ்ச்சி யுற்றிருந்தபோதிலும்,உயர்ந்து வரும் உணவுச் செலவுகளிலி ருந்து உணவு முத்திரை பெறு வோரைப் பாதுகாப்பதற்காக அவற்றின் பெறுமதியை அர சாங்கம் அதிகரிக்கவில்லை. மண்ணெண்ணெய் முத்திரை களின் மதிப்பில் ஆறு ரூபா அதிகரிக்கப்பட்டு, அவற்றின் பெறுமதி மாதமொன்றுக்கு குடும்பமொன்றுக்கு 15 ரூபா 50 சதத்துக்கு உயர்த்தப்பட்டி ருந்தபோதிலும், இந்த அதிக ரிப்பு 1979 ம் ஆண்டில் மண ணெண்ணெய் முத்திரை ஏற் படுத்தப்பட டதற்கு பின் மண ணெண்ணெயில் ஏற்பட்டுள்ள விலை உயர்வுகளை ஓரளவுக்கு மட்டுமே ஈடுசெய்யும். 1982ம் ஆணடிலிருந்த மீளவரும் செல வுகளின் 26 சதவிகிதத்து டன் ஒப்பிடுகையில் மீளவரும் செலவுகளின் 33 சதவிகிதத்து க்கு கணக்கு காட்டுவதற்காக நானுவித இனத்தின் மீதான செலவுகளில் ஏறக்குறைய 270 கோடி ரூபா அதிகரித்துள்ளது. இது பராமரிப்பு, பழுதுபார்த் தல், ஏற்றிச்செல்லல் ஆகிய செலவுகள் அதிகரித்துவருவ தை ஓரளவுக்குப்பிரதிபலிப்ப துடன், சேவைகள் மீது உதார ணமாகச் சுகாதாரம், கல்வி ஆகியவற்றின்மீது செலவுகள் அதிகரித்து வருவதையும் ஓரள வுக்குப் பிரதி பலிக்கின்றது.

**மூலதனச் செலவுகள்**

1983 ம் ஆண்டில் மூலத னச் செலவுகள் மொத்தம் 2480 கோடி ரூபாவை எட்டு மென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், மதிப்பிடப்பட்ட குறை செலவுத்தொகையான 200 கோடி ரூபாவைக் கண டிப்பாய்ப் பாராது விட்டால் மூலதனப் பாதீடு (வரவு செல வுத்திட்டம்), 2280 கோடி ரூபாவுக்குக் குறைந்து விடு கின்றது. இது 1982 ம் வருட இடைக்கால மதிப்பீட்டுக்கு மேல் 25 சதவிகித அதிகரிப் பைப் பிரதிபலிக்கின்றது. இந்த மொத்தத் தொகையில், மீள் கொடுப்பனவுகளுக்கு 470கோடி ரூபா போக, மூல தன முதலீடுகளுக்கு 1,810 கோடி ரூபா மட்டுமே மிஞ்சு கிறது. , 1983 ம் ஆண்டில் உள்நாட்டுக் கடன்களைத் திருப் பிக் கொடுப்பதற்கான தொ கை 1982 ம் வருடத்திலிருந்த 200 கோடி ரூபாவிலிருந்து 340 கோடி ரூபாவுக்கு அதி கரிக்கின்றது. இது 69 சத விகித அதிகரிப்பைப் பிரதிப லிக்கின்றது. வெளிநாட்டுக் கடன்கள் மீதான திருப்பிச் செலுத்தும் தொகை 1982 ம் ஆண்டிலிருந்ததைவிட ஏறக் குறைய 73 சதவிகிதம் அதி கரித்து, 1983 ம் ஆண்டில் 135 கொடி 70 இலட்சம் ரூபாவாகிறது. (க டன்கள் மீதான மறு கொடுப்பனவுக ள் மூலதனப் பாதீட்டில் சேர்க்கப்படுகையில் வட்டிக் கொடுப்பனவுகள் மீளவரும் பாதீட்டில் சேர்க்கப்படுகின் றன.)

பொதுக்கூட்டுத்தாபனங்களு க்கு மூலதனக் கைமாற்றங் கள் 1110 கோடி ரூபாவாகும். இது 1982 ம் ஆண்டில் கை மாற்றப்பட்ட தொகையான 1130 கோடி ரூபாவு டன் ஒப்பிடுகையில் ஓர் எல்லைக் குறைவைப் பிரதிபலிக்கின் றது. மகாவலி அபிவிருத்தி மிகப்பெருந் தொகையான 680 கோடி ரூபாவைப்பெற் றுள்ளது. எனினும் இது 1982 ம் ஆண்டில் அச்சபைபெற்ற பங்கை விட 6சத விகிதம் குறைவாகும். 1983ம் ஆண் டில் வீடமைப்பு அதிகார சபைக்கு வழங்கபடும் மூலதன உதவுதொகை 57 கோடி 10 இலட்சம் ரூபா வாயிருக்கும். இது 1982 ம் ஆண்டில் வழங்கப்பட்ட மூல தன உதவு தொகையான 70 கோடி 30 இலட்சம் ரூபாவு டன் ஒப்பிடுகையில் 19 சத விகிதம் குறைவாகும். நீர் வழங்கல்-வடிகால் சபை (1982ம் ஆண்டில் பெற்ற தொயையான 90 கோடி 70 இலட்சம் ரூபாவுடன் ஒப்பிடு கயில்) அதிகரிக்கும் பங்கான 137 கோடி 90 இலட்சம் ரூபா வைப் பெறுகிறது. நாட்டில் நடைபெற்றுவரும் நீர் வழங்கல் சாக்கடைத்திட்டங்களை நிறை வேற்றுவதற்காக இத்தொகை நீர்வழங்கல்-வடிகால் சபைக் கு வழங்கப்படுகிறது. பொதுக் கூட்டுத்தாபனங்களுக்கு 125 கோடி 20 இலட்சம் ரூபா வரையான கடன்களை வழங்க வும் பாதீட்டில் ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது. மின்சார சபையே மிகப் பெரிய கடன் தொகையான 69 கோடி 50 இலட்சம் ரூபாவைப் பெறுகி றது. இதையடுத்து இலங்கை மத்திய போக்கு வரத்துச்சபை 45 கோடி ரூபாவைப் பெறு கிறது.

**துறைவரியாக மூலதனச் செலவுகள்**

எந்தப் புதிய செய்திட்டங் களும் தொடங்கப்படக்கூடாது என்று விதிக்கும் அரசாங்கத் தின் கொள்கை 1983 ம் ஆண் டில் தளர்த்தப்படவில்லை. இக் கொள்கை ஓர் ஒழுங்குமுறை

நடவடிக்கையாக 1981 ம் ஆண்டில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. பல்வேறு அமைச்சுகளும் பாதீட்டில் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகைகளுக்குள் தங்களுடைய உண்மையான செலவுகளை அடக்கிவிட வேண்டுமென்பதே கொள்கை. இதனால் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு, பாதீட்டில் சேர்க்கப்படாத திட்டங்களை மேற்கொள்ள அமைச்சுகளுக்கு அனுமதியில்லை. எனவே, 1983 ம் வருடப்பாதீட்டில் அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகைகள் தற்போது நடைபெற்றுவரும் திட்டங்களுக்காகவே முற்றுகப் பயன்படுத்தப்படும்.

வரவு செலவுத்திட்டத்தில் துறைவாரியாக ஒதுக்கப்பட்ட பணத்தொகைகள் பிரதிபலிப்பது போல, அரசாங்கம் இன்னும் விவசாயத்துக்கு முக்கிய இடம் அளிக்கின்றது. அதிலும் நீர்ப்பாசன வசதிகளை விருத்திசெய்வதிலும், வினைத்திறமையையும் நிர்வாகத்திறனையும் அதிகரிப்பதற்காக தற்போதிருந்துவரும் நீர்ப்பாசன வசதிகளை அபிவிருத்தி செய்வதிலும் விசேட கவனம் செலுத்தப்படுகிறது. நீர்ப்பாசன வசதிகளுக்குத் தொடர்ந்து அளிக்கப்பட்டு வரும் இந்த முக்கியத்துவம், விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஒரு வழியாக, உலர் வலயத்தில் நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தும் நெடுங்காலமாகக் கருத்தில் இருந்து வரும் உபாயத்தையே பிரதிபலிக்கின்றது. இப்பொழுது நான்காவது நிறைவேற்று வருடத்துக்குள் பிரவேசிக்கும் துரித மகாவலித் திட்டமே இன்னும் நாட்டின் முன்னணி நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டமாக இருந்து வருகிறது. முதலீடுகளை ஒதுக்குவதில் இத்திட்டமே முதலிடம் பெற்றுவருகிறது. மொத்த மூலதனச் செலவில் 34 சதவிகிதத்துக்கும், விவசாயத் துறைக்கு ஒதுக்கப்பட்டபணத் தொகையில் ஏறக்குறைய பாதிக்கும் அதுவே பொறுப்பாயுள்ளது. துரித மகாவலித்திட்டம் இன்னும் நிர்மாணநிலையிலேயே இருந்து வருகிறது. எனவே பாதீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை, அணைக்கட்டுகளையும் சுரங்கப்பாதைகளையும் நீர்ப்பாசனத்துக்கான கால்வாய்களையும் நீர்-மின்சார சேமிப்பு வசதிகளையும் நிர்மாணிப்பதற்கும், சாலைகள், ஜனசமூக நிலையங்கள் முதலியன போன்ற மற்றும் பௌதிக – சமூக உள்ளமைப்புகளை ஏற்படுத்துவதற்கும் நிதியளிக்கப் பயன்படுத்தப்படும். இக்கட்டத்தில், விரைவுபடுத்திய மகாவலித்திட்டம் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யப்படுவது நாட்டுக்கு ஜீவாதாரமாகும். ஏனென்றால், அது விவசாய அபிவிருத்திக்கும், நேரடியான வேலைவாய்ப்புகளுடன் மறைமுகமானவேலை வாய்ப்புகளுக்கும், கிராமிய அபிவிருத்திக்கும், கைத்தொழில் அபிவிருத்திக்கும் தேவையான மின்சாரத்தை வழங்குவதற்கும் ஏராளமான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகிறது. இதன்படி, முதலீடுசெய்வதில் அரசாங்கம் மகாவலித் திட்டத்துக்கு அளித்துள்ள முதலிடத்தை, சவிஸ்தாரமான பொருளாதார வளர்ச்சிக்கு அத்திட்டம் செய்யக்கூடிய கணிசமான பங்களிப்பு, நாட்டை எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அது நல்கக்கூடிய உதவியின் சாத்தியப்பாடு ஆகிய அமையில் வைத்து நோக்கவேண்டும். மேலும், அத்திட்டத்தில் பெருந்தொகையான நிதிகள் ஏற்கெனவே செலவிடப்பட்டுள்ளனவாதலின், மேற்கொண்ட இக்கட்டுப்பாட்டிலிருந்து பின்னிடுதல் நிதிவளங்களை ஒப்பியல் ரீதியாக வீண் விரயம் செய்ததாக முடியும்.

உற்பத்திக்குதவும் உள்ளமைப்பை அல்லது பொருளாதார மேந்தலைகளை ஏற்படுத்தும் நோக்கங்களுக்காக, வரவு செலவுத்திட்டத்தில் 410 கோடி ரூபா ஒதுக்கப்படுகிறது. இது மொத்த மூலதனச் செலவில் ஏறக்குறைய 20 சதவிகிதமாகும். ஒதுக்கப்பட்ட இந்த நிதிகள் கீழ்க்கண்டவற்றிடையே பிரிக்கப்படுகின்றன.

(1) புகைவண்டிப் பகுதிக்கும் போக்குவரத்துச் சபை வாகனங்களுக்கும் கையிருப்பிலுள்ள தளவாடங்களுடன் மேலதிகமாகப் புதிய உபகரணங்களைச் சேர்ப்பது உட்படப்போக்குவரத்து அபிவிருத்தி (93 கோடி 60இலட்சம் ரூபா); மின்சார வழங்கலை விருத்தி செய்து, விநியோகித்தல் (78 கோடி 80 இலட்சம் ரூபா); (3) நீர்வழங்கல் அபிவிருத்திகள் (132 கோடி ரூபா); சாலைகளையும் பாலங்களையும் பொதுக் கட்டடங்களையும் நிர்மாணித்தலும் அபிவிருத்தி செய்தலும் (100 கோடி 70 இலட்சம் ரூபா). கீழ்க்கண்டன உட்படப் பல காரணங்களுக்காக, இத்தகைய முதலீடுகள் பொருளாதார அபிவிருத்திக்கு உயிர் நாடியாகும்: (1) பௌதிக உள்ளமைப்புகளை நிர்மாணித்து, அவற்றை அபிவிருத்தி செய்வது, நாட்டின் மூலதன இருப்புக்கு உதவுகின்றது. (2) பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைந்தால், பொருள்கள், வணிகப் பண்டங்கள், சேவைகள் ஆகியவற்றின் உற்பத்தி–விநியோக–சந்தைப்படுத்தும் முறையில் இத்தகைய வசதிகளை உபயோகிக்க வேண்டியிருக்கும். மேலும், வழக்கமாகத் தனியார்துறை இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை. ஏனென்றால் கனத்த மூலதனத் தேவைகள் நேரடியான இலாபங்களை வழங்குவதில்லை. அத்துடன், இந்த அபிவிருத்திகளின் நன்மைகள் குடிமக்களெல்லோரிடையே இல்லாவிட்டாலும் அவர்களில் அதிகமானவர்களிடையே பரவிவிடுகின்றன.

சுகாதாரம், வைத்தியப் பராமரிப்பு, கல்வி ஜனசமூக சேவைகள் போன்ற, அடிப்படைச் சமூக சேவைகளை வழங்குவது பொதுத்றையின் இன்னொருமுக்கியமான பொறுப்பாகும். கல்விக்கு (43கோடி 40 இலட்சம் ரூபா) என்றும், சுகாதாரத்துக்கு (82 கோடி 60 இலட்சம் ரூபா) என்றும் பிரித்து, இச்சேவைகளுக்கு 126 கோடி ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது. 1970 ம் ஆண்டிலிருந்து பெரும்பாலான வருடங்களுடன் ஒப்பிடுகையில், அரசாங்கம் இச்சேவைகளுக்குச் சுமார் 6 சதவிகித நியாயமான பங்களிப்புச் செய்துவருகிறது. நேரடியாக உற்பத்திக்குதவும் திட்டங்கள் மீதான முதலீடுகள் தொடர்பாகச் சமூக மேந்தலைகள் மீதான முதலீடுகளின் உயர் சந்தர்ப்பச் செலவுகள் இருந்த போதிலும் அரசாங்கம் இவ்வுதவி செய்து வருகின்றது. சமூக மேந்தலைகள் என்று ஓரளவுக்குக் கருதக்கூடிய வீடமைப்புஅபிவிருத்திஅரசாங்கத்தின் இன்னொரு முன்னணித் திட்டமாகும். ஆனால், இதற்கு ஒதுக்கப்படும் பணத் தொகை படிப்படியாகக் குறைக்கப் பட்டு வருகிறது. ஏனென்றால், தேசிய வீடமைப்பு அதிகார சபை வர்த்தக முறையில் வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் முயற்சியில் இப்பொழுது இறங்கியுள்ளது. வீடுகளை விற்பதன் மூலம் கிடைக்கும் இலாபங்களிலிருந்து (குறைந்த செலவிலான) வீடமைப்புத்திட்டங்களின் செலவை ஈடு செய்ய இது வீடமைப்பு அதிகார சபைக்கு வசதியளிக்கின்றது.

கைத்தொழில் அபிவிருத்தியில் நேரடியாகப் பங்குபற்றுவதற்கு அரசாங்கம் குறைவான முக்கியத்துவமே அளித்துள்ளதென்பது, பாதீட்டில் ஒப்பியல் ரீதியாகக் கைத்தொழில்களுக்குச் சிறு தொகையே ஒதுக்கப்பட்டிருப்பதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. தற்போதைய அரசாங்கம் பின்பற்றிவரும் கட்டுப்பாடற்ற தாராளமாக்கியகொள்கையின் கீழ் விவசாய, கைத்தொழில் உற்பத்தியைப் பெருக்குதில் தனியார் துறை அதிக பங்கெடுத்துக் கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆதரவளிக்கும் சேவைகளை வழங்குவதன் மூலம் அரசாங்கம் தனியார்துறையின் விஸ்தரிப்பை பலப்படுத்துகின்றது.

## பாதீட்டுக்குப் பணம் காணல்

வ. செ. திட்ட உரை நிகழ்த்தப்படுவதற்குப் பல நாட்களுக்கு முன்பே தயாரிக்கப்பட்ட நகல் மதிப்பீடுகள் வருமான வழிகளிலிருந்து 2010 கோடி ரூபா கிடைக்குமென்று அறிவித்தன. நகல் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட சமயத்தில் நிலவிய வரியமைப்பின் ஊகங்களை அடிப்படையாகக் கொண்டே இவ்வருமானம் மதிப்பிடப்பட்டது. அறிவிக்கப்பட்ட இந்த நகல் மதிப்பீட்டில் முன்னெப்போதும் காணாத சுமார் 2900 கோடி ரூபா பற்றுக்குறை எதிர்பார்க்கப்பட்டது. பற்றுக்குறையை நிரப்புவதற்கு நிதியமைச்சரே பொறுப்பாளி. இதற்காக அவர் தெரிவு செய்யக்கூடிய வழிமுறைகள் வரையறுக்கட்டவை — (1) உள்நாட்டு வருமானத்தை அதிகரித்தல் (2) வெளிநாட்டு உதவியைத் திரட்டல், (3) வங்கியில்லாத உள்நாட்டுத் துறையிலிருந்து கடன் பெறுதல் (4] உள்நாட்டு வங்கித்துறையிலிருந்து கடன் பெறுதல் (5)மேலதிக திறைசேரி உண்டியல்களை வெளியிடல் எனினும், மொத்த வருமானத்தை மதிபிடப்பட்ட தொகையான 4800 கோடி ரூபாவுக்கு அதிகரிக்க அமைச்சர் முதல் மூன்று வழிகளையே நாடுவதெனத் தீர்மானித்துள்ளார்; ஆனால், இதற்குப்பின்னரும், சுமார் 140 கோடி ரூபா அளவுக்கு நிதி காணப்படா இடைவெளி இருந்து வருகிறது.

நிதிமந்திரி முதலில் வருமானத்தை அதிகரிப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்துள்ளார். வருமானத்தை அதிகரிக்க மறைமுக வரிகள் விதிப்பதே தெளிவான வழியென ஆராய்ந்திருக்கிறார். பற்றுக்குறையைச் சரிக்கட்டுவதற்கு இது அவ்வளவு திருப்திகரமான ஏற்பாடாக இல்லாதிருந்த போதிலும், மேலதிக வருமானம் பெறுவதற்குக் கூறப்படும் நியாயம் மொத்த வருமானத்தில் மறைமுக வரிகளின் பங்கு ஒப்பியல் ரீதியாக அதிகமாயுள்ளதென்பதிலிருந்தே பிறப்பதாகத் தோன்றுகிறது. இதன்படி, மறைமுக வரிகளை மாற்றியமைத்தால், அதன் விளைவாக மற்றும் வருமான வழிகளுடன் ஒப்பிடுகையில் வருமானம் அதிகரிக்கும். மேலும், நேரடி வரிகளை மேல் நோக்கி மாற்றியமைக்கும் நடவடிக்கை, குறிப்பாக, நாட்டுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் பொருளாதார விரிவாக்கத்துக்கு ஆதரவாக, அதிகமான தனியார் முதலீடுகளைத் தூண்ட அரசாங்கம் முயன்று வரும் ஒரு சமயத்தில், தனியார் துறையில் முதலீடு செய்யப்படுவதைத் தடுக்குமென்பதில் சந்தேகமேயில்லை.

மறைமுக வரிகளிலிருந்து மேலதிக வருமானத்தைக் கொண்டு வருவதில் அமைச்சர், நுகர்வு, இறக்குமதிகள் ஆகிய இரு துறைகள் மீது வரிகளை விதிப்பதில் விசேட கவனஞ் செலுத்தியுள்ளார். எனினும், இவ்விரு இனங்கள் மீதான வரிமாற்றங்கள் 1983 ம் வருடம் பெப்ரவரி மாத மத்தியில் ஒரு வர்த்தமானி அறிவிப்பு வாயிலாகக்கொண்டு வரப்பட்டன. இதைப்பொது மக்கள் "நள்ளிரவு வர்த்தமானி" என்றே பொதுவாக அழைக்கிறார்கள். முன்னைய நிதியமைச்சர்களில் பெரும்பாலோர் வரிகளிலிருந்து மேலதிக வருமானத்தைப் பெற சில மக்கட் குழுக்களைப்பொறுச்

கியெடுத்துத் தண்டித்தார்கள். இப்படித் தெரிந்தெடுக்கப்பட்ட குழுக்கள்: புகைஞர்கள், மதுவருந்துவோர், ஆடம்பரப் பொருள்களையும் உபகரணங்களையும் வாங்குவோர், இருப்புச் சொத்துக்களும் ஆதனங்களும் உடையவர்கள் ஆகியோராவர். எனினும், அமைச்சர் இவ் வருடம் அரிசி, கோதுமை மா, சீனி, பாண் உட்பட அடிப்படை உணவுப்பொருள்கள் போன்ற இதற்கு முன்பு தட்டிப் பார்க்கப்படாத மூலங்களில் கண்ணோட்டத்தை செலுத்தியதன் மூலம் இந்தப் பாரம்பரிய நியமத்திலிருந்து விலகிச் சென்றுள்ளார். இப் பொருள்கள் விற்பனை வரியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இதனால் நுகர்வோர் ஒவ்வொரு பொருளின் மீதும் விதிக்கப்படும் வரியைப் பூரணமாக ஏற்கவேண்டியிருக்கும். இத்துடன், நுகர்பொருள்கள் மீதும் மூலப்பொருள்கள் மீதும் மாற்றியமைக்கப்பட்டுள்ள இறக்குமதித் தீர்வைகளில் நுகர்வோர் நேரடியாக மட்டுமன்றி மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும், அமைச்சர் உற்பத்தியாளர்களைத் தாக்காது தவிர்த்துள்ளார். 1983 ம் ஆண்டில் உற்பத்தி மீது எந்தப் புதிய வரிகளும் விதிக்கப்படவில்லை. ஆனால், பெற்ரோலியம் போன்ற மூலப் பொருள்களின் விலை உயர்வால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவார்கள். இது முறையே நுகர்பொருளின் விலை உயர்வில் வந்துமுடியும்.

இந்த நடவடிக்கைகளால் மேலதிக வருமானமாக ஏறக்குறைய 370 கோடி ரூபா கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. பாதீட்டுச் செலவுகளுக்கு நிதியளிக்க நிதியமைச்சர் இன்னொரு புதிய வட்டாரத்தையும் பிடித்தார். அஃதாவது, மத்திய வங்கியின் இலாபங்கள். மத்திய வங்கியின் 150 கோடி ரூபாவை அரசாங்கத்தின் வருமானத்துக்கு மாற்றும் அதே சமயத்தில், திறைசேரி உண்டியல் சம்பந்தமாக மத்திய வங்கி அரசாங்கத்துக்கு நிறைவேற்ற வேண்டிய கடப்பாடுகளில் அதேபோன்ற ஒரு தொகையைக் குறைக்குமாறு மத்திய வங்கி விடுத்த வேண்டுகோளை நிதியமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளார். இந்தப் பாதீட்டு யோசனைகள் அரசாங்க வருமானத்தை நகல் மதிப்பீட்டிலுள்ள தொகையான 2010 கோடி ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2600 கோடி ரூபாவுக்கு அதிகரிக்குமென மதிப்பிடப்படுகிறது. அதே சமயத்தில், அரசாங்க வருமானத்தில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பு பாதீட்டுப் பற்றுக் குறையை அசல் மதிப்பீட்டிலுள்ள தொகையான 2900 கோடி ரூபாவிலிருந்து ஏறக்குறைய 2300 கோடி ரூபாவுக்குக் குறைத்துவிடுகிறது.

நகல் மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டுள்ள புள்ளி விபரங்களின்படி, பூரணகொடைகளாக வழங்கப்பட்ட 220 கோடி ரூபா உட்படத் திட்டக்கடன் உருவிலும் வணிகப் பொருள்கடன் உருவிலும் வெளிநாட்டு வட்டாரங்களிலிருந்து கிடைத்த ஏறக்குறைய 1000 கோடி ரூபாவைப்பயன்படுத்த அரசாங்கம் திட்டமிட்டது. எதிர்பார்க்கப்படும் செலவுகள் இப்பொழுது மேல் நோக்கி 1400 கோடி ரூபாவாக மாற்றியமைக்கப்பட்டுள்ளதால், வெளிநாட்டு உதவி அதிக அளவில் பயன்படுத்தப்படுமெனஅமைச்சர் இப்பொழுது எதிர்பார்க்கிருர். இந்த மேலதிக தொகையான 400 கோடி ரூபா 1982 ம் ஆண்டிலும் 1982 க்கு முந்திய வருடங்களிலும் பயன்படுத்தப்படாத வெளிநாட்டு உதவியிலிருந்து வருவதாகத் தோன்றுகிறது. உதாரணமாக 1982 ம் வருட முடிவு வரை திரண்டுள்ள பயன்படுத்தப்படாத வெளிநாட்டு உதவியின் மதிப்பு நடப்பு விலைகளில் மொத்தம் 2000 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகையாகும்; 1982 ம் ஆண்டில் மட்டும் ஏறக்குறைய 400 கோடி ரூபா பயன்படுத்தப்படவில்லையெனத் தோன்றுகிறது. இவ்விதம் சேர்ந்துள்ள வெளிநாட்டு உதவி பாதீட்டுக்கு ஆதரவளிக்கக்கூடிய ஓர் ஆதாரமாயிருந்த போதிலும், அதனைத்திரட்டும் முயற்சி சற்றே வரையறுக்கப்பட்டதாயுள்ளது. ஏனென்றால், குறிப்பாகத் திட்ட உதவியின் விஷயத்தில் அரசாங்கம் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் உள்ளன. திட்ட உதவி பல சந்தர்ப்பங்களில் அபிவிருத்தித் திட்டங்களுடன் பிணிக்கப்பட்டுளளது.

உள்நாட்டு வங்கியல்லாத வட்டாரத்திலிருந்து கடன் பெறுவது, பாதீட்டுக்கு நிதியளிப்பதற்கு மிகக் கிரமமான ஒரு வழியாகும். 1983 ம் ஆண்டில் ஏறக்குறைய 800 கோடி ரூபா இவ்வழியிலிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. வரவு செலவுத்திட்டம் சம்பந்தமாக அரசாங்கத்துக்கு ஆதரவு பிரதானமாக (1) சேமிப்பு ஸ்தாபனங்கள் (2) காப்புறுதி நிதியங்கள் (3) சேமலாப, ஓய்வூதிய நிதியங்கள் ஆகியவற்றிலிருந்தே கிடைக்கின்றது. கடந்த காலத்திலே கடன் பெறுவதற்கு ஒரு நிரந்தர வழியாயிருந்த வங்கித் தொழில் வட்டாரத்திலிருந்து எந்தக்கடனும் வாங்க அரசாங்கம் திட்டமிடவில்லையென்பது ஆச்சரியமளிக்கிறது. வர்த்தக வங்கிகளிடமிருந்து உதவி பெறுது அரசாங்கம் எந்த அளவுக்கு நிலைமையைச் சமாளிக்கும் என்பது இனித்தான் தெரியும்.

**பொருளாதாரத்தின் மீது வ. செ. திட்டத்தின் செல்வாக்கு**

இலங்கையின் வருடாந்த பொதுச் செலவுத் திட்டம் கடந்த சில வருடங்களில் துரிதமாக வளர்ந்து வந்துள்ளது.

உதாரணமாக, 1982 ம் வருட வரவு செலவுத்திட்டம் 1981 ம் ஆண்டின் வரவுசெலவுத்திட் டத்துக்குமேல் 32 சத விகிதம் அதிகரித்தது; 1983 ம் வருட வரவுசெலவுத்தி ட டம் 1982ம் வருடவரவு செலவுத்திட்டத்துக் கு மேல் 27 சதவிகிதம் அதிக ரித்துள்ளது. இந்த அதிகரிப்பு மீளவரும் செலவுகள் துரித மாக வளர்ந்து வந்துள்ளதைப் பெருமளவுக்குப் பிரதி பலிக் கின்றது. மீளவரும் செலவு களில் ஏற்பட்டுவரும் துரித மான வளர்ச்சிக்கு, (1) சேவை கள் பராமரிப்பு முதலியவற் றின் செலவுகள் அதிகரித்த தன் விளைவாகப் பொருளா தாரத்தில் தோன்றியுள்ள பணவீக்கப் போக்குகள், (2) புதிய அபிவிருத்தி நடவடிக்கை களுக்குத் தேவையான புதிய செலவுகள், (3) வெளிநாட்டுக் கடன்கள், உள்நாட்டுக் கடன் கள் ஆகிய இரண்டின் மீதும் வட்டிக் கொடுப்பனவுகளுக்கா கப் பாதீட்டில் ஒதுக்கப்படும் தொகைகள் படிப்படியாக அதி கரித்து வருவது ஆகியனவே காரணங்களாகும். பொரு ருளாதாரத்தில் நிர்வாக, பொ ருளாதார, சமூக, சேமநல சேவைகளை ஏற்படுத்துவதற் கும், கடன்கள் சம்பந்தமான கடப்பாடுகளை நிறைவேற்று வதற்கும் இத்தகைய செலவு கள் அவசியமாயிருப்பதன் கரணமாக, வரவு செலவுத் திட்டத்தின் ஒரு கூருன மீள வரும் செலவுகளை நிச்சயமாக வெட்ட முடியாது.

மீளவரும் செலவுகள் துரித மாக வளர்ந்து வரும்போது, நாடு செய்ய வேண்டிய தியா கம், குறிப்பாகக் கடும் நிதி நிர்ப்பந்த நிலைமைகளின் கீழ் நீண்டகால பொருளாதார அபிவிருத்திக்காகச் செய்யப் பட்ட முதலீடுகளிலிருந்தே அடிக்கடி வருகிறது. இதி லுள்ள வேடிக்கை என்ன வென்றல், நீண்ட காலபொரு ளாதார அபிவிருத்தி மீது போதிய பணம் செலவிடா மல், ஒரு நாடு அதனை நெருக்கி வரும் பொருளாதார, சமூகப் பிரச்சினைகளைத் திருப்திகரமா கத் தீர்க்கமுடியாது. இந்நிலை மைகளை எதிர்நோக்கும்போது பெரும்பாலான வளர்முக நாடுகள் பொருளாதார அபி விருத்தி மீது முதலீடுசெய்வ தற்கான நிதிகளுக்காக உள் நாட்டு வட்டாரங்களில் மட்டு மன்றிச் சர்வதேச வட்டாரங் களிலும் கடன் வாங்க முடிவு செய்கின்றன. மறுபக்கத்தில் பல சந்தர்ப்பங்களில் பொரு ளாதாரத்திலே பாதகமான நிலைமைகள் தோன்றுவதற்கு அடிகோலுகின்றது. அதிக பணவீக்கமும் பலமில்லாத சென்மதி நிலுவைகள் நிலை யும் இதைப் பிரதிபலிக்கின் றன எனவே, நன்மைகள், செலவுகள் ஆகிய இரண்டை யும் மதிப்பாய்வு செய்தவற்கு பொதுச் செலவுகள் ஒரு கூட் டுக் கோணத்திலிருந்து நோக் கப்படல்வேண்டும்.

## (அ) உற்பத்தியும் வேலை வாய்ப்பும்

மூலதனச் செலவுகள். நாட்டிலுள்ள மூலதன இருப்பு களைப் பெருக்குவதற்காக நிதி வளங்களைத் தற்போதைய நுகர்விலிருந்து பெயர்க்கின் றன. எதிர் காலத்தில் உற் பத்தியை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும். அப்போது குடிமக்கள் உயர் நுகர்வு மட் டங்களை அனுபவிக்க வசதிப் படும். மூலதனச் செலவுகள் தொடர்ந்து வலியுறுத்தப் பட்டு வருவதற்கு இதுவே பிர தான காரணமாகும். ஏனென் ருல், மூலதனச் செலவுகள் நாட்டின் பொருளாதார முன் னேற்றத்துக்கு உதவுகின்றன. குறுகிய காலத்திலே, மூலத தனச் செலவுகள் அதிக வேலை வாய்ப்புகளை உண்டாக்குவ துடன் மூலப் பொருள்களுக்கு அதிகரித்த கிராக்கியையும் சிருஷ்டிக்கின்றன. இந்த விரு த்திகளை வருமானப் பக்கத்தி லிருந்து நோக்கும் போது, மூலதனச் செலவுகள் அதிக ரித்த வருமானங்களுக்கு அடி கோலுகின்றன என்பது வெளி ப்படை.. இது முறையே நுகர் வும் உற்பத்தியும் அதிகரிப்ப தற்கான தூண்டுகோலாகவும் செயல்படுகிறது. நீண்டகா லத்திலே, மூலதனச் செலவு கள், கட்டடங்கள், சாலைகள், அணைக்கட்டுகள், தளபாடங் கள், இயந்திரங்கள் போன்ற சமூகப் பொது முதலீடுகளின் தோற்றமும் அபிவிருத்தியும் பிரதிபலிப்பது போல மூலதன வாக்கம் அதிகரிப்பதற்கும் உதவுகின்றன. அதிகரித்த மூலதனவாக்கம் புதிய உற் பத்தி எல்லைகளுக்குள் பிரவே சிக்க ஒரு நாட்டுக்கு உதவுகின் றது. இதனுல், உற்பத்தி படிப் படியாக அதிகரித்து, அதன் மூலம் நுகர்வுக்கு அதிக பொ ருள்களும் சேவைகளும்கிடை ப்பதற்கு வழிபிறக்கின்றது. மேலும், பொதுத் துறை யில் நடைபெறும் மூலதன னச் செலவுகள்தனியார்துறை யில் விரிவாக்கம் நடைபெறத் தூண்டுகிறது. இதன் பயனுக பொதுத் துறையில் மூலதன வாக்கம் நிகழ்கின்றது.

மூலதனப் பாதீட்டில் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தபோ திலும், புதிய திட்டங்கள்மீது எந்தப் புதிய முதலீடுகளும் செய்யப்படமாட்டா. பணநிரம் பல் துரிதமாக அதிகரித்து, 1980 ம் ஆண்டிலும் 1981ம் ஆண்டிலும் பணவீக்கம் ஏற் பட்டதையடுத்து, 1981 ம் ஆண்டில் புதிய திட்டங்கள்மீது புதிய முதலீடுகள் செய்வதி தில்லையென மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கை தொடர்ந்து அமுலாகி வருகிறது. எனி னும், இத்தகைய் கட்டுப்பாடு கள் குறிப்பாக, கட்டுப்பாடற்ற பொருளாதார முறையின் கீழ் அதிக வேலை வாய்ப்புகள் தோன்றுமென்ற எதிர்பார்ப்பு களுக்குப் பேருக்கம் அளிக்கப் பட்டிருக்கும்போது, நாட்டில் பொருளாதார முன்னேற்றத் தைப் பெரிதும் பாதிக்கலாம்.

புதிய அபிவிருத்தி நடவடிக்கைகள் இல்லாவிட்டால், குறுகிய காலத்திலேனும், பொதுத் துறையில் நேரடியான வேலை வாய்ப்புக்களும் பொருளாதாரத்தின் ஏனைய பகுதிகளில் மறைமுகமான வேலைவாய்ப்புக்களும் தோன்றுவதுபடிப்படியாகக் குறைந்து வரும். ஏறக்குறைய 1981 ம் ஆண்டுக்குப் பின்னர் பொருளாதார வளர்ச்சி குன்றியுள்ளதற்கும் வேலை வாய்ப்புகள் தளர்ந்துள்ளதற்கும் புதிய திட்டங்களில் முதலீடு செய்யப்படாமையே ஓரளவுக்குக் காரணமாகும். தளர்ச்சியுறும் செயற்பாடுகள், வரும் வருடங்களில், குறிப்பாக வேலை வசதித் துறையில் பேராபத்தை உண்டாக்கலாம். ஏனென்றால், இப்பொழுது நடைபெற்றுவரும் செய்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டதும் ஆட்குறைப்பை எதிர்நோக்கக் கூடிய தொழிலாளர்படைக்கு மீண்டும் வேலைகளைத் தேடல் போன்ற புதிய பிரச்சினைகளை அரசாங்கம் எதிர்நோக்கவேண்டியிருக்கும்.

பொருளாதாரத்தில், குறிப்பாக உற்பத்தி துறையிலும் வேலைவாய்ப்புத் துறையிலும் தனியார் துறையின் பங்களிப்பு அரசாங்கத்துறையின் பங்களிப்பைக் குறிப்பிடத்தக்க அளவுக்கு மிஞ்சியுள்ளது. மொத்த மூலதன இருப்புகளில் தனியார் துறையின் 70 சத விகிதப் பங்கையும் மொத்தத் தொழிலாளர்படையில் தனியார் துறையின் 80 சத விகிதப் பங்கையும் அளவு கோல்களாகக் கொண்டு பார்க்கும்போது, பொருளாதாரத்தில் தனியார் துறை எடுத்துவரும் முதன்மையான பங்கு தானாகவே விளங்குகிறது. ஆதலால், பொதுச் செலவுகள் வெட்டப்பட்டால், பொருளாதாரத் துறையில் செயற்பாடுகள் மந்தகதியை அடையத் தேவையில்லை. ஆனால், அதன்விளைவாக, பொருளாதாரத்தில் தனியார் துறையின் விரிவாக்கம் ஏற்படவேண்டும். தனியார் துறையின் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கத்திற்காகவே தற்போதைய தாராள அமைப்பில் அத்துறைக்குப் பல்வேறு உற்பத்தி ஊக்கச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

துர்ரதிர்ஷ்டவசமாக, இத்தகைய தூண்டுதல்கள் ஆமை வேகத்திலான பிரதிபலனையே பெற்று வருவதாகத்தோன்றுகிறது. ஏனென்றால், உற்பத்தியாளர்கள் உயர்வான உற்பத்திச் செலவுகளை எதிர்நோக்கிவருகிறார்கள். உற்பத்திச் செலவு உயர்வு அவர்களுடைய வர்த்த முயற்சிகளின் இலாபத்தன்மையைக் குறைத்து வருகின்றது. மேலும், உற்பத்திச் செலவுகள் அதிகரிப்பதனால், உற்பத்தியாளர்களுக்கு அளிக்கப்படும் ஊக்கச் சலுகைகளின் பயன்படுதிறன் படிப்படியாக அதிகரிக்கப்பட்டுவருகிறது. அத்துடன், இறக்குமதி தீர்வைகள் அதிக குறைக்கப்பட்டுள்ளதாகக் குடிரிக்கப்பட்டிருந்தபோதிலும், உற்பத்தியாளர்கள் இறக்குமதிகளிலிருந்து மிகக்கடுமையான போட்டியையும் எதிர்நோக்குகின்றனர். எனினும், வரவு செலவுதிட்டத்தில் உற்பத்துயாளருக்கு உற்சாகம் அளிக்கவல்ல ஒரு சில அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. ஏற்றுமதியாளர்களுக்குப் புதிய ஊக்கச் சலுகைகளை வழங்குவதன் மூலம் ஏற்றுமதிகளைப் பெருக்க அரசாங்கம் திட்டமிட்டுவருகிறது. ஆனால், இந்தத் தூண்டுதல்கள் இன்னும் அறிவிக்கப்படவில்லை. எனினும், இந்த ஊக்குவிப்புக்கள் தனியார் துறையில் உற்பத்தியிலும்வேலை வாய்ப்புக்களிலும் அரும்பொட்டான அபிவிருத்தியையேனும் ஏற்படுத்துமென நம்பலாம். நெல் உற்பத்திப் பெருக்க முயற்சியைத் தூண்டுவதற்காக நெல்லின் தரை மட்டவிலையில் ஐந்து ரூபா அதிகரிக்கப்பட்டுள்ளதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த அதிகரிப்பை உயர்ந்து வரும் உள்ளீடுகளின் விலைகளும் சந்தைப்படுத்தும் செலவுகளும் உறிஞ்சிவிடக் கூடும். இதே போல, தேயிலை, ரப்பர் ஆகியவற்றின் மறுநடுகைக்கான மானியத்தில் அதிகரிக்கப்பட்டுள்ள தொகையின் பெரும் பகுதியையும் உயர்ந்து வரும் மறுநடுகைச் செலவுகள் உறிஞ்சி விடலாம்.

உற்பத்தி, வேலைவாய்ப்புத் தொடர்பில் வரவு செலவுத் திட்டத்தைப் பகுத்துப் பார்க்குமிடத்து, அதில் உருப்படியாக ஒன்றுமில்லை. இதன்படி, ஏற்கனவே வேலையில் அமர்ந்திருப்பவர்களுக்கு மட்டுமென்றி இப்பொழுது தொழிலாளர்படையில் சேர்ந்துவருவோருக்கும் வரவு செலவுத்திட்டம் அவ்வளவாக நம்பிக்கையூட்டுவதாயில்லை. 1977 ம் ஆண்டுக்குப் பின்னர் பொருளாதாரத்தில் உண்டாக்கப்பட்ட பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட வேலைகளின் விளைவாக, வேலையற்ற தொழிலாளர்களின் தொகை ஏறக்குறைய 8,45,000 க்குக் குறைக்கப்பட்டுள்ளதாகக் குடிஜன மதிப்பு–புள்ளி விவரத் திணைக்களம்தெரிவித்துள்ளது. ஏறக்குறைய 1981 ம் ஆண்டு வரை தொழிலாளர் படையில் சேர்ந்த புதியவர்களில் கிட்டத்தட்ட எல்லோரையும் உட்கிரகித்துக்கொள்ளவும் பொருளாதாரத்தினால் முடிந்தது. எனினும், வேலை சிருஷ்டிப்பில் பெரும் பற்றாக்குறை நிலவுவதாகச் சமீபத்திய செய்திகள் எடுத்துக்காட்டுகின்றன. இது பிரச்சினையின் ஒரு பகுதி மாத்திரமேயாகும். தற்போது, 10 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்டவர்களில் ஏறக்குறைய 15 இலட்சம் பேர் ஒன்றில் பாடசாலைக்குப் போகாமலோ அல்லது வேலையில்லாமமோ இருக்கின்றனர். அவர்களுடைய அந்தஸ்து பற்றிய விவரம் அவ்வலவு தெளிவாகத் தெரியாதபோதிலும், வாய்ப்புக்கிடைத்தால் அவர்

களில் பெரும் பாலோர் வேலை களை ஏற்பர் என்பது திண்ணம். வேலையில் அமர்ந்திருப்பவர்களிடையே கூட ஏறக்குறைய 60த் வீகிதத்தினர் மட்டுமே குறைந்த பட்சம் 37 வாரங்களுக்காவது வேலைப்புள்ள தொழில்களில் அமர்ந்துள்ளனர். எனவே, இதிலிருந்து போதிய வேலையில்லாக் குறை வேலையில்லாத்திண்டாட்டத்தைப் போலவே கடுமையாயிருந்து வருகிறதென்பது தெளிவு.

பொருளாதாரத்தில் உற்பத்தியையும் வேலை வாய்ப்புக்களையும் அதிகரிப்பதாயின், உற்பத்திச் செலவுகள் மீது உற்பத்தியாளர்களுக்கு அதிக கட்டுப்பாட்டதிகாரத்தை அனுமதிப்பதற்காக அடிப்படை மூலப்பொருள்களில் மாற்று விலை நிர்ணயக் கொள்கைகளைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்கவேண்டும்; இது முக்கியமாகும். ஏனென்றால், எந்தப் பொருளின் விலை நிர்ணய்த்திலும் உற்பத்திச் செலவுகளே பிரதான காரணியாக இருக்கின்றன. உற்பத்தியாளர்கள் தங்களுடைய உறபத்திப் பொருள்களின் உயர்விலைகள் காரணமாக அவற்றைச் சந்தைப்படுத்துவதில் பெருங் கஷ்டங்களை எதிர்நோக்குகிறார்களென்றால் உற்பத்திப் பொருட்கள் தவிர்க்க முடியாதனவாகும். இந் நிலைமைகளில்; தனியார் முதலீடுகளுக்கு அபாய எதுக்கள் அதிகரிக்குமென்பது நிச்சயம். ஆதலால், முதலீடுகளை மேலதிகமாகத் திரட்டுவதென்பது மிகக்கடினமான காரியமாகும்.

**(ஆ) பணவீக்கம்**

பாதீட்டுக்கு நிதி காணும் வழிகள் வெளிநாட்டு உதவியாகவும் வங்கியல்லாத வட்டாரங்களிலிருந்து கடன் பெறுவதாகவும் அமைந்திருப்பதால் மேலெழுந்தவாரியாக நோக்கும்போது, பாதீடு விரிவடையும் தன்மையுள்ளதல்லவெனத் தோன்றுகிறது. ஆதலின் வரவு செலவுத்திட்டம், கடந்த சில ஆண்டுகளில் போல, பொருளாதாரத்தின் மீது அவ்வளவு பணவீக்க நெருக்கலை உண்டாக்கமாட்டாது. எனினும் இந்தப் பாதீடும் வங்கிக்கடன்களைப் பெருமளவுக்குச் சார்ந்திருக்க வேண்டியிருக்காதென்பது மிகவும் சந்தேகம். நிதிகளைக் காண்பதில் பற்றுக்குறை ஏற்படக்கூடிய சாத்தியக் கூறு பலமாயிந்தால், இந்த நியாய விளக்கம் தோன்றுவதற்கும் இடமுணடு. ஏனென்றால், (1) 1983 ம் வருடத்துக்கான 2600 கோடி ரூபா வருமான மதிப்பீடு சற்றும் யதார்த்த நிலையை எடுத்துக்காட்டுவதாக தோன்றவில்லை (2) வெளிநாட்டு உதவி உண்மையில் பயன்படுத்தப்படும் அளவு எதிர்பார்க்கப்படுவதை விட மிகக் குறைவாயிருக்கக்கூடும் (3) விடுகைகளாலும் (கணக்கில் சேர்க்காது விடப்பட்டவை) பொதுச் செலவுகள் குறைவாக மதிப்பிடப்பட்டதன் காரணமாகவும், நிதி காணப்படா இடைவெளி எதிர்பார்க்கப்பட்டதைவிட வெகு அதிகமாயிருக்கும்.

எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளிலிருந்து வருமானப் பற்றுக் குறைகள் கடந்த காலத்தில் சர்வசாதாரணமாக ஏற்பட்டுள்ளன. உதாரணமாக, 1982 ம் ஆண்டில் ஏறக்குறைய 160 கோடி ரூபா வருமானப் பற்றுக்குறை பதிவு செய்யப்பட்டுள்ளது. ஏனென்றால், திருத்தியமைத்த வருமானப் பெறுவனவுகள் 1982 ம் ஆண்டில் ஏறக்குறைய 1800 கோடி ரூபாவை மட்டுமே காட்டுகின்றன. இது நாட்டின் மொத்தப் பொருளாக்கத்தில் மதிப்பிடப்பட்ட 18 சத விகிதப்பங்காகும். உண்மையான வளர்ச்சி விகிதம் ஏறக்குறைய 5 சதவிகிதம் என்றும் பணவீக்க விகிதம் ஏறக்குறைய 20 சதவிகிதம் என்றும் வைத்துக்கொண்டால் 1983 ம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வருமான மதிப்பீடான 2600 கோடி ரூபா, பருமட்டாக 1983 ம் வருடத்துக்கான நாட்டின் மொத்த பொருளாக்கத்தில் ஏறக்குறைய 23 சதவிகிதமாகின்றது. நாட்டின் மொத்தப் பொருளாக்கத்தில் ஒரு பங்காக வருமானம் 1978 ம் ஆண்டில் வகித்த 27 சதவிகிதப பங்கிலிருந்து 1982ம் ஆண்டில் 18 சத விகிதத்துக்குக் குறைந்துள்ள போக்கைக் கவனிக்குமிடத்து, 1983 ம் ஆண்டு வருமானத்தில் 800 கோடி ரூபாவை அதிகரிப்பது சாத்திய மல்லவென்றேதோன்றுகிறது

எதிர்பாரக்கப்படும் வெளிநாட்டு உதவியைப் பயன் படுத்தும் திருத்தியமைக்கப்பட்ட அளவு 1983 ம் ஆண்டில 1000 கோடி ரூபாவிலிருந்து 1400 கோடி ரூபாவுக்கு அதிகரித்தது. இந்த மேலதிகத் தொகை கடந்த காலத்திலிருந்து முன் கொணரப்பட்ட தொகைகளைக் கொண்டு ஆக்கப்பட்டுள்ளதாகத் தோன்றுகிறது. இதில் 1982 ம் ஆண்டில் மட்டும் பயன்படுத்தப்படாத 400 கோடி ரூபாவும் சேர்ந்திருக்கிறது. 1982 ஆண்டில் 400 கோடி ரூபா வெளி நாட்டு உதவி குறைவாக பயன்படுத்தப்பட்டுள்ளதையும், மொத்தத்தில் 250 கோடி ரூபா குறைவாகச் செலவிடப்டுள்ளதையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, 1982 ம் ஆண்டில் இலங்கைக்குக் கிடைத்த வெளிநாட்டு உதவியை உபயோகித்துக்கொள்ள உள்நாட்டு நிதியளிப்பு போதுமானதாயிருக்கவில்லை யென்ற முடிவுக்கே வர வேண்டியிருக்கிறது. வெளிநாட்டு உதவி குறைவாகப் பயன்படுத்தப்பட்டுள்ள கடந்த கால அனுபவத்தைக் கருத்திற் கொள்ளும்போது, 1983 ம் ஆண்டிலும் வெளிநாட்டு உதவி கணிசமான அளவு குறைவாகவே பயன்படுத்தப்படுவதற்கு அதிக வாய்ப்புகள் இருப்பதாகத் தோன்றுகிறது.

மண்ணெண்ணெய் மீதான மானியத் திருத்தம் போன்ற விடுகைகளைக்கணக்கிலெடுத்துக் கொள்வதற்காக, நிதி காணப்படாத 130 கோடி ரூபா இடைவெளி சீராக்கப்பட வேண்டியதவசியமாகும். இந்தத் திருத்தம் பெற்ரோலியம் கூட்டுதாபனத்துக்கு மானிய மாற்றத் தொகையை நகல் மதிப்பீட்டில் கணக்குக் காட்டப்பட்ட 17 கோடி 70 இலட்சம் ரூபாவிலிருந்து 28 கோடி 80 இலட்சம் ரூபாவுக்கு அதிகரித்தது. எனினும், இந்த வித்தியாசம் பாதீட்டுச் செலவுகளின் திருத்தியமைத்த கணிப்பில் பதியப்படவில்லை. மேலும், சமீபத்தில் ரூபாவின் மதிப்பு இறங்கியதன் காரணமாக, நகல் மதிப்பீட்டில் பதிவு செய்யப்பட்ட மீளவரும் செலவுகள் மூலதனச் செலவுகள் இரண்டையும் மேல் நோக்கி மாற்றியமைக்க வேண்டும். ரூபாவின் மதிப்பிறக்கம் மட்டும் பொதுச் செலவுகளைக் குறைந்தபட்சம் 5சதவிகிதத்திலிருந்து 10 சத விகிதத்துக்கு அதிகரிக்க வேண்டும்;இதனுல் நிதி காணப்படாத இடைவெளி அதிகரிக்கும்.

இத்தகைய நிலைமைகள் தோன்றினுல், இம்மாதிரியான நிச்சயமற்ற நிலைமைகளை எவ்வாறு சமாளிக்கலாம் அல்லது நிதியமைச்சர் என்ன செயல் முறைகளை மேகொள்வதென ஆலோசிப்பார் என்பது பற்றி வரவு செலவுத்திட்டம் எந்தத் துப்புகளையும் அளிப்பதில்லை. ஒரு வேளை நிதி காணு இடைவெளி 800 கோடி ரூபாவரை ஏற்படக்கூடும். உள்நாட்டுச் சந்தையில் கடன் வாங்காமல் இவ்வளவு பிரமாண்டமான பற்றுக்குறைக்கு நிதியளிக்க அரசாங்கத்தினுல் முடியுமா என்பதே இங்கு எழும் பிரச்சினை. உள்நாட்டுச்சந்தையில் கடன் வாங்கினுல், 1980, 1981 ம் வருடங்களில் காணப்பட்டது பொன்ற பணவீக்கப் போக்குகளே அதிகரிக்கும்.

வரவு செலவுத்திட்டத்துக்கு நிதி காணும் பக்கத்திலிருந்து பணவீக்கத்துக்குத் தோன்றக்கூடிய ஏதுக்கள் ஒருபுறமிருக்க வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு இரு வாரங்களுக்கு முன்பு அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட விலைமாற்றங்கள் 1983 ம் ஆண்டில் நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் மேலும் ஒரு சில புள்ளிகளைக் கூட்டுமென்பது திண்ணம். எனினும், அதன் பங்களிப்பின் பரிமாணம் நுகர்வின் மீது விலை மாற்றங்கள் ஏற்படுத்தும் தாக்கத்தைப் பொறுத்திருக்கும். நுகர்வு மட்டத்தில் எத்தகைய மாற்றமும் ஏற்படவில்லையானுல், சுட்டெண்ணிலுள்ள நுகர்ப்பொருள்களின் எடைகளைப் பொறுத்து, விலை அதிகரிப்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் பூரணமாகப் பிரதிபலிக்கும். விலையதிகரிப்பின் ஒரு பகுதியை மட்டுமே நுகர்வாளர்களால் ஏற்றுக் கொள்ளமுடியுமானுல், மறுபக்கத்தில், எஞ்சியபகுதி நுகர்வு வெட்டுகளில் பிரதிபலிக்கப்படுமாயின், சுட்டெண்ணில் விலையதிகரிப்பு ஏற்படுத்தும் விளைவு அதற்கேற்ற விகிதத்தில் குறையும். எனினும் பெற்ரோலியப் விலையதிகரிப்பு பணவீக்கத்துக்கு இதைவிட மிகத்திட்டமான ஓர் ஏதுவாக அமையும். ஏனென்றல், விலைகள் மீதும் ஆகு செலவுகள் மீதும் அது ஏற்படுத்தும் விளைவுகள் பரந்த தன்மைவாய்ந்தவையாகும்.

## (இ) சென்மதி நிலுவை

இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலைசள் உயர்த்தப்பட்டுள்ளதனுலும், டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் மதிப்பு இறங்கியுள்ளதன் விளைவாகவும், 1983 ம் ஆண்டில் இறக்குமதிப் பொருள்களுக்கான கோரிக்கை மெதுவாகவே வளரும். ஏற்றுமதித் திசையைப் பொறுத்தவரை, தேயிலை நல்ல முனனேற்றம் கண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. 1982 ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், சகல தரங்களின் சராசரி விலைகளும் நடப்பு விலைகளில் கிட்டத்தட்ட இரட்டித்துதுள்ளன. தற்போது கிடைக்கும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நோக்குமிடத்து, தேயிலை ஏற்றுமதி வர்த்தகம் ஆண்டு முழுவதும் தொடர்ந்து உறுதியாக நடைபெறுமெனத் தெரிகிறது. இது சென்மதி நிலுவை நிலைக்கு உதவுவதுடன் மட்டுமன்றித் தேயிலைத் தோட்ட உற்பத்தியில் நெடுங்காலமாக இருந்து வரும் தேக்க நிலையையும் நீக்க வேண்டும். நாணய மதிப்பிறக்கத்தினுல் ரப்பர், தேங்காய் ஆகியவற்றின் ஏற்றுமதிகளில் கன அளவு அதிகரிக்கவும் தூண்டுதல் பிறக்கும். ரூபாவின் மதிப்பிறக்கத்தையடுத்து உற்பத்தியாளருக்குக் கிடைத்து வந்த அதிக வருமானத்தை இம் மதிப்பிறக்கத்தின் விளைவாக ஏற்பட்டுள்ள உயர் உற்பத்திச் செலவுகள் பாதிக்கும் வரையாவது இந்நிலை நீடிக்கும். இந்த எதிர்பார்க்கப்படும் விருத்திகள் டொலர்கள் சம்பந்தமாக நடப்புக்கணக்கில் ஏற்பட்டுள்ள இடைவெளியைக் குறுக்கவேண்டும். இது சென்மதி நிலுவைக்கு நிதியளிக்கப் படுவதைச் சற்றே சுலபமாக்க நிச்சயமாக உதவும்.

## (ஈ) பொதுப் படுகடன்

வருடாந்த பொதுச்செலவுத் திட்டங்களுக்கு ஆதரவாக உள்நாட்டு வட்டாரங்களில் மட்டுமன்றி வெளிநாட்டு வட்டாரங்களிலும் கடன் வாங்குவது ஒரு நிரந்தஅம்சமாகிவிட்டது இவ்விதம் கடன் படுவதற்குக் கூறப்படும் அடிப்படை நியாயம் என்னவென்றல்: இது மூலதனத்தைப் பெறுவதற்கு ஒரு மாற்று வழி, புதிய வருமான வழிகளை உண்டாக்க இதை உற்பத்தி நோக்கங்களுக்குப் பயன் படுத்த முடியும் என்பது தான். இந்தப் புதிய வருமான வழிகள் படுகடன்

(21-ம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் பீடைகொல்லிகளால் ஏற்பட்டுவரும் தீங்குகள்

**பேராசிரியர் நந்ததாச கோதாகொட**

(கொழும்பு வைத்திய போதனு பீடம்)

ஜனத்தொகை வளர்ச்சி நடுத்தரமட்டத்திலிருந்துங்கூட உணவு வழங்கள் மீது அதிகரித்து வரும் உலகக்கோரிக்கை திடுக்கிடச்செய்வதாயுள்ளது. வருடாந்தம்மேலதிகமாகத் தேவைப்படும் உணவு கோடிக்கணக்கான தொன்களாயிப்பதாக மதிப்பிடப்படுகிறது. நவதானியங்களில் 20 கோடிதொன், மரக்கறிகளிலும், பழவகைகளிலும் 20 கோடிதொன், இறைச்சியிலும், பாலிலும் 15 கோடி தொன்; அத்துடன் இதை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் மிருகத் தீவிவகைகளை வருடந்தோறும் தேவையாயிருக்கின்றன. ஆதலால், மிகக்குறைந்த காலத்தில் குறைவான காணி நிலத்தில் அதிகமான மக்களுக்கு அதிக அளவிலான உணவை உற்பத்தி செய்வதற்கு விவசாயம், விவசாய-இரசாயனப்பொருள்களைப் பாரிய அளவுக்குச் சார்ந்திருப்பதில் ஆச்சரியமேயில்லை.

விவசாயத்தில் உபயோகிக்கப்படும் இரசாயன பொருள்களில், பீடைக்கொல்லிகள் மிகப் பேரளவில் வியாபித்துள்ளன. ஆரம்பத்தில் இப்பொருள்களின் உலக வழங்கலில் 10 சதவிகிதம் மட்டுமே வளர்முக உலகில் உபயோகிக்கப்பட்டதெனினும், அதற்குப் பின் அதன் விகிதம் வளர்ந்து விட்டது. இயற்கையாகவே, பீடைக்கொல்லிகளை உபயோகிக்கும் வழக்கத்தைத்தொடர்ந்து அவற்றின் தீய விளைவுகளில் சிலவும் கொண்டுவரப்பட்டுள்ளன, ஆனல், இந்த இரசாயனப்பொருள்களின் பயன்பாட்டுத்தன்மையைக் குறைத்துக்கூறுவது எனது நோக்கமல்ல; பீடைக்கொல்லிகளால் ஏற்படும் அபாயங்கள் பற்றித் திறந்த மனத்துடன் நிதானமாக மதிப்பிடுவது அவசியமாகும். ஏனென்றல், பீடைகொல்லிகளை ஆதரித்தும் அவற்றை எதிர்த்தும் முழுவலிமையுடன் வாதாடுவதற்குச் சுயநலனில் அககறையுள்ள நபர்கள் இருந்து வருகிறர்கள் அத்துடன், பீடைக்கொல்லிகளை உபயோகிப்பதில் மிதமிஞ்சிய உற்சாகமும் வேண்டாத அச்சங்களும் கூட இருந்து வருகின்றன.

செயற்கைப் பீடைக்கொல்லிக்கெதிராக இயற்கைப் பீடைக்கொல்லிகளின் ஒப்பியல் அனுகூலங்களைப்பற்றித் தொடர்ச்சியாகச் சர்ச்சை நடைபெற்று வந்துள்ளது. இரு தரப்புகளையும் சேர்ந்தவர்கள் தத்தம் நிலையே முற்றிலும் சரியானது—ஒருபோதும் பிழைப்படாதது—என மனத் திருப்தியடைந்துள்ளதாகத்தோன்றுகிறது. எனினும் கடந்த காலத்தில் இயற்கையான பூச்சிகொல்லி என்று கருதப்பட்ட நிகொட்டின் உயர்த்தொழில் நுட்பவியலை அடிப்படையாகக் கொண்ட நவீன உலகின் பீடைகொல்லிக்கைத் தொழில் விதித்துள்ள நவீன அளவு கோள்களின் நுணுக்கமான சோதனையில் தேறுவது சாத்தியமல்ல.

பீடைகொல்லிகளின் உபயோகங்கள் நல்ல ஆவண ஆதாரங்களுடன் நிரூபிக்கக் கூடியதாயுள்ளன. ஆனல், குறிப்பாகக் குறை அபிவிருத்தி நாடுகளில் பீடைகொல்லிகளினல் ஏற்படும் அபாயங்கள் நல்ல ஆவண ஆதாரங்களுடன் நிரூபிக்ககூடியனவாகவில்லை; இலங்கையில் பீடைக்கொல்லிகளின் இந்த அம்சங்களைக் கணக்கிட நிறைய வாய்ப்புண்டு. இதற்கிடையில் உணவுப் பொருள்களுக்குள் பீடைகொல்லிகளின் எச்சங்கள் பிரவேசித்துள்ள விதம் விரிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ள மற்றும் நாடுவிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்வது சாத்தியமே. உள்நாட்டைப்பொறுத்தவரை நுணுக்கமான பரிசோதனைக்கும் பரிசீலனைக்கும் உட்படுத்தவேண்டிய துறைகள் இவைதாம்.

பீடைகொலலிகளால் உண்டாக்கப்படும் அபாயங்களின் சரியான அளவு சமீப எதிர்காலத்தில் ஆராய்ந்தறியப் படாதிருக்கலாம். அது சுலபமாகஆராய்ந்தறியப்படாதிருக்கக்கூடிய நிலைக்கு பிரச்சினையின் பரந்த தன்மையே ஒரு காரணமாகும். குறிப்பாக மனிதர்களுக்கு ஏற்படும் அபாயங்களை பொறுத்தவரை மற்றும் செயற்பாடு காரணிகளும் உள்ளன. தற்செயலாக நடைபெறும் நஞ்சூட்டல் சம்பவங்களில் பெரும்பாலானவை கவனிக்கபடாமலோ அல்லது பதிவுசெய்யபடாமலோ போகலாம். பல சம்பவங்களின்குணங்குறிகள் நிதானித்தறியப்படாதிருக்கலாம். தற்கொலைச்சம்பவங்களை சாரக்கூடிய சமூக அவமானம் காரணமாக அவை அறிவிக்கப்படாது அல்லது பதிவாகாது இருக்கலாம். மேலும் வெளித்தெரியும் கடும் நஞ்சேற்றல் சம்பவம் மட்டுமே கவனத்தை ஈர்க்கின்றது.

(22-ம் பக்கம் பார்க்க)

விஞ்ஞானம்

# மூன்றும் உலக பீடை கொல்லிகள் பற்றிய ஐரோப்பிய இயனேக்கு

ஐரோப்பா எங்கிலும் தோன்யுள்ள் ஒரு பரந்த கூட்டமைப்பு மூன்றும் உலக நாடுகளுக்கு அபாயகரமான பீடைக்கொல்லிகளைக் கட்டுப்பாடின்றி ஏற்றுமதி செய்வதற்கு முற்றுப்புள்ளியிடுமாறு அறைகூவியுள்ளது. சர்வதேசஅகிலத்தின் (பான் இன் டனேஷனல்) எட்டு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த 15 குழுக்கள் 1982 டிசம்பர் 3ந் திகதியிலிருந்து 4 ந் திகதி வரை ஸூரிச்சில் முதல் முறையாகக் கூடின

ஐரோப்பிய அகிலம் (பான் யூரப்) என்னும் புதிய கூட்டமைப்பு கடந்த வருட ஆரம்பத்தில் அமைக்கப்பட்டுத் துரிதமாக விரிவடைந்து வரும் வலையமைப்பில் மிக அண்மையில் உருப்பெற்றுள்ள நிறுவனமாகும். ஒவ்வொரு கண்டத்திலிருந்தும் 200 ஸ்தாபனங்கள் பங்குபற்றும் இந்த வலையமைப்பு பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட அக்கறையுள்ள தனிநபர்களைக் கொண்ட ஒரு தொகுதிக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கின்றது.

சீபா–கெய்கி என்னும் சுவிஸ் இரசாயனக் கம்பெனி மூன்றும் உலக நாடுகளுக்குப் புற்று நோயை உண்டாக்கும் "கலிகுரோன்" என்னும் ஒரு பீடை கொல்லியை ஏற்றுமதி செய்து வருவதாகப் புதிதாக அம்பலமாகியுள்ள தகவலை "ஐரோப்பிய அகிலம்" சுட்டிக் காட்டியது.

இந்த நிறுவனத்தின் கூட்டத்தில் பங்கு பற்றியவர்கள் ஐரோப்பிய நுகர்வுக்காக மூன்றும் உலகத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்களில் தீங்கிழைக்கவல்ல பீடைகொல்லிகளின் எச்சங்கள் காணப்படுவதைப்பற்றி தங்களுடைய கவலையைத் தெரிவித்தனர். கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு "ஐரோப்பிய அகிலம்" அரசாங்கங்களையும் சர்வதேச ஸ்தாபனங்களையும் பீடைகொல்லிக் கைத்தொழிலையும் கேட்டுகொள்கின்றது.

— ஐரோப்பாவில் தடைசெய்யப்பட்டுள்ள அல்லது கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ள பீடைகொல்லிகள் கட்டுப்பாடின்றி ஏற்றுமதியாவதை அனுமதிக்கும் இரட்டை அளவு கோளை கையாளப்படுவதற்கு முற்றுப்புள்ளி இடுங்கள் ;

— இரசாயனப் பொருள்களைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாகப் பீடைகொல்லிகளைச் சமாளிக்க உயிரியல் ரீதியான வேலைத்திட்டங்களை விருவாக்குங்கள் ;

— பீடைகொல்லிகளைச் சந்தைப்படுத்துவதற்கும் பெயர்ச்சீட்டு (லேபல்) ஒட்டுவதற்கும் பொதிப்படுத்துவதற்கும் உபயோகிப்பதற்கும் பயனுறுதிவாய்ந்த சர்வதேச தரங்களை நிர்ணயியுங்கள் :

— ஐரோப்பிய பதிவு அதிகாரிகள் சேகரித்துள்ள ஆரோக்கியம், பாதுகாப்பு பற்றிய தரவுகளைப பகிரங்கமாக வெளியிடுங்கள்.

1976 ம் ஆண்டில் 10 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட ஆறு எகிப்தியத் தொண்டர்கள் "கலிகுரோன்" என்னும் நஞ்சுள்ள பீடைகொல்லியின் அபாய ஏதுக்களுக்கு உடபடுத்தப்பட்டனர் என்பது சீபா–கெய்கி என்னும் சுவிஸ் இரசாயனக் கம்பெனியின் ஆராய்ச்சி ஆவணங்களிலிருந்து தெரிய வருகிறது. மனிதர்கள் மீது அப் பீடைகொல்லி என்ன விளைவுகளை ஏற்படுத்துகிறது என்பதைப் பரிசோதித்தறிவதே இதன் நோக்கம். "கலிகுரோன்" தாவரப் பாதுகாப்புக்குரிய ஒரு சாதனமாகும். ஆனல் அது உப விளைவுகளை உண்டாக்குவதால, இன்று அது பருத்தித் தோட்டங்களில் மட்டுமே பிரயோகிக்கப்படுகிறது.

"கலிகுரோன்" பீடைகொல்லி மனிதர் மீது ஏற்படுத்தக்கூடிய விளைவுகளை அறிவதற்காகக் குழந்தைகள் மீது நடததப்பட்ட பரிசோதனைகள் "பொது மக்களுக்கு ஆத்திரத்தை உண்டாக்கின". எனினும், இந்தப் பரிசோதனைச் சம்பவம் அந்த இரசாயனக் கம்பெனியின் ஆட்சேபகரமான நடத்தையில் ஒரு பின்னம் மாத்திரமேயாகும். புற்று நோயை உண்டாக்கும் "கலிகுரோன்" பீடைகொல்லியில் வீரியம் குறைந்ரகம், வீரியம் நடுத்தரமாயுள்ள ரகம் வீரியம் அதிகமுள்ள ரகம் ஆகிய எல்லாமே மனித ஆரோக்கியத்துக்குத் தீங்கு செய்ய வல்லன என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள அதே சமயத்தில் இது மூன்றும் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது சீபா–கெய்கி ஸ்தாபனத்துக்குள்ளே மேலும் நடத்தப்பட்ட சோதனைகளிலிருந்து தெரிகிறது. இந்த விவரம் பேர்ன் (சூரிச்) பிரகடனத்தை வெளியிட்டோர் வசமுள்ளது

மத்திய அமெரிக்காவிலும் பொலீவியாவிலும், கொலம்பியாவிலும், எகிப்திலும் கம்பெனி செய்த விசாரணைகளிலிருந்து, பரீட்சிக்கப்பட்ட தொழிலாளர்களில் பெரும்பாலோரின் சிறுநீரிலிருக்கக் காணப்பட்ட நஞ்சின் எச்சங்கள் அனுமதிக்கப்பட்ட அளவுகளுக்கு மேலிருந்தனவென்று தெரியவந்தது. இவ்விதமாக 1980 ம் ஆண்டில் பொலீவியாவிலுள்ள தொழிலாளர்கள் பரிசோதிக்கப்பட்டபோது, 70 சதவிகிதத்தினரிடம் காணப்பட்ட மட்டங்கள்சீபா–கெய்கி கம்பெனியாலேயே ஸ்தாபிக்கப்பட்ட ஒரு லீட்டர் சிறு நீருக்கு 0.3 மில்லிகிராம் என்ற வரையறைக்கு மேலிருந்தன. மெக்ஸிகோவில் செய்யப்பட்ட சுயாதீனப் பரிசோதனைகளும் இதேபோன்ற விளைவுகளைக் காட்டின.

"கலிகுரோன்" பீடைகொல்லி விமானங்களிலிருந்து விசிறப்படும் போது, அந்நஞ்சில் 25 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதம் வரையான பகுதியே வயலை அடைகின்றது; எஞ்சிய பகுதி மனிதர்கள், மிருகங்கள், தாவரங்கள் மீதும் உணவுப் பயிர்கள் விளையும் அண்டையிலுள்ள வயல்கள்மீதும் விழுகின்றது, கம்பெனியே மதிப்பிட்டுள்ளவாறு இந்த இரசாயனப்பொருளின் ஆபத்தான தன்மை மொந்தே (சுவிஸ்சர்லாந்து) யிலுள்ள உற்பத்தித் தொழிற்சாலையிலேயே பிரத்தியட்சமாகத் தெரிகிறது. அங்கு பாதுகாப்புத் தேவைகள் ஓர் அணுசக்தித் தொழிற்சாலையில் செயற்படுவன போலவே இருக்கின்றன, உற்பத்தி முறை, சேய்மைக்கட்டுப்பாடு வாயிலாகவே பெருமளவுக்கு கையாளப்படுகின்றது, பழுது பார்க்கும் வேலைகளைச் செய்வதற்கும் திருத்த வேலைகளைச் செய்வதற்கும் தொழிலாளர்கள் ஒரே முழுத்துண்டாலான பாதுகாப்பு உடையை அணிய வேண்டும், இவ்வுடை ஒரே ஒரு முறை மட்டுமே உபயோகிக்கப்படுகிறது. அடுத்து சிக்கலான மாசொழிப்பு நடைமுறையும், அத்துடன் கிரமமான சிறு நீர்ப்பரிசோதனைகளும் விதிக்கப்படுகின்றன. மாசுபடும் அளவு மேல்வரையறையைத் தாண்டி விட்டால், தொழிலாளி இன்னொரு வேலைத்தலத்துக்கு மாற்றப்படுகிறான்.

"கலிகுரோன்" பீடைகொல்லியின் பொல்லாத விஷயத்தை பேர்ன் பிரகடனமும் சுவிஸ் டெலிவிஷனும் அம்பலமாக்கிய பின், சீபா–கெய்கி கம்பெனி பின்வருமாறு அறிவிப்பதன் மூலம் பதில் நடவ்டிக்கை எடுத்துக் கொண்டது: "பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு விசேஷ கஷ்டங்கள் எதிர்ப்படும் நாடுகள் "கலின்குரோனை" ஒன்றில் கம்பெனியின் சொந்த மேற்பார்வையிலோ அல்லது பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கையாளும் பொறுப்பை மேற்கொள்ளும் கம்பெனிகள் வாயிலாகவோ மட்டுமே பிரயோகிக்கலாம். மற்

"அதன் பயனற்ற தன்மை குறித்த ஏற்ற முடிவுகளைச் செய்யாமல்" சீபா கெய்கி கம்பெனி 1978 ம் ஆண்டில் உத்தரவிட்ட இதே போன்ற நடவடிக்கையொன்றுடன் பேர்ன் பிரகடனம் இதை ஒப்பிடுகின்றது. மேலும், பாதுகாப்புக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அயலிலுள்ள குடியேற்றப்பகுதிகளிலிருக்கும் மக்களுக்கும், அத்துடன் உணவுப் பயிர்களுக்கும் குடி நீருக்கும் ஏற்படும் கடும் அபாயத்தைக் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளவில்லை.

இதற்கிடையில், மூன்றும் உலகில் "கலிகுரோன்" உபயோகிக்கப்படுவதைப்பற்றிய "கஸெனஸ்டார்ஸ்" என்னும் நிகழ்ச்சி 1982 நவம்பர் 15ந் திகதி ஒளி-ஒலிபரப்பட்டதையடுத்து, சுவிஸ்-ஜேர்மன் டெலிவிஷன் மீது தாங்கள் வழக்குத் தொடரப் போவதாக சீபா-கெய்கி கம்பெனி அறிவித்துள்ளது. "ஒளி - ஒலிபரப்பப்பட்ட பிம்பங்கள் ஆவண ஆதாரத்துடன் கூடிய ஒரு திரைப்படமாகப் பொய்யாய்க்காட்டப்பட்டுள்ளதுடன், கம்பெனியினதும் தப்பசூலா (மெக்ஸிகோ) வைச் சேர்ந்த பருத்தி விளைவிப்போரினதும் பெயருக்கும் புகழுக்கும் ஆராய்வின் பேரில் களங்கம் உண்டாக்கப்பட்டிருக்கிறது"

இக்காரணத்தினாலேயே இவ்வாறு முடிவுசெய்யப்பட்டதாகக் கம்பெனி தெரிவித்துள்ளது. இந்த ஒளி-ஒலிபரப்புக்காகப் பேட்டியொன்றில் பங்கு பற்ற மறுத்துவிட்ட இரசாயனக்கம்பெனி இப்பொழுது அதைக் கண்டிப்பதைக் குறித்து, சுவிஸ் தபால-தொலை பேசி-தந்தி ஊழியர்கள் சங்கம் ஆச்சரியம் தெரிவித்துள்ளது. சீபா-கெய்கி கம்பெனி எடுத்துக்கூறியுள்ள தர்க்க நியாயங்கள் ஆதாரமற்றவை; கம்பெனியிடமே குற்றம் இருக்கிறது என்று அச்சங்கம் குறிப்பிட்டுள்ளது.

## வங்கிப்படுத்தலும் நிதியும்

# வங்கித்துறையில் வைப்புக்களின் போக்குகள்

வங்கிகளில் நிலவிய உயர்ந்த அளவில்லான திரவத்தன்மை, 1982-ல் வர்த்தக வங்கி நடவடிக்கைகளில் காணப்பட்ட ஒரு பிரதான பண்பாகும். 1982-ல் வணிக வங்கிகளின் மொத்த மூலவளங்கள் 743.8 கோடி ரூபாவால் அதிகரித்தன; 1981-ல் இது 618.4 கோடி ரூபாவால் அதிகரித்திருந்தது. 1982-ல் ரூபா 593.4 கோடி வரையிலான அதிகரிப்புக்கு வைப்புக்களின் அதிகரிப்பு பிரதான காரணமாக இருந்துள்ளது. இதனுடன் இணைந்த வகையில் தனியார் துறைகளின் கடன் தொடர்பான கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சியும் வணிக வங்கிகளின் திரவத்தன்மையை அதிகரிக்கச் செய்துள்ளது. இக் காலப் பகுதியில் தவணை வைப்புக்களும் குறிப்பிடத்தக்களவுக்கு அதிகரித்தன. தவணை வைப்புக்களுக்கு வணிக வங்கிகள் கூடுதலான வட்டி விகிதத்தை அளித்தமையால் 1982 ல் முதலரைப் பகுதியில் இத்தகைய வைப்புக்கள் 73 சதவிகிதத்தினால் (ரூபா 252.6கோடி) அதிகரித்தன. கவர்ச்சிகரமான குறுங்கால முதலீட்டு வாய்ப்புக்கள் இன்றி, திரவத் தன்மை தொடர்ந்து அதிகரித்தமையால் 1982 ன் மத்தியில் வணிக வங்கிகள் தமது வைப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் சில மாற்றங்களைச் செய்தன. தவணை வைப்புக்களுக்கான வட்டி வீதம் குறைக்கப்பட்டதுடன், 24 மாத கால வைப்புக்களை ஏற்பதைப் பல வங்கிகள் இடை நிறுத்தின. வைப்பு அளவு தொடர்பான செலவினைக் குறைப்பதுடன் குறுங் கால வைப்புக்களை மிகவும் கவர்ச்சிகரமாக்குவதும் இதன் நோக்கமாகும்.

1981 ன் இறுதியில் 110 சதவீதமாகவிருந்த வணிக வங்கிகளின் கேள்வி வைப்புக்களுக்கான திரவச்சொத்துக்கள் 1982 ல் 121 சதவீதத்தினால் அதிகரித்தன. பொது மக்களின் மொத்த வைப்புக்கள் தீவிரமாக அதிகரித்த அதேவேளை, கடனுக்கான கேள்வி வீழ்ச்சி அடைந்ததாக மத்திய வங்கியினால் நடாத்தப்படுகின்ற வங்கிகளின் வைப்புக்கள், முற்பணங்கள் தொடர்பான அரை வருட (1982 ன் முதலரைப் பகுதி) வைப்புகள், முற்பணங்கள் தொடர்பான அரை வருட ஆய்வு தெளிவாகக் காட்டுகிறது.

1982 ன் முதலரைப் பாகத்தின் இறுதியில் எல்லா வணிக வங்கிகளதும் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 4,186,354 ஆகும்; முன்னைய வருடத்தில் இதே காலப்பகுதியில் இருந்ததை விடவும் இது 19.2 சதவீதம் அதிகமாகும். இதே காலப்பகுதியில் ஒரு கணக்கிற்குரிய சராசரி நிலுவையும் 19 சதவீதத்தினால் அதிகரித்தது; இக் காலப்பகுதியில் இது ரூபா 5,300 ஆக விருந்தது. இவ்வாருக 1982 ஜூன் மாதமளவில் எல்லா வங்கிகளதும் மொத்த வைப்புக்களின் பெறுமதி ரூபா 2217.8 கோடியாகவிருந்தது. முன்னைய வருடத்தில் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 41 சதவீதம் அதிகமாகும்.

வணிக வங்கிகளில் இருந்த 4,186,354 வைப்புக்களில் 98 சதவீதம், மக்கள் வங்கி, இலங்கை வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி, வர்த்தக வங்கி ஆகிய உள்நாட்டு வங்கிகளிலேயே இருந்தன. இவ் வங்கிகளின் மொத்த வைப்புக்களின் வளர்ச்சி விகிதாசாரம் 33 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்திருந்தது. இதேவேளை புதிய, பழைய வெளிநாட்டு வங்கிகளின் மொத்த வைப்புக்கள் 45 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்திருந்தன. இவ் வங்கிகளில் வைக்கப்பட்டிருந்த வைப்புக்களின் ஒப்பீட்டு ரீதியான பங்கு உள்நாட்டு வங்கிகளின் மீது எதிர்கணியத் தாக்கத்தைக் கொண்டிருந்தன. இதன் விளைவாக, 1981 ன் முதற் காற்பகுதியில் மொத்த வைப்புக்களில் ஏறக்குறைய

92 சதவீதத்தைக் கொண்டிருந்த உள்நாட்டு வங்கிகளின் பங்கு 1982 ன் முதற் காற் பகுதியில் 79 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.

ஆய்வுக்கு எடுக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் வணிக வங்கிகளின் சராசரி நிலுவைகளின் மாற்றங்களும் இக் காரணியுடன் தொடர்பு கொண்டுள்ளன. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, மொத்தவங்கித் தொழிற் துறையில் ஒருகணக்கிற்குரிய சராசரி நிலுவை 19 சதவீதமாகவிருந்த போதிலும் உள்நாட்டு வங்கிகளின் சராசரி நிலுவை வளர்ச்சி விகிதாசாரம் 12.1 சதவீதமாகவிருந்தது. மறுபுறத்தில், வெளிநாட்டு வங்கிகள் 53 சதவீத அதிகரிப்பினைக் காட்டின; இவ் வங்கிகளின் ஒரு கணக்கிற்குரிய நிலுவை சராசரியாக ரூபா 56,750 ஆகவிருந்தது. அண்மைக்காலத்தில் நிறுவப்பட்ட வெளிநாட்டு வங்கிகளின் ஒரு கணக்கிற்குரிய நிலுவை ரூபா 27,460 இலிருந்து ரூபா 181,260 ஆக அதிகரித்தது; இது 85சதவீத அதிகரிப்பாகும். எஞ்சிய வெளிநாட்டு வங்கிகளில் (1977 இற்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட) ஒரு கணக்கிற்குரிய நிலுவை ஒரு வருட காலத்திற்குள் ரூபா 27,075 இலிருந்து ரூபா 44,850 ஆக அதிகரித்தது; இது 45 சதவீத அதிகரிப்பாகும்.

உள்நாட்டு வங்கிகள் சில்லறை வங்கித்தொழிலில் ஈடுபட்டஅதேவேளை வெளிநாட்டு வங்கிகள் மொத்த ரீதியான வங்கித் தொழிலில் அக்கறை செலுத்தியமையே இதற்குக் காரணமாகும். எனினும், இச் செயற்பாட்டின் தாக்கத்தை உள்ளூர் வங்கிகள் தமது தொழிலை நடாத்துகின்ற போட்டிச் சூழ்நிலையிலேயே மதிப்பிடுதல் வேண்டும். சிறிய தவணை வைப்புக்கள் தவிர்க்கவியலாத வகையில் உயர் நிர்வாகச் செலவினை ஏற்படுத்துகின்றன. இதன் விளைவாக உள்ளூர் வங்கிகள் ஒரு போட்டிச் சூழ்நிலையில் பாரிய வர்த்தகக் கடன்களை வழங்கமுடியாத நிலையில் இருக்கின்றன.

உயர்செலவின் விளைவாக உள்நாட்டு வங்கிகள் ஒப்பீட்டு ரீதியில் கூடிய வட்டியை அறவிட வேண்டிய நிலையில் உள்ளன. இதன் விளைவாக இலாபம் அளிக்கின்ற பாரிய அளவிலான வர்த்தகக் கடன் கொடுப்பனவிலிருந்து உள்ளூர் வங்கிகள் வெளித் தள்ளப்படலாம்.

இத் தெளிவான மாற்றங்களுடன் அவதானிக்கக் கூடிய இன்னொரு அம்சம் யாதெனில், மொத்த சேமிப்பு, கேள்வி வைப்புக்களை விடவும் நிலையான வைப்பக்களில் ஏற்பட்ட ஒப்பீட்டு ரீதியான அதிகரிப்பாகும். 1981 ன் முதற் காற் பாகத்தில் மொத்த வைப்புக்களில் 26 சதவிகிதமாகவிருந்த கேள்வி வைப்புக்கள் 1982 ன் முதற் காற் பகுதியில் 23 சதவீதமாக வீழ்ச்சி அடைந்தன. வேறு வார்த்தைகளில் கூறினல் இக் காலப் பகுதியில் தவணை வைப்புக்களின் அதிகரிப்பு விகிதாசாரம் 49 சதவீதமாகவிருந்த அதேவேளை, கேள்வி வைப்புக்களின் அதிகரிப்பு விகிதாசாரம் 28 சதவீதமாக இருந்தது.

### 1981 - 1982ஆம் ஆண்டுகளின் முதலரைப்பாகம்

### வணிக வங்கிகளின் வைப்பு, அமைப்பு மாற்றங்கள்

| | ஜனவரி–ஜூன் 1981 | 1982 | சதவீத மாற்றம் |
|---|---|---|---|
| கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | 3,512,183 | 4,186,354 | 19 |
| ஒரு கணக்கின் சராசரி நிலுவை (ரூபா) | 4,453 | 5,300 | 19 |
| மொத்த வைப்புக்கள் (ரூ கோடி) | 1,563.8 | 2,217.9 | 41 |
| கேள்வி ( ,, ) | 4,12.5 | 531.8 | 8 |
| தவணை ( ,, ) | 884.3 | 1318.6 | 73 |
| சேமிப்பு ( ,, ) | 268.7 | 367.4 | 17 |

### ஒரு வருட காலத்திற்குள் உள்நாட்டு, வெளிநாட்டு வங்கிகளின் ஒரு கணக்கிற்குரிய சராசரி நிலுவை மாற்றங்கள் (81 ஜூன்–82 ஜூன்)

| | ஜூன் 1981 இல் | ஜூன் 1982 இல் | சதவீத மாற்றம் |
|---|---|---|---|
| உள்நாட்டு வங்கிகளில் வைக்கப்பட்டிருந்த கணக்குகளின் எண்ணிக்கை | 3,441,939 | 4,102.626 | 19 |
| எல்லா வங்கிகளினதும் ஒரு கணக்கிற்குரிய சராசரி நிலுவை | 4,453 | 5.300 | 19 |
| உள்நாட்டு வங்கிகளின் ஒரு கணக்கிற்குரிய சராசரி நிலுவை | 4,190 | 4,250 | 1 4 |
| புதிய வெளிநாட்டு வங்கிகளில் ஒரு கணக்கிற்குரிய சராசரி நிலுவை | 27,460 | 181,260 | 85 |
| ஒரு கணக்கிற்குரிய சராசரி நிலுவை | 15,660 | 44,850 | 65 |

# பீடைக் கட்டுப்பாடு குறித்த பண்பாட்டு, எந்திரவியல் முறைகள்

**ஏ. எஸ். விதான பத்திரன**

நுண்ணுயிர்கள், நோய்கள் களைகள் என்பவற்றிற்கு எதிராகப் பயிர்களைப் பாதுகாத்தல் தொடர்பான இரசாயன அணுகு முறை பல பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது. சூழல் அமைப்பு அணுகுமுறையின் சமநிலையைக்குலைத்தல், எதிர்ப்புச் சக்தி கொண்ட நுண்ணுயிர்கள், நோய்கள் என்பவற்றின் வீழ்ச்சி, மனித, மிருக வாழ்க்கை அழுக்கடைத்தலும், சூழல் அழுக்கடைதலும், இலக்காகக் கொள்ளப்படாத உயிரணுக்கள் பாதிக்கப்படுதல் என்பன நுண்ணுயிர்க் கொல்லிகளினால் ஏற்படுகின்ற பாதகமான விளைவுகளாகும். ஆகையால், சூழலைப் பாதுகாப்பதுடன் திருப்திகரமான விவசாய உற்பத்தித் திறன் மட்டத்தைப் பேணக்கூடியதுமான மாற்றுக் கட்டுப்பாட்டு சக்திகளைப் பின்பற்றுதல் மிக முக்கியமானதாகும். குறிப்பாகப் பண்ணையாளர்களின் அனுபவத்திலிருந்து பின்வரும் இரு மாற்று நுண்ணுயிர்க் கட்டுப்பாட்டு நுணுக்கங்கள் வெற்றி அளிக்கக் கூடியவை என நிரூபிக்கப்பட்டுள்ளன. (1) எந்திரவியற் கட்டுப்பாடு (2) கலாசாரக் கட்டுப்பாடு.

## 1. எந்திரவியற் கட்டுப்பாடு

எந்திரப் பொறிமுறையின் ஒன்றிணைந்த தாக்கத்தின் மூலமும் எந்திரப் பாவனையின் மூலமும் நுண்ணுயிர்களைக் கட்டுப்படுத்தல் எந்திரவியற் கட்டுப்பாடு எனப்படும். இவ்வியந்திரங்கள் வலுவினால் இயக்கப்படுவனவாகவோ, உயர் தொழில்நுட்பத்திறன் மிக்கதாகவோ அல்லது மனிதனால் இயக்கப்படுகின்ற சாதாரண கருவிகளாகவோஇருக்கலாம். களைகள் அல்லது நுண்ணுயிர்கள் என்பவற்றில் எதனை நோக்கமாகக் கொண்டுள்ளதோ அதனடிப்படையிலே எந்திரவியற் கட்டுப்பாட்டு முறையானது தங்கியுள்ளது. இதன்படி இரு கட்டுப்பாட்டு முறைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன:

(அ) களைகளின் எந்திரவியற் கட்டுப்பாடு

பல்வேறு வகையான பண்ணைமுறைகளிலும் களைகள் பெருக்கமடைவதனைப் பல்வகை எந்திரவியல்முறைகளினால் கட்டுப்படுத்தலாம். களை வெட்டும் இயந்திரங்கள், மண்வெட்டி, ஏனைய உபகரணங்கள் என்பன களைகளின் பசுமையான வளர்ச்சிப் பாகங்களைத் துண்டாக்குகின்றன; இவற்றைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்தினால் இறுதியில் களைகள் அழிந்துவிடும். குறிப்பாக, ஈர நெல்லுடன் வளருகின்ற களைகளை நீக்குவதற்கு கையினால் இயக்குகின்ற களை நீக்கி ஒரு சிறந்த சாதனமாகும். வீட்டுப் பயிர்ச்செய்கையின்போது களைகளைக் கைகளால் பிடுங்கி அழித்துவிடலாம். வயல் நிலங்களைப் பொறுத்தவரையிலும் விரைவான நீர்ப்பாய்ச்சல் இன்னொரு சிறந்த எந்திரவியற் களை கொல்லி முறையாகும்; சேனைப் பயிர்ச்செய்கையைப் பொறுத்தவரையிலும் எரித்தல் ஒரு சிறந்த களை கொல்லி முறையாகப் பின்பற்றப்படுகின்றது.

(அ) நுண்ணுயிர்கள், நோய்கள் என்பவற்றின் எந்திரவியற் கட்டுப்பாடு:

உணவுக் கண்ணிகளும் ஒளிக் கண்ணிகளும் பயன் மிக்க நுண்ணுயிர்க் கட்டுப்பாட்டு நுட்பங்களாகும். நெல், கிழங்கு வகைகள் என்பவற்றைக் கொறிக்கின்றவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு உணவுக் கண்ணிகள் சிறந்தனவாகும்; நுண்ணியிரினங்களைப் பொறுத்தவரையிலும் அவை கண்ணிகளால் அழிக்கப்படுகின்றன. ஒரு ஒளிக் கண்ணியானது, ஒளியை ஏற்படுத்தக்கூடிய ஒரு கருவியைக் கொண்டிருக்கும்; இது ஒரு நீர் நிறைந்த பாத்திரத்தின் மத்தியில் வைக்கப்படும்; இரவில் இக் கருவி வயலில் வைக்கப்படும். இந்த ஒளியினால் கவரப்படுகின்ற நுண்ணுயிர்கள், நீர்ப் பாத்திரத்தில் அகப்பட்டு அழிகின்றன. வெள்ளை நிற ஒளியே மிகவும் தாக்கமானதாகும் என பல்வேறு வர்ணங்கள் தொடர்பாகவும் அண்மையில் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆராய்ச்சி தெரிவிக்கின்றது. மஞ்சள், நீலம், பச்சை, சிவப்பு வர்ண ஒளிகளும் நுண்ணுயிர்களைக் கவருகின்றன எனவும் இது தெரிவிக்கின்றது.

நுண்ணுயிர்களையும் அவற்றின் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களையும் — முட்டை, கூட்டுப்புழு — தேடியெடுத்து அழித்தல் இன்னொரு தாக்கமான கட்டுப்பாட்டு முறையாகும். குறிப்பாக கம்பளிப்பூச்சி, வண்டு இனங்கள் போன்றவற்றின் தொகை குறைவாக விருப்பின் இம் முறையின் மூலம் கட்டுப்படுத்தலாம். நுண்ணுயிர்களினால் பாதிக்கப்பட்ட பயிரினங்கள், பூக்கள் என்பவற்றை அழித்தல் எந்திரவியல் கட்டுப்பாட்டுக்கு இன்னொரு உதாரணமாகும். இந் நுண்ணுயிர்கள் பெருமளவில் இருப்

பின் அவற்றை வலைகளினால் பிடித்து அழித்தல் வேண்டும். இதே போன்று பயிரின் நோயினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை எளிய அறுவை சிகிச்சை மூலம் நீக்கிவிடலாம். வைரஸ் போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்ட பயிரினங்களைப் பொறுத்த வரையிலும் அவற்றைப் பிடுங்கி அழித்தல் வேண்டும்.

**2. கலாசாரக் கட்டுப்பாடு**

பயிரின் பொருளாதார மட்டத்தைப் பாதிக்காத வகையில் நுண்ணுயிர்களைக் குறைப்பதற்கு பயிர்ச் செய்கை முறைகளில் மாற்றங்களைச் செய்யலாம். பல்வேறு கலாசார முறைகளும் சிறந்த பயிர் வளர்ச்சிக்கு உதவக்கூடிய நுண்சூழலை உருவாக்குகின்றன; இவை மேலதிக உள்ளீடுகளை வேண்டாது, ஒரு சில மணிநேர உழைப்பை வேண்டிநிற்கின்றன. நோய்களையும் நுண்ணுயிர்களையும் கட்டுப்படுத்துகின்ற பல்வேறு கலாசார முறைகளும் இங்கே சுருக்கமாகத் தரப்படுகின்றன:

எதிர்ப்புச் சக்தி மிக்க ரகங்கள்

நோய்களையும் நுண்ணுயிர்களையும் எதிர்க்கக் கூடிய பயிர் வகைகளைத் தெரிவுசெய்தலும் பயிரிடுதலும் நோய்களையும் நுண்ணுயிர்களையும் குறைப்பதற்குரிய சிறந்த வழிகளாகும் என்பது அனுபவ ரீதியாகக் கண்டறியப்பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில் தாவர நோய்களைத் தடுப்பதற்குரிய தாக்கமான முறைகள் இல்லை; வைரஸ் நோய்களினால் பாதிக்கப்பட்ட தாவரங்களைப் பொறுத்தவரையிலும் இது உண்மையாகும். இத்தகைய நோய்களைத் தடுப்பதற்குரிய மாற்றீடு எதிர்ப்புச் சக்தியுள்ள தாவரங்களைப் பயிரிடுவதாகும்.

பயிர்களைச் சுத்தமாக்குதல

நுண்ணுயிர்களினாலும் நோய்களினாலும் பாதிக்கப்பட்ட தாவரங்கள் பழங்கள் என்பவற்றின் மூலம் மீண்டும் நோய்கள் பரவலாம். இவற்றைச் சேகரித்து அழித்தலும் பயிர்களின் சுகாதார நிலைமையைப் பேணலும் இதனைத் தடுக்கும். இதன் விளைவாக நுண்ணுயிர்களும் நோய்களும் குறைந்து பயிரினங்கள் குறைந்த அளவே தாக்குதலுக்கு உட்படும்.

சுழல்முறைப் பயிர்

ஒரே பயிரைத் திரும்பத் திரும்பப் பயிர்டுவதனால் பயிரைப் பாதிக்கக் கூடிய சில நுண்ணுயிர்கள் சிறப்பாக வளருவதற்கு வழி வகுக்கும். சில நுண்ணுயிர்கள் குறித்த சில பயிர்களை உணவாகக் கொள்வதனால் இத்தகைய பயிர்கள் பயிரிடப்பட்டால் அவை வேகமாகப் பெருக்கமடையும். ஒரே பயிர் பயிரிடப்பட்டால் களைகளும் அடர்த்தியாக வளருவதற்கு இடமுண்டு. அடுத்தடுத்த பருவத்தில் வெவ்வேறு வகையான பயிர்கள் பயிரிடப்பட்டால் களைகளின் பெருக்கத்தைத் தடுக்கலாம். எனவே சுழல்முறைப் பயிர்ச்செய்கை நுண்ணுயிர்கள், நோய்கள், களைகள் என்பவற்றைக் குறைக்க உதவுகின்றது.

கலப்புப் பயிர்

சிலபயிர்கள் நுண்ணுயிர்களைக் கவருவதில்லை; நுண்ணுயிர்களால் இலகுவாகப் பாதிக்கப்படக் கூடிய பயிர்களுக்கிடையில் இத்தகைய பயிர்களைப் பயிரிட்டால் நோய்களின் தாக்கம் குறைவாகவிருக்கும் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

பயிரிடற் காலம்

பயிரிடற் காலம் நுண்ணுயிர்களின் விரைவான பெருக்கத்தில் பாதிப்பினை ஏற்படுத்தலாம். சில பருவங்களில் நுண்ணுயிர்கள் பெருக்கமடைந்து அதி உயர் மட்டத்தை அடைகின்ற அதே வேளை இன்னும் சில பருவங்களில் அவற்றின் பெருக்கம் குறைவாக உள்ளது. இதன்படி நுண்ணுயிர் குறைவாக உள்ள காலப் பகுதியில் சில பயிரினங்களைப் பயிரிடலாம். நுண்ணுயிர்களின் பெருக்க காலத்தில், பயிர்கள் அறுவடைக்குத் தயாராகவோ அல்லது அறுவடை செய்யப்பட்டோ இருக்கலாம். இது பயிரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்.

பயிரின் தெரிவு

சூழற் காரணிகள் உயர்வாகவுள்ள பிரதேசங்களில் சில பயிர்களைப் பயிரிட்டால், அவை விரைவாக வளர்ச்சியடைந்து நேரகாலத்தில் அறுவடை செய்யப்படும். மறுபுறத்தில் இச் சூழற் காரணிகள் உயர் மட்டத்தில் இல்லாத நிலங்களில் இவற்றைப் பயிரிட்டால் அவை நீண்ட வளர்ச்சிக் காலத்திற்கு உட்படுவதன் விளைவாக நோய்த் தாக்கத்திற்கு உட்படலாம். சில பயிர்களைச் சில பிரதேசங்களில் பயிரிட்டால் அவை இலகுவாகத் தாக்கப்படுகின்றன. மேலும் நீண்ட காலப் பயிர்களை விடவும் குறுங்காலப் பயிர்களைப் பயிரிடல் விரும்பத்தக்கதாகும். நீண்ட காலப் பயிர்களைப் பொறுத்தவரையிலும் அவை நோய்களுக்கும் இயற்கை அழிவுகளுக்கும் உட்படக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகும். பயிரிடப்படுகின்ற பிரதேசத்தின் காலநிலையைக் கருத்திற்கொண்டு பயிர்களைத் தெரிவு செய்தல் சிறந்ததாகும்.

பயிர் இடைவெளி

அடர்த்தியான பயிர்ச் செய்கை முறையினால் நோய்களும் நுண்ணுயிர்களும் பெருக வாய்ப்புண்டு. இதனைக் குறைப்பதற்கு விதித்துரைக்கப்பட்ட பயிர் இடை

வெளியை மேற்கொள்ளுதல் வேண்டும். அம்பாறையில் கபில நிற வெட்டுக்கிளிகளின் தாக்கம் ஏற்படுவதற்கு நெற்பயிரின் அடர்த்தியும் ஒரு காரணமாகும் எனக் கூறப்படுகின்றது.

பசளைப் பிரயோகம்

தேவையான போஷாக்கு சமவலுவில் அமைந்திருந்தால் பயிரின் வளர்ச்சி உறுதியாக அமைவதுடன் நுண்ணுயிர், நோய் என்பவற்றின் தாக்கம் குறைவாகும் என அவதானிக்கப்பட்டுள்ளது. மறுபுறத்தில் மிகையானபசளைப் பாவனை பல தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியதாகும். உதாரணமாக நைட்ரஜன் மிகையாகப் பாவிக்கப்பட்டால் பயிர் செழுமையாக வளருவதுடன் நோய்த் தாக்கத்திற்குரிய வாய்ப்புக்களும் அதிகமாகும். அரிசி வெடிக்கின்ற நோயும், வேளாண்மை பெருமளவிற்கு மடிப்புறுகின்ற நோயும் மிகை நைட்ரஜன் பசளைப் பாவனையின் விளைவாகும். ஆகையால் உரிய நேரத்தில் தேவையான அளவு பசளையுடன் பசளைப் பிரயோகம் இடப்பெற்றால நோய், நுண்ணுயிர் எதிர்ப்புச் சக்தி குறைவடையும்.

மண் முகாமை

பயிர்களை நடுவதற்கு முன்னர் நிலத்தைச் சிறப்பாகத் தயார்ப்படுத்துதல் வேண்டும்; இவ்வாறு செய்கையில் நுண்ணுயிர்களின் வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங்களும் மேற்பரப்பிற்கு வருவதால் அவை குறைவடைவதற்கு வழி ஏற்படுகின்றது. களைகளைக் கட்டுப்படுத்துவதிலும் நிலத்தைத் தயார் செய்தல் முக்கிய இடம் வகிக்கின்றது. மேலும் மண் அரிப்பு தடுக்கப்பட்டு, மண்ணின் வளம் அதிகரிக்கக் கூடிய வகையிலேயே நில முகாமை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இத்தகைய நிலத்தில் வளருகின்ற பயிர் நோய்களையும் நுண்ணுயிர்களையும் எதிர்க்கக் கூடியதாக இருக்கின்றது.

அசைவுப் பயிர்ச்செய்கை

பயிர் செய்யப்படாத பருவங்களில் நுண்ணுயிர்கள் மாற்றுப் பயிரினங்களுக்கு மாறுகின்றன. இம் மாற்றுப் பயிரினங்கள் போதிய உணவை அளிக்காமையால பயிர் செய்யப்படாத பருவத்தில் இவற்றின் பெருக்கம் குறைவாகவிருக்கின்றது.

மோசமான நீர் முகாமை —நீர் குறைவடைதல் அல்லது மிகையாக விருத்தல்— நுண்ணுயிர்களையும் நோய்களையும் உருவாக்கும் உயிரணுக்களைத் தோற்றுவிக்கின்றன. நீர் குறைவுக் காலம் சில நுண்ணுயிர்களின் வளர்ச்சிக்குச் சாதகமாகவுள்ள அதேவேளை தொடர்ச்சியான நீர் பெருக்கம் சில நோய்களின் பெருக்கத்திற்கு உதவுகின்றது. சில சமயங்களில் நீர்ப்பாசனம், ஆரோக்கியமான /ஒரு பிரதேசத்திற்கு நோய்களையும் களைகளையும் எடுத்துவருகின்ற ஒரு ஊடகமாக விளங்கலாம்.

மேற் குறிப்பிட்ட கலசார முறைகள், சிறந்ததும் திறமை மிக்கதும், இலாபகரமானதுமான ஒரு நோய் நுண்ணுயிர்த்தடுப்பு நுட்பமாக விளக்குகின்றது என்பது தெளிவாகும். மேலும் இம் முறைகள் மண், நீர் சூழல் என்பவற்றையும் பாதுகாக்கின்றன.

---

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

சுமையைக் குறைக்க உதவ வேண்டும். அதே சமயத்தில், உற்பத்தி அதிகரிப்பதாலும் சேவைகள் அதிகரிப்பதாலும் புதிய வேலை வாய்ப்புகள் தோன்றுவதாலும் பொருளாதாரமும் நன்மையடைகின்றது. எனினும், கடன் வாங்குவதன் மீதே தொடர்ந்து சார்ந்திருக்கும் செயல் ஒரு பாரதூரமான பிரச்சினையாகி விடலாம். அத்துடன் கடன் பொறி எனப்படும் ஒரு நிலைமையை நோக்கி நாடு போய்க் கொண்டிருக்கிறது என்ற கண்டனங்கள் தோன்றுவதற்கும் இடம் ஏற்படுகிறது. உதாரணமாக 1975ம் ஆண்டில் பொதுப்படுகடன் விகிதம் நாட்டின் மொத்த பொருளாதாரத்தில் 40 சத விகிதமாக ஒரு மிதமானமட்டத்தில் இருந்தது. ஆனால், அதற்குப் பின்னர், கடன்வாங்குவதன் மீது சார்ந்திருக்கும் நிலை அதிகரித்ததன் காரணமாக, அது படிப்பரப்பூட்டும் விதத்தில் தற்போது 70 சத விகிதத்துக்கு மேல் அதிகரித்துள்ளது. 1983 ம் ஆண்டில் வட்டிக் கொடுப்பனவுகளும் கடன் இறுப்புக்களும் மட்டும் மொத்தப் பாதீட்டில் 25 சதவிகிதத்துக்கு மேற்பட்டனவாக இருந்தன. இது நாட்டுக்குப் பிரதிகூலமான நிதி நிலையொன்று உருவாக்குவதற்குத் தெளிவான அறிகுறியாகும். அத்துடன், அரசாங்கம் அதிக வருமானங்களை உண்டாக்க வேண்டிய அவசியத்தையும் எடுத்துக்காட்டுகின்றது. படுமோசமான படுகடன் பிரச்சினை தோன்றுவதைத் தவிர்க்க அரசாங்கம் இரு வழிகளில் ஒன்றைத் தெரிவு செய்யவேண்டும்: பொதுச் செலவுகளைக் குறைப்பது அல்லது அரசாங்க வருமானத்தை அதிகரிப்பது. உற்பத்தியையும் வேலைவாய்ப்புக்களையும் வருமானங்களையும் அதிகரிக்க நாட்டுக்குள்ள கடப்பாடுகளைக் கருத்திற்கொள்ளுமிடத்து, முதலாவது வழி அவ்வளவு சிலாக்கியமானதல்லவென்பது வெளிப்படை. எனவே, அடிப்படையில்இரண்டாவது வழியே எஞ்சியுள்ளது. எனினும், உற்பத்திக்கும் வேலை வாய்ப்புகளுக்கும் வாழ்க்கைத் தரங்களுக்கும் ஊறு விளைக்காமல் மேலதிக வருமானங்களை உண்டாக்குவதெனில், கற்பனா சக்தியுடன் வழமைக்கு மாறான கொள்கை முடிவுகள் செய்யப்பட வேண்டியதவசியமாகும்.

15-ம் பக்கத் தொடர்ச்சி

இதே வேளை நாட்பட்ட நஞ்சூட்டல் சம்பவங்கள் கவனிக்கப்படாமல் போகலாம்: அல்லது இன்னொரு கோணத்தில் அப்படியே கிடக்கலாம்.

எந்தக்குறிப்பிட்ட காலத்திலும் வளர்முக உலகிலே 40 கோடி மக்கள் பீடைகொல்லி தொடர்பான நோயால் வருந்துகிறார்களென்று இதுவரை மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் அண்மையில் நடத்தப்பட்ட ஒரு பரிசீலனையிலிருந்து 1980 ஆண்டில் மொத்தம் 11,811பேர் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டுள்ளார்களென்றும் அவர்களில் 1,112 பேர் மரணத்தைதழுவினார்களென்றும் தெரியவந்துள்ளது. இந்த மொத்த தொகையினரில் அரைவாசிப்பேர் தற்செயலாக நஞ்சூட்டப்பட்டவர்களாவர். தற்கொலை செய்ய முயன்றவர்களின் தொகை 9,490 என மதிப்பிடப்படுகிறது. இலங்கையின் பரிமாணத்தை கவனிக்குமிடத்து இந்தப்புள்ளி விவரங்கள் ஏற்கப்படமுடியாத அளவில்வெகுஉயர்வாயுள்ளன.

இங்கு குறிப்பிடப்பட்ட புள்ளி விவரங்கள் தவிர்க்க முடியாதவாறு குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளவையென்ற உண்மையைக்கவனத்திற் கொள்ளும்போது பீடைக்கொல்லிகளின்அபாயங்களுக்கெதிரான குற்றச்சாட்டு இன்னும் அதிக வலுவடைகின்றது.

கொழும்பு வைத்திய போதனாபீடத்தைச்சேர்ந்த சட்ட மருத்துவ திணைக்களத்தின் அதிகார எல்லைக்குள் நேர்ந்த மரணங்களைப்பற்றிய பகுப்பாய்வொன்றிலிருந்து கீழ்கண்டபுள்ளிவிவரங்கள்தெரியவந்தன .நடத்தப்பட்ட 697பிண ஆய்வுகளில் 66ல் மரணம் பீடைகொல்லி நஞ்சேறியதால் சம்பவித்ததென தெரியவந்துள்ளது. மற்றெல்லாநஞ்சுகளாலும் மரணமுற்றோரின் தொகையான98உடன் ஒப்பிட்டு பார்க்கும் போது இது குறிபிடத்தக்க ஆச்சரிய மூட்டும் தொகை என்பதில் சந்தேகமில்லை. பீடைகொல்லி நஞ்சேறியதால் செத்த 66 பேரில் 65 பேர் பூச்சிக்கொல்லிகளுக்கும் மற்றவர்கள் களைகொல்லிகளுக்கும் பலியாகியுள்ளனர். இவர்களில் மிகப்பெரும்பாலோர் தற்கொலை செய்து கொண்டவர்களாவர்.

பீடைகொல்லித் தயாரிப்பில் இயல்பு உறுப்புக்களாக (கூறுகள்) சேர்ந்திருக்க கண்டுபிடிக்கப்பட்ட இரசாயன பொருள்கள் எத்தனையோ விதமானவையாக இருப்பதால் அவற்றின் தொகையைப் பட்டியலிடுவது மிகக்கடினம். இவற்றில் மிகமுக்கியமான சில வருமாறு: குளோரோன் ஐத கார்பன்கள், சேதனபொஸ்பரஸ் கூட்டுப்பொருள்கள், கார்பனேட்டுகள், பாகுவாட், ஆர்சனிக், தல்லியம், பாதரசம் பொஸ்பரஸ் உலோகடைஹைட் செம்பு. இப்பொருள்களில் பல சக்திமிக்க நச்சுக் குணங்களைக் கொண்டவையாகும். பிரதான பொருளின் நச்சுசக்தி ஒருபுறமிருக்க அவற்றில் சில நச்சுக்கரைப்பான்களில் கரைந்தாலும் தீயவிளைவுகளை ஏற்படுத்தக் கூடியன.

இப்பொருள்கள் சாதாரணமாக வாய்வழியாகவே மனிதனின் உடலுக்குள் நுழைகின்றன. இதில் நாம் சுவாசாசயத்தின் (நுரையீரல்) முக்கியத்துவத்தையும், சுவாசாயத்துக்கு இட்டுச்செல்லும் வழிகளின் முக்கியத்துவத்தையும் தள்ளிவிடவில்லை; நச்சுத் தன்மையான இரசாயனப் பொருள் வாயு ரூபத்திலோ அல்லது அது பிரிந்து ஏறக்குறைய 1000 மில்லிமீட்டர் குறுக்களவுள்ள நுண்துகள்களின் உருவத்திலோ இருக்கும் போது, சுவாசக்குழல் வழியாகச் சுலபமாய் உடலுக்குள் உறிஞ்சப்பட்டு விடலாம். இதில்பல சந்தர்ப்பங்களில் புறக்கணிக்கப்பட்டுவிடும், ஓர் உண்மை என்னவென்றால் அந்த இரசாயனப்பொருள் கரைசலாகவோ அல்லது அணுவாக்கிய துகள்களின் உருவத்திலோ இருக்கும் போது அது தோல்வழியாக உடலுக்குள் உறிஞ்சப்படலாம்என்பதாகும்.

பீடைகொல்லிகளால் கடுமையாக நஞ்சூட்டப்பட்ட சம்பவங்களேபொதுமக்களின் கண்களில்படுகின்றன; ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்டது போல். இத்தகைய சம்பவங்களில் பல தற்கொலை மரணங்களாகவோ அல்லது தற்செயலாக ஏற்பட்ட மரணங்களாகவோ இருக்கின்றன. இவற்றில் ஒரு சில கொலைசெய்யும் நோக்கத்துடன் உண்டாக்கப்பட்ட மரணங்களாகக் கூட இருக்கலாம். மக்கள் எதைக்கவனிக்கத் தவறியிருக்கிறார்களெனில், நாட்பட்ட நஞ்சேற்றத்தால், உடலிலுள்ள அவயவங்கள் அல்லது மண்டலங்கள் பிழையாகத் தொழிற்படுவதைத்தான். உயிருள்ள ஓர் உடலுக்குள் நச்சுத்தன்மைவாய்ந்த ஓர் இரசாயனப் பொருள் பிரவேசித்தால் உடல் அப்பொருளிலுள்ள நச்சுத்தன்மையை நீக்க முயல்வது வழக்கம். இத்தகைய சந்தர்ப்பங்களில் உள்ளெடுக்கப்பட்ட நச்சின் அளவு நச்சு நீக்கல் அளவுக்குக் குறைவாகவோ அல்லது நச்சுநீக்கல் அளவுக்குச் சமமாகவோ இருந்தால் அந்த இரசாயனப் பொருளால் உண்டாக்கப்படும் எந்த விளைவும் தற்காலிகமாகவே இருக்கும். ஆனால் நச்சு நீக்கல் அளவு உள்ளெடுக்கப்பட்ட நச்சின் அளவுக்கு குறைவாக இருந்தால், உடலில் நச்சு படிப்படியாகச் சேர்ந்து குவிந்துவிடுகிறது. உடலின் சில குறிப்பிட்ட திசுக்களில் (இழையங்கள்) சில இரசாயனப்பொருள்கள் படிவதுமுண்டு. இவ்விடங்களில் அந்த இரசாயனப் பொருள்கள் உடலின் நச்சுநீக்கல் செயற்பாட்டை ஒன்றில் எதிர்த்து நிற்கின்றன அல்லது தவிர்க்கின்றன. இவ்விரு வழிகளில் தான் சில பீடைகொல்

லிகளின் எச்சங்கள் உயிர்த்திசுககளில் தங்கியிருந்து, ஒன்றில் நாட்டப்பட்ட தீய விளைவுகளை உண்டாக்குகின்றன, அல்லது உணவு மண்டலத்துக்குள் பிரவேசித்துவிடுகின்றன.

குளோரீன் ஏற்றிய ஐதரோகார்பன் நஞ்சேறியதால் மரணம் சம்பவித்ததென நிரூபணமாக 28 பேரின் பிரேத ஆய்வுகள் எங்களால் பரிசிலனை செய்யப்பட்டதில், கீழ்கண்ட விளைவுகள் தெரியவந்தன. அவர்களில் 71 சத விகிதத்தினரில் வயிற்றின் உட்கூறா சேதமடைந்திருக்கக் காணப்பட்டது. 86 சதவிகிதத்தினரிடம் சுவாசப் பைகள் சேதமுற்றிருக்கக் காணப்பட்டது. 21 சதவிகிதத்தினரில் சுவாசப் பைகளுக்குள் இரத்தப் பெருக்கு ஏற்பட்டிருந்தது. 29 சதவிகிதத்தினருக்கு மூளை சேதமடைந்திருந்தது. சேதனபொஸ்பரஸ் நஞ்சூட்டல் சம்பந்தப்பட்டமட்டில் நிலைமை வேறுவிதமாயிருந்தது. அது நரம்புமண்டலத்தின் ஒரு பகுதியைத் தீவிரமாகவும் தொடர்ந்தும் தூண்டிவிடுவதால், இருதயத் துடிப்பின் வேகம் குறைகிறது; மூச்சுவாங்கக் கஷ்டமாயிருக்கிறது; வாந்தி வருகிறது; வயிற்றுப்போக்கு உண்டாகிறது; நரம்பு இழுப்பூஉம் வலிப்பும் அதிமயக்க நிலையும் (நீண்ட உறக்க நிலை) ஏற்பட்டு மரணம் சம்பவிக்கின்றது.

உலகப் பிரசித்தமான களைகொல்லியான பரகுவாட் வலுவுள்ள காரமாயிருப்பதால் அது கண்களுக்குப் பெருந்தீங்கு விளைவிக்கும் மிக்க நச்சுத்தன்மையுள்ள ஓர் இரசாயனப் பொருளாகும். அது வாயில் புண் உண்டாக்குவதுடன், சிலசமயங்களில் தோலில்கூட புண்ணைத் தோற்றுவிக்கிறது, சிறுநீரக மேற்சுரப்பிகளுக்கு (சிறுநீரகத்தைதையொட்டியுள்ளசக்திமிக்க சீவாதாரமாண ஓர் அமைப்பு) அது உண்டாககும் சேதம் இலங்கையில் முதலாவதாக வர்ணிக்கப்பட்டது.

ஆர்செனிக் (வெள்ளைப் பாஷாணம்) நஞ்சைப்பற்றி ஈண்டு மிக விசேஷமாகக் குறிப்பிடவேண்டும். ஏனென்றால் அது பொதுவாக விவசாயத்தில் உபயோகிக்கப்படுகிறது. அத்துடன், மற்றும் சந்தர்ப்பங்களிலும் இந் நஞ்சூட்டல் சம்பவங்கள் நேரிடுவதுண்டு. நஞ்சூட்டுவதற்கு இதில் சிறிதளவே போதும். வாயில் போட்டாலும் இது கடும் விஷமாகி, விஷபேதி (கோதாரி)யில் காணப்படும் அறிகுறிகள் யாவும் தென்படும். அது வாந்தியையும் வயிற்றுவலியுடன் வயிற்றுப் போக்கையும் தசைநார் வலிகளையும் ஏற்படுத்துகிறது; உடல் உலர்ந்து, நரம்புகள் தளர்ந்து முறை பிரழ்வாகச் செயற்படும்; குறுகிய நேரத்துக்குள் மரணம் சம்பவிக்கும். நாட்பட்ட நஞ்சூட்டலின் விளைவுகள் வெளித்தெரியாது, வஞ்சகனைப்போலக் கள்ளத்தனமாக வேலைசெய்யும். முதலில் தெளிவற்ற சுகவீனம் ஏற்பட்டது போலத்தோன்றும். ஆனல் பலசந்தர்ப்பங்களில் நோய் நிர்ணயத்தில் சிக்காது தப்பிவிடும். பின் அடிவயிற்றில் ஏதோ செய்வதுபோல அசௌகரியமாகத்தோன்றும்; இடைவிட்டு விட்டுச் சமியாக்குணம் (அஜீரணம்) உள்ளது போலத்தோன்றும். நல்ல சிவப்பாயுள்ளவர்களின் விஷயத்தில் சருமத்தின நிறம் மாறும்; தலைமயிர் உதிரும்; நிறவேற்றுமை தெரியத்தொடங்கும்; நகங்சள் நொய்மையாக (முறியத்தக்கவையாக) வும் உள்ளங்கைகளும் உள்ளங்கால்களும் தடிப்பாக மாறும். குருதிச்சோகை (இரத்தமின்மை)நோய் ஏற்படும்.

பாதரசம் சிறுநீரகத்தைத் தாக்கும் ஒருநஞ்சாகும்பொஸ்பரஸ் தன்சு தாக்குதலுக்குக் கல்லீரலை தெரிவு செய்கிறது. சிலநாட்களுக்குள்கல்லீரலினுள்ளகலங்களைஅழித்து, செங்கண்மாரி (மஞ்சட்காமாலை) என்னும் நோயை உண்டாக்குகிறது; உடல்வீக்கம் ஏற்பட்டு, பல்வேறு இடங்களிலிருந்து இரத்தம் கசிகின்றது; மனக்குழப்பம் உண்டாக்கிறது; அடுத்து அதி மயக்க நிலை (நீண்டஉறக்க நிலை) ஏற்பட்டு, மரணம் சம்பவிக்கிறது. தல்லியம் உடனிகழ்வான அறிகுறிகளைத் தோற்றுவிக்கின்றது. இவற்றில் மிகத் குறிப்பிடத்தகுந்த ஒன்று மயிர்கற்றை கற்றையாக உதிர்வதாகும்.

இந்நாட்டில் பீடைகொல்லிகளால் எவ்வாறு மக்கள் நஞ்சூட்டப் படுகிருர்களென்பது நன்கு தெளிவாகத்தெரிகிறது. தற்கொலை செய்துகொள்ள முயல்வோர் விவசாய இரசாயனப் பொருட்களையே தெரிவு செய்கின்றனர். அவை உடனடியாகக் கிடைக்கக்கூடியவையாயிருப்பது இதற்கு ஒரு காரணம். அவற்றின் அபாயகரமான விளைவுகளை அவர்கள் ஏற்கனவே அறிந்திருத்தல் மற்ருெரு காரணம்.

அவர்களுக்குப் பூச்சிகொல்லிகள் கிடைக்காவிட்டாலும், மாற்றுப்பொருள் ஒன்றை அவர்கள் உபயோகிக்கவே செய்வரென்று வாதிக்கப்படலாம். ஆனல், இவையெல்லாம் விவாதித்துத் தெளிய வேண்டிய விஷயங்கள். மிக முக்கியமாகக் கவனிக்கவேண்டியதென்னவெனில், தற்செயலாக நஞ்சூட்டப்படும் சம்பவங்களாகும்.

பீடைகொல்லிகளை உற்பத்தி செய்தல், அவற்றைப் பொதிப்படுத்தல், அவற்றை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குக் கொண்டுபோதல், அவற்றைக் களஞ்சியப் படுத்தல் ஆகிய வேலைகள் நடைபெறும் சமயங்கள் நஞ்சூட்டல் அபாய ஏதுக்களைக்

கொண்டவையென்பதும்வெளிப் படை. வீடுகளில் தற்செய லாக நஞ்சேறும் சம்பவங்கள் ஏற்படுவதற்குக் கவனக் குறைவே பிரதான காரணம் என்பதில் சந்தேகமில்லை. வய லில் நஞ்சூட்டப்படும் சம்ப வங்கள் நடப்பதற்கு, பீடை கொல்லிகளைப் பாதுகாப்பாக உபயோகிப்பது பற்றித் தெரி விக்கப்பட்டுள்ள ஆலோசனை களில் கவனஞ்செலுத்தாமை யே பல சந்தர்ப்பங்களில் காரணமாயுள்ளது. பீடை கொல்லிகளின் நஞ்சு உணவுப் பொருள்களில் புகுந்து விடு வதற்குரிய காரணங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுவ தெனில், சமூக உணர்வும், பொறுப்பும் இல்லாமையே அக் காரணங்களாகும்.

இத்தன்மையான பிரச் சினைகளைச் சமாளிப்பதற்கான பிரதான வழிகள்: முதலா வதாக, பீடைகொல்லிகள் சுலபமாகக் கிடைப்பது கட் டுப்படுத்தப்பட வேண்டும்; இரண்டாவதாக, அவற்றிற் கான கோரிக்கை குறைக் கப்படல் வேண்டும். ஆனால், பீடைகொல்லிகள் சம்பந்த மாக இவ்விரு நடவடிக்கை களில் எதையும் எடுக்க முடி யாது. எனினும், பிரச்சினை யைச் சமாளிப்பதற்குரிய, உடனடி நடவடிக்கையாக அவை இலகுவாகக் கிடைப் பதைக் கட்டுப்படுத்தலாம்: அத்துடன், அத்தியாவசியமிக்க தேவைப்படும் நிலைமைகளில் மாத்திரமே அவை உபயோ கிக்கப்படவேண்டுமென்றும் கட் டுப்படுத்தலாம். ஆனால், மிக அவசரமாக எடுக்கப்படவேண் டிய நடவடிக்கைகள் என்ன வென்றால், பீடைகொல்லிகள் பற்றிப் பொதுமக்களுக்கு அறிவூட்டுவதாகும். பீடை கொல்லிகளைக் கையாளுபவர் களுக்கு ஏற்றவகையானஅறிவு ஊட்டப்படுவதுடன் அவர்களி டம் நோக்க உறுதி உண் டாக்கப்படுவதும் அத்தியாவசி யமாகும்.

# அரேபிய வளைகுடா நாடுகளிலிருந்து முதலீடு பெறுதலும் வர்த்தக வாய்ப்புகளும்

## இலங்கை நிலை தொடர்பான சில குறிப்புகள்

—ஆர். ஏ. அரம்பேவெல

மத்திய கிழக்குடனான இலங் கையின் வர்த்தக உறவுகளை பல நூற்றுண்டுகளுக்கு முன் னிருந்து அடையாளம் காண லாம். இலங்கைக்கும் மத்திய கிழக்குக்கும் இடையில் நிலை யான வர்த்தக தொடர்புகள் நிலவியதனை உறுதிப்படுத்து வதற்கு போதிய வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. இத்த கைய ஒரு உறவு நிலவி வந் துள்ள போதிலும், தேயிலை தவிர்ந்த ஏனைய பொருட்க ளைப் பொறுத்தவரையிலும் இலங்கைக்கும் வளைகுடாநாடு களுக்கும் இடையிலான வர்த் தகம் சிறிதாகவே உள்ளது; தேயிலை மாத்திரம் வர்த்தகத் தில் 80 சதவீதமளவில் இருக் கின்றது.

மத்திய கிழக்கில் அதிக அள விலான சந்தை வாய்ப்புக்கள் உள்ளன. 1973-74 எண் ணெய் விலை அதிகரிப்பினைத் தொடர்ந்து இப் பிராந்தியம் பத்திரிகைத் தலைப்புக்களில் முக்கிய இடம் பெற்றதுடன், உலகளாவிய பண்டங்கள், சேவைகள் ஏற்றுமதியாளர்க ளுக்குரிய ஒரு இடமாகவும் விளங்குகின்றது.

எண்ணெய் வளத்தினால் தோற்றுவிக்கப்பட்ட அதிக ரித்த கொள்வனவுச் சக்தியும், தமது பொருளாதாரங்களை விரைவாக அபிவிருத்தி செய் வதற்குரிய தேவையும் இந்நா டுகளைப் பல்வேறு வகையான நுகர்வுப்பொருட்களையும்கைத் தொழிற் பொருட்களையும் அதிகரித்த அளவில் கொள் வனவு செய்யத் தூண்டியுள் ளன.

1979 காலகட்டத்தில் இலங் கைக்கும் ஆறு அராபிய வளை குடா நாடுகளுக்கும் இடையி லான வர்த்தகம் 6 கோடி அமெரிக்க டொலர் அளவில் இருந்ததையும் இதில் 44 கோடி அமெரிக்க டொலர் (அல்லது 73%) தேயிலை ஏற் றுமதியினால் பெறப்பட்டது என்பதனையும் காணலாம். மத்திய கிழக்கின் ஏனைய பாகங்களிலும் இதனை ஒத்த வர்த்தகப் போக்குகள் நில வுகின்றன, இப் பிராந்தியத் தின் தேயிலை இறக்குமதி விகி தாசாரம் வளைகுடாப் பிராந் தியங்களைவிடவும் அதிகமாக உள்ளது. ஆகையால், தேயிலை ஏற்றுமதி தவிர, மத்தியகிழக் குடனான இலங்கையின் வர்த் தகம் ஆரம்ப அபிவிருத்திப் படியில் உள்ளது எனலாம்.

இலங்கை மிகவும் தாம தித்து இச் சந்தைகளுக்குள் நுழைந்திருப்பதுடன், கிடைக் கப் பெறுகின்ற சந்தை வாய்ப் புக்களைப் பயன்படுத்தச் சிறித ளவு நடவடிக்கைகளையே எடுத்துள்ளது. இதன் விளை வாக இலங்கை தற்போது நுழைகின்ற ஒவ்வொரு துறை யிலும் பலத்த போட்டியை எதிர்நோக்க வேண்டிஉள்ளது. எனினும், பொருத்தமான ஒரு சந்தைப்படுத்தல் அணு குமுறையுடன் இலங்கை மத் திய கிழக்கில் பாரிய வர்த்த

கப் பங்கினைப் பெறலாம். குறுங்கால அடிப்படையிலன்றி நீண்டகால அடிப்படையில் வர்த்தக உறவுகளை விருத்தி செய்வதற்குரிய உறுதியான ஈடுபாடு இலங்கை கவனத்திற் கொள்ளவேண்டிய மிக முக்கியமான ஒரு அம்சமாகும். எல்லா வகையான பொருட்களையும் சேவைகளையும் குவிப்பதற்குரிய ஒரு இடமாக மத்திய கிழக்கை கருதுதல் பொருத்தமற்றதாகும். இதற்கு முரணுக மிகவும் கடுமையான சந்தைகளுள் ஒன்ருக இது வளர்ச்சி அடைந்துள்ளது. சரியான சந்தைப்படுத்துதல் உறுதியானமுறையின்மூலம்மாத்திரமே இங்கு வெற்றியை உறுதிப்படுத்தலாம்.

மத்திய கிழக்கில் எவ்விதம் வர்த்தகம் நடைபெறுகின்றது என்பதனை விளங்குதல் மிக முக்கியமாகும்; இப் பிராந்தியத்தின் தனிப்பட்ட கலாசாரப் பின்னணியின் பாதிப்பிற்கு இது உட்பட்டுள்ளது. செழிப்புக் காலத்தில் அதிகரித்த கவனம் செலுத்தப்பட்டமையால் இச் சந்தைகள் அதிகளவு நவீனமடைந்துள்ளன. ஆகையால் இச் சந்தைகளுக்கான இலங்கையின் அணுகுமுறை பற்றி மீள் மதிப்பீடு செய்தல் பிரதானமாகும்.

உணவு விவசாயத் தயாரிப்புகள் என்றவற்றுடன் ஊழியர் செறிவு மிக்க கைத்தொழிற் பொருட்கள் ஆகிய இரண்டும் இலங்கை விஸ்தரிப்பினை மேற்கொள்ளக்கூடிய இரு பிரதான துறைகளாகும். தேயிலை, தெங்குத் தயாரிப்புகள் ஏலம், வாசனைத் திரவியங்கள், புதிய மரக்கறிகள், பழங்கள், பூக்கள் என்பன உணவு விவசாயத் துறையிலும, தைத்த ஆடைகள், பாதணிகள், தோற் பொருட்கள், இரத்தினக்கற்கள், நகைகள் என்பன ஊழியர் செறிவுமிக்க கைத்தொழிற்துறையிலும் வாய்ப்புக் கூடிய பொருட்களாக இருக்கின்றன. இத் தயாரிப்புக்களில் இலங்கையின் தற்போதைய பலம், எதிர்கால உற்பத்தித் திறன் என்பவற்றின் அடிப்படையிலும் பரிமாணம், பெறுமதி என்பவற்றில் எதிர்பார்க்கப்படுகின்ற வளர்ச்சியின் பிரகாரமும் இவை தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மேற்காணும் பொருட்கள் மீது கவனம் செலுத்துமாறு நான் கூறுவது, இலங்கை ஏனைய ஏற்றுமதிப் பொருட்கள் தொடர்பான—குறிப்பாக பாரம்பரியமற்ற துறை—சந்தை வாய்ப்புக்களை ஆராயக்கூடாது எனப் பொருள் படாது. தெரிந்தெடுக்கப்பட்ட சில தயாரிப்புத் தொகுதிகள் பற்றிய ஒரு சுருக்கமான சந்தை நுண்ணாய்வு இங்கு தரப்படுகிறது:

### தேயிலை

இலங்கைத் தேயிலையின் வளர்ச்சிச் சந்தையாக மத்திய கிழக்கு தொடர்ந்தும் விளங்குகிறது. பரிமாணம், பெறுமதி என்பவற்றின் பிரகாரம் இப் பிராந்தியம் மொத்த தேயிலை ஏற்றுமதியில் 40%ஐ பெறுகின்றது. மத்திய கிழக்கில் அதிகரித்த வர்த்தக வளர்ச்சிக்குரிய பிராந்தியமாக வளைகுடாப் பிராந்தியம் விளங்குகின்றது. தற்போது வளைகுடாப் பிரதேசத்திற்கு 18,000தொன் அளவுதேயிலை ஏற்றுமதி செய்யப்படுகின்றது. 1985 முடிவடையும் போது வளைகுடாவிற்கு ஏற்றுமதிசெய்யப்படுகின்ற தேயிலை 25,000 தொன்களாக அதிகரிக்கும் எனஎதிர்பார்க்கப்படுகின்றது. மேற்படி சந்தைகளிலிருந்து இலங்கை 90 கோடி ரூபா சம்பாதிக்கலாம் எனமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இப் பிராந்தியத்திற்குரிய ஏற்றுமதிகளுள் பெரும் பகுதி பொதி உருவில் இருப்பதனுல் எமது தேயிலையின் சேர்க்கப்பட்ட பெறுமானம் அதிகரிப்பதற்குரிய வாய்ப்புக்கள் உண்டு என்பதனை அவதானித்தல் பிரதானமாகும். 1980இல் வளைகுடாப் பிரதேசத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அடைக்கப்பட்ட தேயிலை 1.3கோடிகிலோ கிராம்களாக இருந்தது. 1975இல் இது 40 இலட்சம் கிலோ கிராம்களாக இருந்தது. இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலைப் பைகளில்இந் நாடுகள் 80 சதவீதத்தைக் கொண்டவை என்பதும் அவதானிக்கத் தக்கதாகும். கடந்த இரு வருடங்களுக்குள் துரித வளர்ச்சியைக் காட்டிய ஒரு சந்தையாக இதுவிளங்குகின்றது. இலங்கைத் தேயிலையின்ஆரோக்கியமான ஏற்றுமதி வளர்ச்சியை இப் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. குறிப்பாக கடந்த காலங்களில் பல்தேசியக் கம்பனிகளிடமிருந்து அபாயகரமான வகையில் தீவிர போட்டி இடம்பெற்று வருவதனுல் நாம் இதனையிட்டுப் பெருமை அடைய முடியாது.

### புதிய பழங்கள்

1979இல் ஏறக்குறைய 5 கோடி டொலர் பெறுமதியான அயன மண்டலப் பழவகைகள் ஐக்கிய அமீர்இராச்சியங்கள், பஹ்ரைன், கடார், சவூதி அரேபியா, குவைட், ஓமான் ஆகிய நாடுகளுக்கு இறக்குமதி செய்யப்பட்டன. இந்தியா, பாகிஸ்தான், லெபனுன் என்பன முன்னணி ஏற்றுமதி நாடுகளாக விளங்கின. எல்லாப் பழ வகைகளிலும் மாம்பழங்களே மிகவும் பிரபல்யம் வாய்ந்த பழங்களாக இருந்தன.

இலங்கை மாங்காய், அன்னுசி, பப்பாசி, கொய்யா போன்ற பழங்களை ஏற்றுமதி செய்த போதிலும், இவற்றின் அளவு மிகவும் குறைவானதாகும். 1979இல் இலங்கையிலிருந்து இந் நாடுகளுக்கு 200,000 டொலர் பெறுமதி வாய்ந்த புதிய பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்

டுள்ளன. இலங்கைப் பழங்களுக்கு இப் பிராந்தியத்தில் கூடிய வாய்ப்புக்கள் உண்டு. எனினும், இக்கைத்தொழில் தீவிர போட்டிக்கு உட்படுவதனுல் பழங்களைத் தெரிதல், தரப்படுத்தல், ஏற்றுமதிக்கு அடைத்தல் போன்றவற்றில் மிகவும் விஞ்ஞான ரீதியான அணுகுமுறை இலங்கை மேற்கொள்ள வேண்டி உள்ளது.

இப் பிராந்தியத்தில் அதிகரித்த கேள்வி உள்ள வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்வது தொடர்பாக இலங்கை அக்கறையுடன் ஆராய்தல் வேண்டும். வளைகுடாப் பிராந்தியத்தில் மாத்திரம் ஒரு மாதத்தில் 50,000 தொன் அளவு நுகரப்படுவதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. நீண்ட வாழைப் பழங்களே மிகப் பிரபல்யம் வாய்ந்தவையாக விளங்குகின்றன; இவை இலத்தீன் அமெரிக்க நாடுகள், ஐவரி கோஸ்ட் என்பவற்றிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன; அண்மையில் பிலிப்பைன்ஸ் இச் சந்தையில் நுழைந்து கொண்டது.

போதிய அளவிலான ஒரு பரிமாணத்தைக் கட்டி எழுப்ப முடிந்தால், வாழைப் பழ ஏற்றுமதி மிகவும் இலாகரமானதாக அமையலாம். ஆகையால், இலங்கை இக் கைத்தொழிலை உரிய சிறப் பியல்புடன் இப் பிராந்தியத்தில் கூடிய கேள்வி உள்ள ரகத்திற்கு முக்கிய இடமளித்து விஞ்ஞான பூர்வமான முறையிலும்,பாரிய அளவிலும் அபிவிருத்தி செய்தல் வேண்டும்.

**மரக்கறிகள்**

1979இல் ஆறு வளைகுடா நாடுகளின் மரக்கறி இறக்குமதி ஏறக்குறைய 13கோடி அமெரிக்க டொலர்களாக இருந்தது. அண்மைக்கால புள்ளிவிபரங்களின் படி துபாயில் புதிய மரக்கறி இறக்குமதி அளவில் 50 சதவீதத்திலும், பெறுமதியில் 40 சதவீதத்திலும்அதிகரித்துள்ளது. 1979இல் இப் பிராந்தியத்திற்குரிய இலங்கையின் மரக்கறி ஏற்றுமதி பத்து இலட்சம் அமெரிக்க டொலராக விருந்தது. இதிலிருந்து இப் பிராந்தியத்திற்குரிய ஏற்றுமதி குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது. எடுத்துக் காட்டாக 1980இல் இலங்கை துபாய்க்கு 11 இலட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான மரக்கறிகளை ஏற்றுமதி செய்திருந்தது. எனினும், இலங்கை, பஹ்ரைன், சவூதி அரேபியா, குவைட் போன்ற சந்தைகளுக்குள் குறிப்பிடத்தக்க வகையில் நுழைதல் வேண்டும்.

அளவு, பெறுமதி என்பனவற்றின் அடிப்படையில்மேலதிக விஸ்தரிப்பிற்குரிய இலங்கையின் வாய்ப்பு மிகச்சிறப்பானதாகும். இக் கைத்தொழிலை ஏற்றுமதி நோக்கிய ஒன்ருக அபிவிருத்தி செய்வதற்கு தொடர்ந்து முயற்சித்தால், மத்திய கிழக்கிற்குரிய மரக்கறி ஏற்றுமதியில் உலகின் முன்னணி நாடாக இலங்கை விளங்குவதற்கு உரிய வாய்ப்பு உண்டு.இது தொடர்பாக நான் கீழ்க் காணும் விதந்துரைகளைச் செய்ய விரும்புகின்றேன்.

1. ஏற்றுமதிக்குரிய மரக்கறி வகைகளை விருத்திசெய்தல். இலங்கையில் மட்டுப்படுத்தப்பட்டமரக்கறி வகைகளே உள்ளன.
2. அதிக கிராக்கியுள்ள ஏற்றுமதிக்குக் கிடைக்கின்ற ரகங்களின் அளவினை விருத்தி செய்தல். கேட்கப்பட்டவாறு உரியஅளவு, மாதிரி, தரம் என்பவற்றுக்கு ஏற்ப மரக்கறிகளை ஏற்றுமதி செய்தல் அவசியமாகும்.
3. விலையில் போட்டியிடக் கூடியதாக இருத்தல். அளவினை அதிகரிப்பதற்கு இது பிரதானமாக உதவும். இலங்கை மரக்கறிகளின் தற்போதைய சராசரி விலையும்,கேழ்வும் 150 டொலராகும்.இதில் விமானக்கூலி ஏறக்குறைய 80% பங்கினை வகிக்கின்றது. இவ்விலையில் ஏனைய மூலங்களிலிருந்து ஆகாய மார்க்கமாக இப் பிரார்ந்தியத்திற்குக் கொண்டு வருகின்ற ஒத்த ரகங்களுடன் இலங்கை போட்டி இடுதல் மிகவும் கடினமாகும், குறிப்பிடத்தக்களவு புதிய மரக்கறிகள் கடல் மார்க்கமாகவும் (உதாரணம்: இந்தியா, பாகிஸ்தான்) தரைமார்க்கமாகவும் எடுத்துவரப்பட்டு மத்திய கிழக்குச் சந்தையில் மலிவான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. (உதாரணம் ஜோர்தான், எகிப்து, சிரியா)

இப் பிராந்தியத்திற்கு கடல் மார்க்கமாக புதிய மரக்கறி வகைகளை ஏற்றுமதி செய்வது தொடர்பாக இலங்கை சிந்தித்தால் காலத்திற்கு முந்தியதாக விருக்கலாம். எனினும், விமானக் கட்டணத்தில் ஏற்றுமதியாளர்களுக்கு மேலதிக சலுகைகளை வழங்குவதன் மூலம் ஊக்குவிப்புக்களைஅளிக்கலாம். இதன் விளைவாக அவர்கள் சந்தையில் சிறப்பாகப் போட்டியிடலாம்.

4, சரியாணநிபுணததுவமும், வசதிகளும் உள்ள நிறுவனங்கள் மாத்திரம் இதில்ஈடுபடுவதனைஉறுதி செய்யும் வகையில் வர்த்தகத்தை ஒழுங்கு செய்தல்.

**மலர்களும், அலங்காரத் தாவரங்களும்**

உயிருள்ள தாவரங்கள், அலங்காரத் தாவரங்கள், மலர்கள் போன்ற பொருள்

களுக்கு இப் பிராந்தியத்தில் அதிக கேள்வி உண்டு. போட்டியும், வாய்ப்பும் மிக்க இத்துறையில் இலங்கை இன்னும் முன்னேற்றம் காண வேண்டி உள்ளது. இது வரையிலும் இலங்கையின் கேள்விகளுக்கு உள்ளூர் வர்த்தகத்துறையிடமிருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளது. எனினும், ஸ்தாபிதமாகியுள்ள வழங்குநர்களுடன் போட்டியிடும்வகையில் இக் கைத்தொழிலை ஒழுங்கு செய்தல் வேண்டும்.

இப் பிராந்தியத்தில் உள்ள எல்லா நாடுகளுக்கும் 90சதவீதமான மலர்களையும், 25சதவீதமானஅலங்காரத்தாவரங்களையும் ஏற்றுமதி செய்வதன் மூலம்நெதர்லாந்து முன்னணி இடத்தைவகிக்கின்றது. சிங்கப்பூர் தாய்லாந்து, லெபனன், ஜோர்தான், எகிப்து, இந்தியா, பாகிஸ்தான் என்பன ஏனைய முன்னணி நாடுகளாகும்.

இச் சந்தை அதிகரித்த போட்டி உடையதாகவும் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டதாகவும் விளங்குவதனால் கீழ்க் காணும் அம்சங்கள் தொடர்பாக உடனடியாகக் கவனம் செலுத்துதல் வேண்டும்:

1. பல்வேறுவகையான தாவரங்களையும் ஏற்றுமதிக்கு அளித்தல் - தற்போது கிடைக்கப் பெறுகின்ற ரகங்களும், அவற்றின் அளவும் போதியதல்ல.
2. இக் கைத்தொழிலுக்குரிய பொதிகட்டுதலை விருத்தி செய்தல் — பொதி கட்டுதல் இவ்வர்த்தகத்தின் வெற்றிக்குரிய மிகப் பிரதான அம்சமாகும்.
3. ஏற்றுமதிக்குரிய தாவரங்கள், மலர்கள் என்பன தொடர்பாக பூரணவிளக்கங்களுடன் கூடிய ஏற்றுமதித் தொகுப்பு ஒன்றினைத் தயாரித்தல். இது மிகவும் அவசியமான ஒன்றாக இருப்பதுடன் கூடிய தரம்மிக்கதாகவும் இருத்தல் வேண்டும்.
4. ஏற்றுமதி செய்யப்படுகின்ற தாவரங்களினதும், மலர்களினதும் தரத்தை மிகக் கவனமாக அவதானித்தல். உரியதேர்ச்சியும் ஏற்றுமதியைப் பொறுப்பேற்கக் கூடிய மூலவளங்களும் உள்ள கம்பனிகளை அல்லது தனிப்பட்டவர்களை மாத்திரமே இதில் ஈடுபட அனுமதி அளித்தல் வேண்டும். ஆகக்குறைந்தது அபிவிருத்திக் கட்டத்திலாவது இது மிக முக்கியம் வாய்ந்ததாகும்.

**தைத்த ஆடைகள்**

ஐக்கிய அரபு இராச்சியங்கள், பஹ்ரைன், கடார், சவூதி அரேபியா, ஓமான், குவைட் ஆகிய நாடுகளின் தைத்த ஆடைகள் இறக்குமதி 1979இல் 77 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்தன. இத்துறையில் நான்கு பிரதான சந்தைத் தொகுதிகள் உள்ளன:

(அ) ஐரோப்பாவிலிருந்து (பிரான்ஸ், ஐ. இ அமெரிக்கா) வருகின்ற தரமும், அலங்காரமும் மிக்க ஆடைகள்; அலங்கார உலகின் முன்னணித்தயாரிப்பாளர்களின் பெயருடன் இது சிறந்துள்ளது.

(ஆ) உயர் ரக சாதாரண விலையிலான ஆடைகள்; இவை ஐ.இ., ஐ.அ ஸ்பெயின், மேற்கு ஜேர்மனி, இத்தாலி, பிலிப்பைன்ஸ், சைப்ரஸ் ஆகிய நாடுகளிலிருந்து வருகின்றன.

(இ) சாதாரண ரக குறைந்த விலையிலான ஆடைகள்: இவை தாய்லாந்து, ஹொங்கொங், சீனு, கொரியா, சைப்ரஸ், பிலிப்பைன்ஸ்' தாய்வான் ஆகிய நாடுகளிலிருந்து வருகின்றன.

(ஈ) குறைந்த ரக, குறைந்த விலையிலான ஆடைகள் இவை தாய்வான், மக்கள்சீனு, ஹொங்கொங், தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து வருகின்றன.

சென்ற சில வருடங்களாக இலங்கை இப் பிராந்தியத்திற்குரிய ஆடை ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் கண்டுள்ளது. இச் சந்தையை மேலும் விஸ்தரிப்பதற்கு வாய்ப்பு உள்ளது. 1979ல் இந் நாடுகளுக்குரிய இலங்கையின் ஆடை ஏற்றுமதி 18இலட்சம அமெரிக்க டொலராக இருந்தது; எமது தயாரிப்புக்களை உரியமுறையில்வெளிப்படுத்தினுல், 1985ன் இறுதியில் இப் பெறுமதி 80 இலட்சம் அமெரிக்க டொலர்களாக அமையலாம். சிறந்த ரக ஆடைகளைப் போட்டியான விலையில் தயாரிக்கக் கூடிய வாய்ப்பு இருப்பதனுல்இலங்கை (இ) சந்தைத் தொகுதிகளில் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

**மத்திய கிழக்கிலிருந்து முதலீடுகளைக் கவருதல்**

உலகில் மிகக் கூடிய தலா வருமானத்தைக் கொண்ட அராபிய வளைகுடா நாடுகளான: ஐக்கிய அமீர் இராச்சியங்கள் சவூதி அரேபியா, குவைட், கடார் என்பன இலங்கையின் சார்பில் மத்திய கிழக்கில் இந்த முதலீட்டு ஊக்குவிப்பு வாய்ப்புக்களை அளிக்கின்றன. மேற்கு உலகிலிருந்து வளர்முக உலகினை நோக்கி அசைவுறுதல் அராபிய முதலீட்டுப் போக்கில் அவதானிக்கக் கூடிய பிரதான அம்சமாகும். சென்ற காலங்களில்அராபிய முதலீடுபெரும்பாலும் மேலைத்தேய பணச் சந்தை, இருப்புச் சந்தைகள், கம்பனிகள், மெய் ஆதனங்

கள் என்பவற்றிற்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், முதலீட்டு வாய்ப்புக்களுக்கு அராபியமுதலீட்டாளர்கள் கிழக்கினை நோக்குதல் அண்மைக்காலப் போக்காக மாறியுள்ளது.

வளர்முக உலகு கிழக்கில் முதலீட்டுத்துறைகளில் கூடுதலான தெரிவினை வழங்குவதுடன், உளவியல் ரீதியாக அரபு முதலீட்டாளர்கள் தாய்நாட்டில் இருக்கின்ற உணர்வுகளைப் பெறுவதுடன், மேலைத்தேசத்தை விடவும் கூடுதலாக மதிக்கப்படுகின்றார்கள் எனவும் கண்டறியப்பட்டுள்ளது. மேற்கு உலகில் சென்ற சில வருடங்களாகப் பெற்ற அனுபவத்துடன், அராபிய முதலீட்டாளர், முதலீட்டுத் தீர்மானங்களில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பதுடன், திட்டத்தின் செயற்பாடு முழுமையாக உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் மாத்திரம் முதலீடு செய்கின்றனர். ஆகையால் எத்தகைய முதலீடுகளையும் தீர்மானிப்பதற்குமுன்னர் அதிகரித்த பாதுகாப்பு அவசியமாகும். இது பின்வருவனவற்றை உள்ளடக்கும்:-

(அ) முதலீட்டின் பாதுகாப்பு- இது நாட்டில் அரசியல் ஸ்திரத்தினாலும் முதலீடுகள் தொடர்பான ஒழுங்குவிதிகளினாலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(ஆ) இலாபத் தன்மை- ஒரு சில வருடங்களில் மூலதனத்தைத் திருப்பிப் பெறக்கூடிய குறுங்கால முயற்சிகளையே மத்திய கிழக்கு முதலீட்டாளர்கள் விரும்புகின்றனர் என அவதானிக்கப்பட்டுள்ளது.

(இ) திட்ட அறிக்கைகளும், செயற்படுத்தல் ஆய்வுகளும்- மத்திய கிழக்கு முதலீட்டாளர்கள் பெருமளவுக்கு தொழில்சார் தன்மைமிக்கவர்களாக மாறி உள்ளனர்; திட்டத்தின் செயற்படுத்தக்கூடிய தன்மை, திட்ட அறிக்கை என்பன இன்றி அவர்கள் முதலீடு பற்றிஆராய்வதில்லை.

இப் பிராந்தியத்தில் தோற்றுவிக்கக் கூடிய முதலீடுகள் பின்வருமாறு:-

### உள்ளூர் தனியார் - வர்த்தகர்கள் என்போரது முதலீடுகள்

நடுத்தர முதலீடுகள் இவ்வகையினுள் அடங்குகின்றன. தமது நாட்டுக்கு வெளியில் வர்த்தகம் சார்ந்த முதலீடுகளைத் தேடுகின்ற அராபிய அல்லது வெளிநாட்டு (இந்தியா, பாகிஸ்தானிய) வர்த்தகர்களாக இம் முதலீட்டாளர்கள் இருக்கலாம். சிறுஉல்லாசப் பிரயாண ஹோட்டல் திட்டங்கள், பதனிடல், தயாரிப்புக் கைத்தொழில்கள் இம் முதலீட்டாளர்களைக்கவரலாம்.

### உள்ளூர்க் கம்பனிகள்- குடும்ப வர்த்தக நிலையங்களின் முதலீடுகள்

மெய் ஆதனம், உல்லாச ஹோட்டல்கள், விவசாயத் திட்டங்கள் போன்றவற்றுடன் தொடர்புடைய விசேட திட்டங்களை இதில் உள்ளடக்கலாம்.

இத்திட்டங்கள் அளவில்பெரியவை எனக் கருதப்பட்டால், இதில் அரசாங்கத்தின் பங்கெடுப்பினை முதலீட்டாளர்கள் விரும்புவர். துபாயில் அல்-குரியர் குரூப் கம்பனியுடன் இந்தியாவின் மகாராஷ்டிர அரசின் 13.5 கோடி அமெரிக்க டொலர் முதலீட்டுத் தீர்மானத்தைஉதாரணமாகக்கூறலாம். ஒரு சீமெந்து அலகு, அலுமீனிய அலகு, ஆடம்பர வீடமைப்புத் திட்டம் என்பவற்றை இம் முதலீடு உள்ளடக்குகின்றது.

### தனியார் முதலீட்டுக் கம்பனிகளிடமிருந்து முதலீடுகள்

பெரும்பாலான வளைகுடா நாடுகளிடம் அவற்றுக்குச் சொந்தமான தனியார் முதலீட்டுக் கம்பனிகள் உள்ளன. முதலீடுகள் இவற்றினூடாகவே வழிப்படுத்தப்படுகின்றன. இக் கம்பனிகளின் மூலதனம் முன்னணி வர்த்தகர்களினதும், ஆட்சி புரிகின்ற குடும்பங்களினதும் பங்குகளைக் கொண்டுள்ளன. வர்த்தக சம்மேளனம் இக் கம்பனிகளின் நடவடிக்கைகளில்பிரதான பங்கு வகிக்கின்றது; அரசாங்கத்தின் முதலீட்டு முயற்சிகளே விருப்பத்திற்குரிய முதலீட்டுத் துறையாக விளங்குகின்றது.

கவர்ச்சி மிக்க ஒரு திட்டம் செயற்படுத்தப்பட்டால், இப் பிராந்தியத்தில் வேலைசெய்கின்ற இலங்கையர்களிடமிருந்து முதலீட்டினைத் தோற்றுவிக்கலாம் என்பது உணரப்பட்டுள்ளது. வீடமைப்பு சாத்தியம் மிக்க ஒரு துறையாகும். இலங்கையில் மேலும், பல அபிவிருத்தித் திட்டங்களில் பங்கெடுக்கக்கூடிய நிதி நிலைமையைக் கொண்ட இலங்கையர்களும் உள்ளனர். வெளிநாட்டு இந்தியர்களிடமிருந்து முதலீடுகளைக் கவருவதற்கு இந்தியா ஏற்கனவே ஒரு திட்டத்தை ஆரம்பித்துள்ளது. துபாயில்ஸ்தாபிக்கப்பட்டுள்ள இந்திய முதலீட்டுக் கம்பனி என்னும் ஒரு தனியார் கம்பனியின் ஊடாக இம் முதலீடுகள் வழிப்படுத்தப்படுகின்றன.

மத்திய கிழக்கு வர்த்தகத் தொடர்புகளைப்போன்று முதலீட்டுக் துறையிலும் கிடைக்கக்கூடிய வாய்ப்புகளை இலங்கை இன்னும் முழுமையாகப் பயன்படுத்தவில்லை. இலங்கை அரபு உலகின் ஒரு நெருங்கிய நட்பு நாடாக விளங்குவதுடன், அரசியல் ரீதியில் பல வருடங்களாக அராபிய நோக்குடன் இணைந்து நிற்கின்றது. இவ்வாறிருந்த போதிலும் இப் பலத்தின் அடிப்படையில் அரபு உலகுடன் நெருங்கிய பொருளாதார ஒத்துழைப்பினைக் கட்டியெழுப்ப இயலாத நிலையில் உள்ளது.

(மிகுதி அடுத்த இதழில்)

# நெருக்கடியில் சிக்கியுள்ள மூன்றும் உலகம்

## தேட வேண்டிய பரிகாரங்கள் யாவை?

- இஸ்மாயில் ஸாப்ரி அப்துல்லா

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இதை விட அதிக அர்த்த புஷ்டியுள்ள விஷயம் என்னவென்றால், கைத்தொழில் மயமான நாடுகளிலுள்ள வாழ்க்கைத் தரத்துக்கும் மூன்றும் உலகிலுள்ள வாழ்க்கைத் தரத்துக்கும் இடையேயுள்ள இடைவெளி விரிவடைந்து வருவதாகும்.

கைத்தொழில் மயமான நாடுகளிலுள்ள நுகர்வோரைக் கவருவதற்காகவே தயாரிக்கப்பட்ட "புதுமையான" பொருள்கள், குறிப்பாக நுகர்வோருக்கான நெடுவாழ்வுப் பொருள்கள் மூன்றும் உலகிலுள்ள ஒரு மிகச் சிறு தொகையினர் மட்டுமே, சமூக உயரிகள் மட்டுமே வாங்கக்கூடிய விலைகளில் விற்கப்படுகின்றன. மூன்றும் உலகச் சந்தைகள் எவ்வாறு வீழ்ச்சியடைந்துள்ளனவென்பதை அறிந்து கொள்ள உலக வர்த்தகப் புள்ளி விவரங்களை ஒரு முறை பார்த்தாலே போதும். 1960 ம் ஆண்டில் இந்தச் சந்தைகள் கைத்தொழில்மயமான நாடுகளால் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களில் 24.9 சதவிகிதத்தை ஏற்றன. 1970 ஆம் ஆண்டளவில் இப்பங்கு 18.7 சதவிகிதத்துக்கு வீழ்ச்சியடைந்துவிட்டது. எண்ணெய் விலைகள் நாலு மடங்கு உயர்ந்ததற்குப்பின் ஒபெக் நாடுகள் செய்த சகல கொள்வனவுகளுக்குப் பிறகுங் கூட, அது 1977 ம் ஆண்டில் 23.7 சதவிகிதத்துக்கு மட்டுமே அதிகரித்துள்ளது. அஃதாவது 1960 ம் வருடத் தொகைக்கு இன்னும் கீழேயே உள்ளது. (1979 ம் ஆண்டுக்குரிய தொகை 21.9 சதவிகிதம் என மதிப்பிடப்படுகிறது.) இராஜதானி நாடுகள் ஏற்றுமதி செய்த பொருள்களில் பெரும் பகுதியைச் சாம்ராஜ்யங்கள் உட்கிரகித்துக் கொண்ட காலம் மலையேறி விட்டது. மேலும், ஏற்றுமதித் திசைவழிப்படுத்தப்பட்ட கைத்தொழில்களைப் பெருக்க மூன்றும் உலக நாடுகளுக்கு முன்பு ஊக்கமளித்த கைத்தொழில்மயமான நாடுகள் இப்பொழுது மூன்றும் உலக நாடுகளிலிருந்து வரும் உற்பத்திப் பொருள்களுக்கெதிராக நீட்டும் காப்புவரி முறையின் விளைவாக, இதே கைத்தொழில்களுக்குத் தேவைப்படும் மூலதனப் பொருள்களுக்கான கோரிக்கை குறைந்து விடும்.

இதற்கிடையில், மூன்றும் உலகம் நெருக்கடி குறித்தோ அல்லது அது ஆழமாகக் கூடிய சாத்தியக்கூறு குறித்தோ அலட்சியமாக இருந்து வர முடியாது. உலகம் தற்போதுள்ள நிலையில், தேசியப் பொருளாதாரங்கள் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன என்பது மறுக்க முடியாத ஓர் மையாகும். மூன்றும் உலக நாடுகள் ஓர் உலகலாவிய முறையின் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு பாகமாக அமைந்துள்ளன: இம்முறையை அந்நாடுகளால் கட்டுப்படுத்த முடியாது: உலகப் பொருளாதாரத்தை ஆளும் ஒரு சிறுபான்மைக் குழு (ஏழு கைத்தொழில் வலுமிக்க நாடுகளின் தலைவர்கள் காலத்துக்குக் காலம் தங்களுடைய உச்சி மகாநாடுகளில் கலந்தாலோசனை புரிகின்றனர்.) எடுக்கும் முடிவுகளின் விளைவுகளால் அவை வருந்துகின்றன. மையத்திலுள்ள தலைவர்கள் நடவடிக்கை எடுத்தாலும் நடவடிக்கை எடுக்காமல் செயலற்றிருந்தாலும், அதன் எதிரொலிகள் சுற்றெல்லையில் கேட்காமலிருக்கத் தவறமாட்டா.

விவகாரங்களின் இந்நிலையைத் திருஷ்டாந்தப்படுத்துவதற்கு, சர்வதேச நாணய முறையில் இப்பொழுது நிலவிக் கொண்டிருக்கும் குழப்பத்தின் விளைவாகப் பிரதான நிதி மையங்களில் நாணய முறை நொறுங்கித் தவிடு பொடியாகும் பேராபத்தொன்று நிகழ்வதாக ஒரு கணம் நினைத்துக் கொள்வோம். இது மூன்றும் உலகின் மீது என்ன விளைவை ஏற்படுத்தும்? வெளிநாடுகளிலிருந்து உட்பாய்ந்த கொடுகடன்களைக் கொண்டு தனது துரிதமான விரிவாக்க முயற்சிகளுக்குத் தேவையான பணத்தை வழங்கி வந்த ஒரு நாடு (அந்நிய வங்கிகளுக்கு ஏறக்குறைய 5000 கோடி அமெரிக்க டொலர் கடன் பாக்கி தரவேண்டியிருக்கும் பிரேஸில் நாட்டைப் போல) இந்த நிதியூற்று வற்றிவிட்டதைத் திடீரெனக் காணும். இவ்விதமாக அந்நாட்டின் வளர்ச்சி திடுமென நின்றுவிடும். இதன் மறு கோடியில், பெரும் உபரி மூலதனத்தைக்கொண்ட ஒரு நாட

சவூதி அரேபியாவைப் போல), அந்நிய நாணயப் பெறுமதிகளின் திடீர் வீழ்ச்சி, குறித்த காலத்துக்குக் கடனின் கொடுப்பனவுகளை நிறுத்திவைக்கும் சட்ட அதிகாரம் அல்லது சகல கொடுப்பனவுகளையும் ஏறக்குறையத் தற்காலிகமாக முடக்கி வைத்தல் போன்ற அவசரகால நடவடிக்கைகள் ஆகியவற்றின் கூட்டுத் தாக்கத்தினால் தனது உபரி மூலதனம் மாயமாக மறைந்து விட்டதைக் காணும். இத்தகைய ஒரு தீவிரமான உதாரணத்தை எடுத்துக் கொள்ளாவிட்டாலும் கூட, மையத்தில் தொடர்ந்து இருந்து வரும் தேக்க நிலை மூன்றாம் உலகிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களின் (மூலப் பொருள்கள் மட்டுமன்றிப் பெருமளவில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களும் கூட) அளவையும் விலையையும் பாதித்துவருவதைத் தவிர்க்க முடியாது என்பது தெளிவு.

பிரச்சினையின் இன்னோர் அம்சத்தைக் கவனிப்போம். மைய நாடுகளில் தற்காலிக வியாபார ஒடுக்கங்கள் ஏற்பட்டால், காப்பு வரிமுறையை அமுலுக்கு கொண்டுவருதல், இந்த நாடுகள் "ஜீவாதாரமான நலன்களைக்" காணும் பிரதேசங்களில் தலையிடும் நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற வலதுசாரி அரசியல் தெரிவுரிமைகள் பல மடைந்துவருவதுண்டெனச் சரித்திரம் எங்களுக்குப் போதித்துள்ளது. இச்சந்தர்ப்பத்தில், ஒன்றில் மாற்றீடு செய்யமுடியாதெனக் கருதப்படும் உள்ளீடுகளை (உதாரணமாக எண்ணெய்) மூன்றாம் உலக நாடுகள் மையத்துக்கு வழங்குவதன் காரணமாகவோ அல்லது மையம் அந் நாடுகளில் பெரும் முதலீடுகளை கொண்டுள்ளதன் காரணமாகவோ மையத்தை மிகப்பெருமளவுக்குச் சார்ந்திருக்கும் மூன்றாம் உலக நாடுகளே இதில் மிகவும் நேரடியான சம்பந்தங் கொண்டுள்ளதுடன் குறிப்பாக ஊறு படத்தக்க நிலையிலும் உள்ளன. எனினும், சர்வதேச வர்த்தக இணைப்புகளைக் கொண்ட தற்போதைய முறை நீடிக்கும் வரை, நெருக்கடி வெடித்துச் சிதறுவதன் தீயவிளைவுகளிலிருந்து எந்த நாடும் முற்றாகப் பாதுகாப்புப்பெற முடியாதென்பதும் நிச்சயமாகும். ஆதலால், எல்லாம் ஊழ்வினைப்படியே நடக்கின்றன என்ற மனோபாவத்தை மேற்கொள்வது மூன்றாம் உலக நாடுகளின் நலனுக்கு உகந்ததாயிராதென்பது விளங்கும்.

துரதிர்ஷ்டவசமாக, மறுபக்கத்தில் இதற்குப் பதிலாக அமையும் ஒரு மனோபாவம் நிலவுகிறதென்று கூறுவது உண்மையாயிருக்காது. பரஸ்பர சார்பு என்பதில் மற்றும் விஷயங்களுடன் உலகப்பொருளாதாரத்தைப் பாதிக்கும் முடிவுகளில் தனது சொந்தக் கருத்தை வெளியிடும் அதிகாரம் மூன்றாம் உலகுக்கு இருக்க வேண்டும் என்பதும் அடங்கியுள்ளதென்பதைத் மேற்கு இன்னும் உணரத்தவறுகிறது. மேற்கத்திய தலைவர்களிடையே நிலவும் கருத்தென்னவென்றால், தங்கள் சொந்த வழி முறைகளைக் கொண்டும் மூன்றாம் உலகுக்குத் தங்களுடைய கடப்பாடுகளை ஆகக் குறைந்த அளவுக்குக் குறைப்பதன் மூலமும் நெருக்கடியைத் தங்களால் வெல்ல முடிகிறது என்பதாகும். உலக வங்கியிலிருந்து பல சமூக ஜனநாயகத் தலைவர்கள் வரை மற்றொரு கருத்தை வெளியிடும் குழுவொன்றும் இருந்து வருகிறதென்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இவர்களுடைய அணுகுமுறை பிராண்ட் கமிஷனின் அறிக்கைக்குள் சேர்க்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் ஆதரிப்பதென்னவென்றால், மார்ஷல் திட்டப் உலகளாவிய முறையில் மீண்டும் அமுல் செய்யப்படவேண்டும் என்பதாகும்.

இத்திட்டம் ஒரு வெற்றிகாமான பரிசோதனையாகுமென, இவர்கள் கருதுகின்றனர். அபிவிருத்தி உதவியின் உருவத்தில் மூன்றாம் உலகுக்குப் பிரமாண்டமான அளவில் கடன் வசதிகளை மாற்ற வேண்டுமென்பதே இவர்களின் கருத்து. இவ்வுதவியின் பெறுமதி ஆண்டொன்றுக்கு 1200 கோடி அமெரிக்கா டொலராக இருக்க வேண்டுமென றோபர்ட் மக்நமாரா கூறினார். கிரியாம்சையில் இக்கொடுகடன்கள் யாவும் இவற்றை வழங்கிய நாடுகளிலிருந்து மூலதனப்பொருள்களையும் தொழில்நுட்ப உத்திகளையும் வாங்குவதன் மூலம் அந்நாடுகளுக்கே மீண்டும் போய்ச் சேர்ந்து விடுமென்று அனுபவத்திலிருந்து ஒருவர் முன்கூட்டியே தெரிவித்துவிட முடியும். கடன்வசதிகளின் குறித்த இடமாற்றங்கள் பல வருடங்கள் வரை நீடிக்குமாயின், இந்த அதிகரித்த ஏற்றுமதிகள் முறையே கைத்தொழில் நாடுகளின் பொருளாதாரங்களை ஊக்குவிக்குமென்பது திண்ணம். அக்காலத்திறகுள், இவ்வுதவியின் பயனாக மூன்றாம் உலகில் சாதிக்கப்படும் பொருளாதார முன்னேற்றம் மேற்கத்திய உற்பத்திப் பொருள்களுக்கான அதன் (மூன்றாம் உலகின்) கோரிக்கை

யை அதிகரித்துவிடும். இவ்விதமாக மூன்றும் உலகு மூலதனப் பொருள்களையும் சேவைகளையும் இறக்குமதி செய்யும் ஆற்றலைப் பெற்றதும், நுகர்வோருக்கான நெடு வாழ்வுப்பொருள்களைப் போதிய அளவில் உட்கிரகிக்க முடியாதிருந்த அதன் இயலாமையிலிருந்து எழுந்த தடை தந்திரமாக நீக்கப்பட்டிருக்கும். அத்துடன், மூன்றும் உலகம் கைத்தொழிமயமான நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை முடுக்கிவிடும் ஓர் இயந்திரமுமாகியிருக்கும். இத்தகைய ஒரு கொள்கையின் நிபந்தனைகளையும் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புகளையும் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல. அதை வகுத்தவர்களுக்குப் புதிய மாற்றமொன்றைச் செய்வதற்கான ஊக்கமும் உத்வேகமும் இல்லாமலில்லை. ஆனால் பொதுஜன அபிப்பிராயம் ஒரு புறம் இருக்கட்டும். மேற்கத்திய அரசாங்கங்கள் அதை இன்னும் ஒப்புக் கொள்ளவில்லை. இத்தகைய ஒரு கொள்கையை அமுல் நடத்த மேற்கத்திய நாடுகள் என்றுவதொருநாள் முடிவு செய்யுமானால், அவற்றின் பொருளாதாரங்கள் கவனிக்கத்தக்கவாறு திட்டமான பயனைப்பெறுமென்பதில் சந்தேகமில்லை. எனினும், பிராண்ட் கமிஷனின் அறிக்கை பற்றி "பேரசுகள் ஏழு" தெரிவித்துள்ள கருத்தை முன்னிட்டு அந்த நாள் வெகு தொலைவிலிருப்பதாகவே தோன்றுகிறது.

எங்களைப் பொறுத்தவரை, மேற்கில் ஏற்பட்டுள்ள நெருக்கடி முழு உலகப் பொருளாதார ஒழுங்கிலும் ஏற்பட்டுள்ள ஒரு நெருக்கடியாகவே இருக்கிறது. உலகப்பொருளாதாரத்தின் எல்லா மூன்று மூலப் பகுதிகளிலும் கிட்டத்தட்ட ஒரே சமயத்தில் கட்டுக் கோப்பிலும் கருதுகோளிலும் மாற்றங்களைச் செய்வதன் மூலம் மட்டுமே நெருக்கடியை வெல்ல முடியும் — உலகப் பொருளாதாரத்தில் அடங்கியுள்ள மூன்று பாகங்களாவன :— (1) பொருளாதார ஒத்துழைப்பு– அபிவிருத்திக்கான ஸ்தாபனத்தைச் சேர்ந்த முதலாளித்துவ நாடுகள் (2) மூன்றும் உலகத்தைச் சேர்ந்த நாடுகள் (இந்நாடுகள் ஐ.நா. வட்டாரங்களில் "77 குழு" என்று அறியப்பட்டபோதிலும், உண்மையில் இக்குழுவில் ஏறக்குறைய 120 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.) (3) சோஷலிஸ்ட் நாடுகள் (கோமிகோன் ஸ்தாபனத்தைச் சேர்ந்த நாடுகளும் சீனாவும்.)

அசுத்தமானதைக் குறைக்கக்கூடியதும், எரிசக்தியும் இயற்கைவளங்களும் வீணாக்கப்படுவதைக் குறைக்கக் கூடியதும், வாழ்க்கையின் தரச்சிறப்பை விருத்தி செய்யக்கூடியதுமான வளர்ச்சி முறைகளைக் கண்டு பிடிப்பதற்காக, கைத்தொழில்மயமான நாடுகள் தங்களுடைய வளர்ச்சியின் தன்மையையும் உள்ளடக்கத்தையும் மீளாய்வு செய்ய வேண்டும். சூழலையும் பொருளல்லாத தேவைகளையும் பற்றி நடைபெறும் ஆலோசனைகளின் பயனாகச் சில குறிப்பிட்ட எழுத்தாளர்கள் ஏற்கனவே உபதேசித்துள்ளவாறு ஒரு புதிய வளர்ச்சி ஏற்படுவது மட்டுமன்றி அவ்வளர்ச்சி இயந்திரசாதனங்களைக் குறைப்பதாகவும், வாழ்க்கை முறையில் அதிக மனுஷத்தன்மையை உண்டாக்குவதாகவும் இருக்க வேண்டும். உல்லாசக் கொண்டாட்டங்களுக்கு ஊக்கமூட்டும் வகையில் நகர நிர்மாணத்துக்குத் திட்டமிடல், அறிவைச் சுதந்திரமாகப் பெறுவதற்கும் வயதான காலத்துக்கேற்ற நடவடிக்கைகளுக்காகவும், ஓய்வு நேரத்துக்கான தேவைகளைப் பிரதிபலிக்கும் விதத்தில் நேரங்களை மறு சீரமைப்புச் செய்தல்; உலகெங்குமுள்ள மக்களெல்லோருக்கும் ஒரு மேலான வாழ்க்கைமுறையைத் தேடுவதற்கு இவை பல வழிகளாகும். மக்கள் தங்களுடைய சகோதர மக்களுடன் கொள்ளும் தொடர்பைவிட அதிகநெருங்கிய தொடர்பை இயந்திரங்களுடன் கொள்ளும் "பொருளுலகம்" கொந்தளிப்புகள் இல்லாததும், சுய நிறைவு, உல்லாசக் கொண்டாட்டங்கள் ஆகிய இரு அடிப்படை மனிதத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு ஊக்கமளிக்கக்கூடியதுமான "மக்கள் உலகம்" ஒன்றுக்கு வழிவிட வேண்டும்.

மனோபாவங்களிலும் கட்டுக்கோப்புக்களிலும் இத்தகைய ஒரு மாற்றம் ஏற்பட்டால், மனுக்குலத்திலே பரம்பரை உரிமைகள் பறிக்கப்பட்டவர்களாயுள்ள பெரும்பாலோரின் போராட்டங்களையும் நம்பிக்கைகளையும் நன்கு புரிந்து கொள்ள ஏதுவாயிருக்கும். அப்பொழுது மூன்றும் உலகம் சர்வதேச சமூகத்தில் முழு வளர்ச்சியடைந்த ஒரு பங்காளியாக அங்கீகரிக்கப்படும்; அதன் பின் வடக்கும் தெற்குக்குமிடையே ஓர் உண்மையான உரையாடல் ஆரம்பமாகி, உலக விவகாரங்களைக் கூட்டாக நிர்வகிக்கும் ஓர் ஏற்பாட்டுக்கு வழிகோலலாம். வடக்கு தெற்கு ஆகிய இருதிசைகளிலுமுள்ள நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் வளர்ந்து வரும் தொகை

இத்தகைய ஒரு சம்பாஷணையை முன்னெப்போதும் விட இப்பொழுது அவசிய மாக்குகிறது.

மூன்றும் உலகத்தைப் பொறுத்த வரை, மேற்கத்திய முதலாளித்துவத்தின் அபிவிருத்தியினால் பெறப்பட்ட வரலாற்று அனுபவத்தை மீண்டும் பெறும் எண்ணத்தை அது முடிவாகக் கைவிட்டு விட வேண்டும். இத்தகைய ஒரு பேராவல் ஒரு பிரமையேயாகும்; சரித்திரம் "மீள் சிருஷ்டிகளுக்குச்" சந்தர்ப்பங்களை அளிப்பதில்லை. மேற்கு அபிவிருத்தியடைந்த வரலாற்று நிலைமைகளை எவராலும் மீண்டும் சிருஷ்டிக்க முடியாது. இதை விளங்கிக் கொள்ள வேண்டுமானால், அந்த நிகழ்வுப் போக்கில் காலனி ஆதிக்கவாதம் (குடியேற்ற நாட்டு ஆதிக்கமுறை) ஆற்றிய பங்கை ஒருவர் ஞாபகப் படுத்திக் கொண்டாலே போதும்; அல்லது மேற்கத்திய பாணியில் அமைந்த கைத்தொழில்கள் உலகெங்கும் பரவினால் சூழல் மீது ஏற்படக் கூடிய தாக்கத்தை மட்டும் ஒருவர் கருத்திற் கொண்டால் போதும். மேலும், வெகுவாக இச்சிக்கப்படும் மேற்கத்திய மாதிரி குறைகளற்ற ஒன்றல்ல; அதன் மனித சாதனைகள் தர்க்கத்துக்குரியன. மேற்கத்திய மனோ பாவங்களையும் கட்டுக்கோப்புகளையும் பின்பற்றுவதில், அவற்றை அப்படியே குருட்டுத்தனமாகப் பின்பற்றுவதில் எந்தச் சீர் சிறப்புமில்லையென்பதை எங்களுடைய நாடுகள் உணரவேண்டும்.

புதுமையைப் புகுத்துவதும்; எங்களுடைய கலாசாரத் தனித்துவத்திலிருந்து விலகி விடாது நவீனப்படுத்துவதும்; மேற்கத்திய அனுபவவத்திலிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களிலிருந்து நன்மையடைவதும்; ஆக்கபூர்வமானதை மேற்கொண்டு எதிர்மறையானதைத் தவிர்ப்பதும்; எங்களுடைய சொந்தப் பங்களிப்புகளைக் கொண்டு மனித அனுபவத்துக்கு வளமூட்டுவதும் இப்பொழுது எங்களுடைய பொறுப்பு. தனிப்பட்ட நாடுகள் என்ற முறையிலும், நாடுகளின் குழுக்கள் என்ற முறையிலும், மூன்றும் உலகம் முழுவதன் மட்டத்திலும் தற்சார்புள்ளவர்களாயிருக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும். இவ்விதமாக நாம் பணக்கார நாடுகளுக்குப் பேச்சுவார்த்தைகளில் நியாய வலுவுள்ள ஒரு பங்காளியாவதுடன் மட்டுமன்றி, ஒரு தவிர்க்க முடியாத பங்காளியுமாகி விடுவோம்.

சோஷலிஸ்ட் நாடுகள் தங்களுடைய ஏகாந்த வாசத்திலிருந்து மென் மேலும் வெளிப்பட்டுவருகின்றன. ஆதலால், சர்வதேச சமூகத்தின் விவகாரங்களில் அவை தங்களுடைய முழுப்பொறுப்புகளையும் ஏற்க வேண்டுமென்பதே இதன் பொருள். இந்த நெருக்கடி முதலாளித்துவத்துக்கு ஏற்பட்டுள்ள ஒரு நெருக்கடி என்பதற்கு நல்ல காரணம் இருக்கலாம் எனினும், சோஷலிஸ்ட் நாடுகளின் வெளிநாட்டு வர்த்தகம் வளர்ந்து வருவதன் வாயிலாகவும் அது அவற்றின் எரிசக்தி —மூலப்பொருள்கள் வழங்கலில்லை எழக் கூடியபேரமளிகளாலுள் தேரிடக்கூடிய விளைவுகளால் அவை பாதிக்கப் படாதிருக்க முடியாது.

எனவே, நெருக்கடி ஆழமாகக் கூடிய சாத்தியக்கூறு, புதிய சர்வதேச ஒழுங்கு பற்றிய விவாதத்தை ஒரு பக்கப் பிரச்சினைக்குள் திருப்பி விடுவதை விட அவ்விவாதத்துக்குப் புத்துயிரையும் புதிய பரிமாணங்களையும் அளிக்க வேண்டும். முழு உலகப் பொருளாதாரத்தையும் பாதிக்கப்போகும் ஒரு நெருக்கடியின் முன்னால், முழுச் சர்வதேச சமூகமும் கூட்டாக நடவடிக்கை எடுத்துக் கொண்டால் மட்டுமே வெற்றியை எதிர்பார்க்கலாம். சர்வதேச உறவுகளின் பொருளாதார உறவுகளும் ஏனைய உறவுகளும் கட்டுக் கோப்பை மாற்றியமைப்பதும், அதன் விளைவாகப் பல்வேறு நாடுளது குழுக்களின் தேசியப் பொருளாதாரங்களில் செய்யவேண்டிய சீராக்கங்களை செய்யவதும் தான் இப்போதைய தேவையேயன்றி வேறென்றுமல்ல.

இத்தகையஓர் அணுகுமுறை பொதுஜன அபிப்பிராயத்தினாலும் முடிவு எடுப்பவர்களாலும் ஆதரிக்கப்பட்டாததன் காரணங்கள் என்ன? தற்போதுள்ள கட்டுக் கோபபுகளின் சில அம்சங்களிலும், உறபத்தி உறவுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் ஏற்படப் போகும் மாற்றங்களையும் சற்றும் உணராதிருக்கும் மனோ பாவங்களிலும் தான் அக்காரணங்களைக் காண வேண்டும். கட்டுக்கோப்புகளைப் பொறுத்தவரை, அவற்றில் பாகமேற்று நடிககும் எல்லா "நடிகர்களை"யும் இந்த நெருக்கடி மோசமாகப் பாதித்துவிடவில்லை. இந்த நடிகர்களில் ஒருமுழுக் கோஷ்டியுள்ளது —மிக முக்கியமான கோஷடி அது— இக் கோஷ்டி அதிலிருந்து தொடர்ந்து இலாபமடைந்துவருகிறது. இக் கோஷ்டி பல் தேசிய கூட்டுத்தாபனங்களாகும். இந்தப் பல தேசியக் கூட்டுத்தாபனங்கள் உலகெங்குமுள்ள டஸன்

கணக்கான நாடுகளில் தொழிற்பட்டு வருகின்றன. தேசிய எல்லைகளைக் கடந்து அவை அமைந்திருக்கும் தன்மை—இதனால் எந்த அரசாங்கமும் தனது பிரதேசத்தில் தலைமைக்காரியாலயத்தை அமைத்துக்கொண்டுள்ள இத்தகைய கம்பெனிகளின் நடவடிக்கைகளைமேற்பார்வையிடுவதில்லை — மூலதனச் சந்தைகளுக்குள் எவ்வித கட்டுப்பாடுமின்றிப்பிரவேசிக்க் அவற்றுக்குள்ள உரிமையிலிருந்து எழும் வளைந்து கொடுக்கும் தன்மை ஆகிய காரணிகள், துரிதமான பணவீக்ககம், வேலையில்லாத் திண்டாட்டம், ஓர் உற்பத்திப் பொருளின் நுகர்வில் அல்லது பல உற்பத்திப் பொருள்களின் நுகர்வில ஏற்படும் வீழ்ச்சி, அல்லது ஒரு குறிப்பிட்ட தேசியப்பொருளாதாரத்தில் ஏற்பட்டு வரும் வீழ்ச்சி போன்ற இத்தகைய சம்பவங்களையனுசரித்து நடந்து கொள்ள இந்தக் "கதம்பத் திரட்டு"களுக்கு உதவியாயிருக்கின்றன. அவற்றின் பொருளாதார வல்லமையை (அவை உலக வர்த்தகத்தில் 40 சதவிகிதத்தைக் கட்டுப்படுத்துகின்றன), அவற்றின் அரசியல் அதிகாரத்தை (அரசாங்கங்களைக் கவிழ்ப்பதிலும் கூட அவற்றில் சில வெற்றி பெற்றுள்ளன) செய்தித் தொடர்புச் சாதனங்கள்மீது அவற்றிற்குள்ள பெருஞ்செல்வாக்கை கவனிக்கும்போது, தங்களுடைய க்ருத்துக்களை மேலோங்கச் செய்வதற்கான வழிகளை அவை நன்கறிந்துள்ளன வென்பதைத் தெளிவாகக் கண்டு கொள்ளலாம். உலகப் பொருளாதாரக் கட்டுக் கோப்பை மாற்றியமைக்கும் நோக்கத்தைக் கொண்ட எந்தக் கூட்டு நடவடிக்கையும் அவற்றின் நலன்களுக்கு ஒரு பலத்த பயமுறுத்தலாக அமைகின்றது என்பது வெளிப்படை. ஓர் உதாரணத்தை இங்குகவனிப்போம். நாடுகளுக்கிடையே செய்யப்படும் ஒப்பந்தங்கள் வாயிலாக வழங்கல்களையும் விலைகளையும் ஒழுங்குபடுத்தி, எண்ணெய் உற்பத்தியாளர்களுக்கும் இறக்குமதியாளர்களுக்குமிடையில் ஓர் உலகளாவிய ஒப்பந்தம் முடிக்கப்படுமானால், பெரிய எண்ணெய்க் கம்பெனிகள் ஈட்டிவரும் கற்பனைக் கெட்டாத இலாபங்கள் அடியோடு பாதிக்கப்படும்.

மனோபாவங்களைப்பொறுத்த வரை, கடந்த முப்பது ஆண்டுகளின் மலர்வு ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளிலே நாகரிகத்தில் ஓர் உண்மையான நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதென்ற உண்மையை எதிர்நோக்க வேண்டும். எல்லாற்றிற்கும் முதலாவதாக, சில கருதுகோள்களைக் கைவிட வேண்டியிருக்கிறது. இதற்கோர் உதாரணம் "இயற்கை" வளங்களைப் பற்றிய எண்ணமாகும். இந்த வளங்கள் வரையறுக்கப்படாதவை என்பதும், சில சந்தர்ப்பங்களில் இவை அநேகமாகக் கட்டணமின்றி இலவசமாகக் கிடைக்கின்றன என்பதும் அந்த எண்ணத்தில் அடங்கியுள்ளது. எனினும், இன்று சுத்தமான காற்றுக்கும் சுத்தமான நீருக்கும் கூட காசு கொடுக்க வேண்டியிருக்கிறதென்பதை நாம் அறிவோம். எங்களுடைய பொருளாதார ஆராய்வுகளில் சூழலைச் சேர்ப்பதனால் இக்கருத்தையும் அதிலிருந்து பெறப்படும் வெளியம்சங்கள் அளவுத் திட்டச் சிக்கனங்கள் போன்ற அநுமானங்களையும் நாம் மாற்றவேண்டியிருக்கிறது. இயற்கை மீது ஆதிக்கம் செலுத்தல் அல்லது இயற்கையை வெல்தல் என்பது மேற்கத்திய கருத்தியலில் எவ்வளவோ நடுநாயகமாக விளங்கும் ஒரு கருத்தாகும். மிகவும் பொதுப்படையாகக் கூறுவதென்றால், இந்தக் கருத்து, மனித குலத்துக்கும் இயற்கைக்குமிடையேஒன்றிய வாழ்வு எனும் கருத்துக்கு வழிவிடவேண்டும். ஏனென்றால் நாம் இயற்கையுடன் ஒன்றிணைந்த ஒரு பாகமாக அமைந்திருக்கிறோம். இதேபோல, "தக்கவர் தங்கி நிற்றல்" என்ற கருத்தால் கூர்மையாக்கப்பட்டுள்ள தனியன் வாதமும் கூட்டுத் தேவைகளின் காரணத்தினால் தணிக்கப்பட வேண்டும். மூன்றாவது, திறமை பற்றிய கருத்து உண்மையில் தனியாக இலாபத்தை ஆகக் கூடிய அளவு உயர்த்த வேண்டும் என்பதாக ஒடுக்கப்பட்டுள்ளது. முழுச் சமுதாயத்தின் நீண்டகாலத் தேவைகளையும், எதிர்கால சந்ததிகளுடன் ஒருமைப்பாடு கொள்தலையும், மனித குலத்தின் பொருளல்லாத தேவைகளையும் முன்னிட்டு, இது மாற்றப்பட வேண்டும். இன்னொரு மட்டத்தில், மேற்கத்திய நாகரிகத்தின் மேலாதிக்கம் (அதன் மிக விரிவான பொருளில், ஐரோப்பாவிலுள்ள சோஷலிஸ்ட் நாடுகள் உட்பட) யலையேறி விட்டதென்பதும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். நாளைய உலகம் பல நாகரிகங்கள், (ஆங்கிலோ—ஸக்ஸன் சமூகவியலாளரும் மனிதவியலாளரும் கூறுவது போல. பல கலாசாரங்கள்) கூடவிருந்து வாழும் ஒன்றாக இருக்கும்.

மூன்றாம் உலகத்திலிருந்து தற்போதைய நெருக்கடியை அவதானிக்கையில், அது கட்டுக் கோப்பிலும் உலகளாவிய ரீதியிலும் ஏற்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். எனவே, இதை வெல்வதற்குப் பலம் படைத்த கைத்தொழில் மயமான நாடுகள் கைக் கொண்டுள்ள வழிவகைகள் வெற்றிபெறுமா வெனச் சந்தேகிக்கின்றோம். தற்போதைய நிலைமையில், வரலாற்று முறையான இயனொக்கும் எதிர்கால நிலைமைகளைப் பற்றிய கூரிய உணர்வும் அத்தியாவசியமென்று நாம் கருதுகிறோம். வடக்கு, தெற்கு ஆகிய இரண்டிலும் இவ்விரு குணாதிசயங்களும் இல்லாதிருப்பது தான் எங்களுக்குமிருந்த மனக்கலக்கத்தை உண்டாக்குகிறது.

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# பொருளியல் நோக்கு

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

பிரதி விலை ரூ. 3-50

வருட சந்தா ரூ. 40-00

## மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதி வெளியீடு

Phone 23631 ... Book Depot Jaffna

283, கே. சிறில் சீ. பெரேரா மாவத்தை கொழும்பு-13ல் உள்ள இன்டர் நெஸனல் கிரபிக் மெகசின் லிமிடட் அச்சுயந்திரசாலையில் அச்சிடப்பட்டது.